# கட்டுரைக் களஞ்சியம்.



361

1891
அன்னை வள்ளியம்மை வள்ளல்.

இந்நூலாசிரியர்:
எம். எஸ். பூர்ணலிங்கம்பிள்ளை, பி. ஏ., எல். டி.
ஆங்கிலப்பேராசிரியர்.

'தாம்இன் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்' — திருக்குறள்.

முன்னீர்ப்பள்ளம்: சுவடிச்சாலையரால்

திருநெல்வேலி
மீரானியா பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

அணா 12] 1930. [தபாற்கூலிவேறு.

Inscribed to the Sacred Memory of

my Most Beloved Mother

Srimathi **VALLIAMMAI AMMAL**

who died in November 1911

at the beginning of her Sixty-fifth Year.

# தந்தைவழி—முன்னீர்ப்பள்ளம்.

பூர்ணலிங்கம் பிள்ளை

- I சிவசுப்பிரமணிய பி.
  - 1-மனைவி
    - பூர்ணலிங்கம் பி. அபிமான புதல்வன்
  - 2-மனைவி
    - 3 பெண் (தூத்துக்குடி தச்சநல்லூர் பணகுடி)
- II அருணாசலம் பி.
  - மகன் 1 குற்றாலலிங்கம் பி.—1 பெண்
  - பெண் 2 (விஜயநாராயணம் திருநெல்வேலி)
- III சங்கரநாராயண பி.
  - மகன் 6 -
    1. சொக்கலிங்கம் பி.–1 மகன் 1 மகள் (இருப்பு)
    2. பூர்ணலிங்கம் பி.–1 மகன் 1 மகள் (இருப்பு)
    3. சிவசுப்பிரமணிய பி. 2 மகன் 1 மகள் (இல்லை)
    4. சரவணப்பெருமாள் பி. 1 மகன் 1 மகள்
    5. ஆறுமுகம் பி1 மகன் (இல்லை) 2 மகள்
    6. கந்தசாமி பி.– 2 மகன் (இருப்பு) 1 மகள் (இருப்பு)
  - பெண் 3 (விஜயநாராயணம் சேந்தமங்கலம் திருநெல்வேலி)

சிவசுப்பிரமணிய பி. (III 3)

- பூர்ணலிங்கம் பி., பி. ஏ. எல். டி. — { 2 மகன், 1 பெண்
- சங்கரநாராயண பி. கி. மு.
- வைகுண்டம் (காஷ்கீப்பர் சுப்பிரமணிய பி. மனைவி) (இல்லை)

361

## தாய்வழி—திருநெல்வேலி.

**தெய்வநாயகம் பிள்ளை.**

- 1-மனைவி
  - 1. ஈஸ்வரமூர்த்தி பி. (போலீஸ் ராய்சம்)
    - சுப்பராய பி.
      - 3 மகன்-ஐயாசாமி பி.
        - பூர்ணலிங்கம் பி.
        - ஈஸ்வரமூர்த்தி பி.
      - 2 மகள்-
        - சிவகிரி முத்தம்மாள் (இருப்பு)
    - பொன்னப்ப பி. (கால்வாய்)
      - 3 பெண்கள்
        - மார்த்தாண்டன் கருங்குளம்—மீனாக்ஷி
        - முன்னீர்ப்பள்ளம்—வள்ளியம்மை.
        - வண்ணார்பேட்டை—பூர்ணம் 1 மகன் – இலக்ஷ்மண பி.
  - 2. முத்தைய பி.
    - தேவராய பி. (கடையம்)
      - பெண் 2
- 2-மனைவி
  - 1. வள்ளிநாயகம் பி.
    - 1. ஈஸ்வரமூர்த்தி பி. (சப் மேஜிஸ்திரட்டு)
      - மகன் 1—சிவசூரியம் பி. (ஆண் 2)
      - மகள் 1 (பி. இல்லை)
    - 2. துரைசாமி பி.
      - வேலாயுதம் பி.
        - பிள்ளைகள் இருப்பு
  - 2. ஆவுடையப்ப பி. (இல்லை)

# முன்னுரை.

இக்களஞ்சியத்தில் ஐம்பத்தைந்து கட்டுரைகளுள. ஒவ்வொரு கட்டுரையும் என் சிற்றறிவிற் றோன்றிய உண்மையையே கொண்டுளது. எனக்குக் கிடைத்த விடுதி நேரங்களில் ஒன்று, இரண்டு, மூன்றாக இக்கட்டுரைகள் வரையப்பட்டன. இரண்டு திங்களில் இவையனைத்தும் முடிந்தன. எனக்குக் கட்டுரையாகத் தோன்றிய மெய்யுரை பிறருக்குக் கட்டுரையாகிய பொய்யுரையெனத் தோன்றினுந் தோன்றலாம். ஆயினும் இந்நூலில் யான் ஐம்பத்தைந்து பொருள்களைப் பற்றிய என் அனுபவங்களைக் கூறியுளேன். பேரறிஞர்களுக்காக இந்நூலாக்கப்பட்டதன்று. பல பொருள்களைப்பற்றி அறிய அவாவும் ஆடவரும் பெண்டிரும், மாணவரும் மாணவிகளும் என் பல்லாண்டு அனுபவங்களை ஒருசிறு பொழுதில் படித்து அறியலாம்; பலவிடங்களில் சிதறிக் கிடக்கும் கருத்துக்கள் ஒரு சிறிய பக்கத்தில் தொகுத்துக் கிடப்பதைக் காணலாம். சிறுவர் சிறுமியர்க்கென்றே இப்புத்தகம் எழுதப்பட்டமையால் எளிய நடையில் பெரும்பாலும் சொற்களின் சந்தி பிரிக்கப்பட்டு வரைந்திருப்பது வெளியாகும்.

கைவசமுள்ள பொருளை வரையாது கொடுப்பவரே வள்ளலெனப்படுவர். என் அன்னை என்மீது பேரன்பு கூர்ந்து என் கல்வித் தேற்றத்திற்கு உரிய பொருளை எங்கள் குடும்ப நிலைமையைச் சிறிதும் எண்ணாமல் வேண்டும் பொழுதெல்லாம் கடன் கொண்டாயினும் மனஞ்சடையாமல் தளராமல் ஈந்தருளிய பெரு வள்ளலாதலின் அன்னார் பெயர் என்றும் யாண்டும் நிலவுமாறு இப்புத்தகத்தை என் அருமைத் தாய்க்கே காணிக்கையாகச் செலுத்தியுளேன். இப்புத்தகத்தின் ஊதியம் என் அன்னையின் பெயர் பெற்றுவிளங்கும் என் அருமை மகள் செல்வி வள்ளியம்மைக்கே உரியதாகும்.

இறைவனருள்க.

முன்னீர்ப்பள்ளம்.
ஆனிமீ 20உ

எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை.

# பிழைதிருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 1 | 19 | நாடுகளக | நாடுகளாக |
| 35 | 1–2 | உறை | உரை |
| 54 | 14 | சட்டும் | சுட்டும் |
| 74 | 27 | அல்வாறு | அவ்வாறு |
| 75 | 17 | உணவினு | உணலினு |
| 78 | 4 | இயற்கைக | இயற்கைக் |
| 80 | 26 | பதினொரு | பதின்மூன்று |
| 81 | 19 | பதினொன் | பதின்மூன்றே |
| 83 | 23 | நாகர்கோயில் | இரணியல் |
| 84 | 25 | கடைபிடி | கடைப்பிடி |
| 86 | 11 | யும, ளாம | யும், ளாம் |
| 92 | 25 | சிறப | சிறப் |
| 94 | 2 | ஒளிவு | ஒளியு |
| 108 | 22 | யமையாத | யமையாதன |
| 115 | 21 | கிரியை | சிரியை யை (களை) |
| 120 | 13 | பொருத்து | பொறுத்து |
| 121 | 22 | நீய | மீய |
| 123 | 22 | யந்த | யந்தி |

# பொருளடக்கம்.


| கட்டுரை எண். | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழகம் | 1 |
| 2. | உலகம் | 2 |
| 3. | உயிர் | 3 |
| 4. | கடவுள் | 8 |
| 5. | உடல் | 10 |
| 6. | மக்கள் | 12 |
| 7. | நாகரிகம் | 16 |
| 8. | பெரியோர் | 17 |
| 9. | இரவலர் | 20 |
| 10. | விளைபொருள்கள் | 22 |
| 11. | உணவு | 23 |
| 12. | உழவு | 25 |
| 13. | காலம் | 27 |
| 14. | உண்மை | 31 |
| 15. | உலோகம் | 33 |
| 16. | கற்கள் | 39 |
| 17. | இடவாட்சியின் பெயர் | 41 |
| 18. | தொழில் | 44 |
| 19. | மருந்து | 45 |
| 20. | முன்னேற்றம் | 47 |
| 21. | ஆட்சித்தேற்றம் | 48 |
| 22. | மணநிகழ்ச்சி | 50 |
| 23. | இறந்தோரை நினைத்தல் | 54 |
| 24. | தாய்மொழி போற்றல் | 57 |
| 25. | நாட்டார் கூட்டம் | 58 |
| 26. | சமாதானம் | 59 |
| 27. | பெண்கள் கடமை | 61 |
| 28. | கண்ணாடி | 63 |
| 29. | உப்பு | 65 |
| 30. | விளக்கு | 67 |
| 31. | பள்ளிக்கூடம் | 68 |
| 32. | புத்தகசாலை | 71 |
| 33. | மருத்துவச்சாலை | 72 |
| 34. | சிறைச்சாலை | 74 |
| 35. | வாசகசாலை. | 76 |
| 36. | இளப். | 77 |
| 37. | ஒற்றுமைக்கும் நாணயச் சங்கம் | 79 |
| 38. | நாட்டுநூல், துணி | 82 |
| 39. | சமர்த்து | 84 |
| 40. | பாக்கியம் | 87 |
| 41. | வீடு | 89 |
| 42. | கோளி | 90 |
| 43. | களரி | 91 |
| 44. | ஊழ் | 85 |
| 45. | தொடர்பு | 97 |
| 46. | எல்லாம் நன்மைக்கே | 101 |
| 47. | சகுனம் | 104 |
| 48. | இன்னிசை | 106 |
| 49. | நன்றிமறவேல் | 109 |
| 50. | உயர்ந்த பதவி | 112 |
| 51. | சுற்றுப் பிரயாணம் | 115 |
| 52. | செலவு | 118 |
| 53. | குடியேற்றம் | 122 |
| 54. | வர்த்தகம் | 125 |
| 55. | தமிழ்த் தொண்டர் | 129 |

# கட்டுரைக் களஞ்சியம்.

## 1. தமிழகம்.

பண்டைக்காலத்தில் தமிழகம் நாவலந் தீவின் தென் பகுதியெனப்பட்டது. 'நாவலந்தீவினில் தமிழக மருங்கினில்.' நாவலந்தீவிற்குச் சம்புத்தீவென்ற பெயருமிருந்தது. 'சம்புத்தீவினுட் டமிழக மருங்கில்.' விந்தியமலையே வடக்கு எல்லையாகவும் கடலே தெற்கெல்லையாகவும் உள்ளது நாவலந்தீவு.

'நாவலம் பெருந்தீவினில் வாழ்பவர்'
'நாவலந்தீ வகத்தினுக்கு நாதரான காவலரே'

விந்தியமலைக்கு வடக்கில் கடலே யிருந்தது. வங்காளம், காஸ்மீரம், அயோத்தி முதலான நாடுகளும் இமாலயமும் வடக்குக் கடல் வற்றியபின் சிந்துநதியும், கங்கையாறும் உண்டாகித் தோன்றினவென்று வரலாற்று ஆசிரியரும் ஆராய்ச்சியாளரும் கூறுகின்றனர். வடக்கிலிருந்த கடல் தெற்கிலிருந்த கடலுடன் சேர்ந்து பொங்கித் தென்னாட்டிலுள்ள பல பாகங்களை மூன்று அமையங்களில் அழித்தனவாம். முதலில் கடல் பொங்கிய பொழுது அது ஆஸ்டிரேலியா (தென்னாடு), ஆபிரிக்கா, சைனா முதலான நாடுகள் தமிழகத்தின் தொடர்பு நாடுகளாக விருந்ததைப் பிரித்து தனித்தனி நாடுகளக ஆக்கிற்று. இரண்டாவது முறை கடல் பொங்கிய காலத்தில் முதற் சங்கங்கூடிய தென்மதுரை அழிந்துபோயிற்று. மூன்றுமுறை பொங்கிய சமயம் இரண்டாவது தமிழ்க்கூட்டம்கூடிய கவாடபுரம் அல்லது முத்தூர் கடல் கொள்ளப்பட்டது. அதன் பின்னரே தற்கால மதுரை உண்டாயிற்று. அதற்குத் தென்மதுரை யென்று பெயரிடப்பட்டது. அதற்கு வட பாலில் வடமதுரை என்ற பட்டணமும் உண்டாயிற்று.

இமிழ்கடலை வேலியாகக்கொண்ட தமிழகத்தில் நாற்பத்தொன்பது நாடுகளிருந்தனவாம். அவை ஏழு தெங்க நாடு, ஏழு மதுரை நாடு, ஏழு முன் பாலை நாடு, ஏழு பின் பாலை நாடு, ஏழு குன்ற நாடு, ஏழு குணக்கரை நாடு, ஏழு குறும்பனை நாடு எனப்பட்டன. அவற்றில் குமரியாறும், பஃறுளியாறும், பேராறும், குமரிக்கோடும், ஆகமங்களை யளித்த மகேந்திர மலையும் இருந்தனவாம். அவற்றின் பெரும்பாகம் கடலாற் கொள்ளப்பட்டது. அவை யனைத்தும் பாண்டிய நாடு எனப்பெயர் பெற்றிருந்தது. 'பாண்டி நாடே பழம்பதி' என்ற அடி அதனை வற்புறுத்தும். அந்நாட்டில் சிவ வழிபாடே நிகழ்ந்ததாம். 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்றனர் மணிவாசகனாரும். 'தென் பாண்டி நாட்டானே' என்கும் தேவாரமும். இந்நாட்டிலே முதலிரு சங்கங்களும் கூடித்திகழ்ந்தன என்பர்.

பிற்காலத்தில் 'வடவேங்கடம் தென் குமரி' என்ற எல்லை தமிழுலகிற்கு ஏற்பட்டது. அக்காலத்திற்றான் வட நாட்டிலிருந்து விந்திய மலையைக் கடந்து வந்த ஆரியரில் தலைமையானவர் அகஸ்தியரென்ற பெயர் தாங்கியவர். 'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்' என்றனர் இளங்கோவடிகளும். புதிய தமிழக வெல்லைக்குள் அமைந்தன சேர சோழ பாண்டிய நாடுகளும், அம்முடியுடை வேந்தர்களின் துணைவர்களாகிய குறுநில மன்னர்களின் நாடுகளும். இப்பெரிய நாடு செந்தமிழ் நாடு என்றும், கொடுந்தமிழ் நாடென்றும் பிரிக்கப்பட்டது. செந்தமிழ் நாடு பதின்மூன்று பாகங்கொண்டது. அப்பாகங்கள் தென் பாண்டி, பொங்கர், ஒழி, குட்டம், குடம், பன்றி, கற்கா, சீதம், பூழி, மலையா, அருவா, அருவாவடதலை என்பனவாம். அவற்றைச் சுற்றிய நாடுகள் கொடுந்தமிழ் நாடுகளெனப்பட்டன.

சேர சோழ பாண்டியவரசர்கள் முதன் முதலில் ஒரு தாய் வயிற்றிலுதித்தவர்களென்றும், மேற்கடல் சேர்ந்த நாட்டை ஒருவரும் (சேரனும்), தெற்கிலுள்ளதை ஒருவரும் (பாண்டியனும்), தென் கிழக்கிலுள்ளதை மற்றொருவரும் (சோழனும், சோழம்—தென்கிழக்கு) பங்கிட்டுக்கொண்டனர் என்றும், மூன்று நாடுகளிலும் தாய்மொழியாக வழங்கியது தமிழென்றும், வரலாற்றாசிரியர் கூறுவர்.

இப்பொழுது பல கண்டங்களிலும் விடாமுயற்சியுள்ள தமிழ் மக்கள் பரவித் தமிழைப் படித்தும் வளர்த்தும் வருவதால் அந்நாடுகளனைத்தையும் தமிழகம் எனலாம்.

தமிழகத்தில் தமிழ்மொழி பல்லாயிர வயது பெற்ற மொழி. அதனை வளர்த்துப் போற்றிய புலவர் ஆயிரக்கணக்காயுளர். அன்னாரில் சிறந்தோர் பெயரையாயினும் தெரிந்து கொள்ளுதல் தமிழர் கடமையாம். முதலில் அகத்தியனும், மதிவாணனும், முடிநாகராயரும், சிகண்டியும், பின்னர் அகஸ்தியனும், தொல்காப்பியனும், அதன்பின்னர் நக்கீரனும் திருவள்ளுவரும், அதன் பின்னர் இளங்கோவடிகளும் சீத்தலைச்சாத்தனாரும், திருத்தக்க தேவரும், அதன் பின்னர் நான்கு சைவ சமயாசாரியர்களும், பன்னிரு ஆழ்வார்களும், அதன்பின்னர் சைவ சித்தாந்திகளாகிய நான்கு குரவர்களும், அதன் பின்னர் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தியாகிய மூவரும், அதன் பின்னர் பட்டினத்தார், பத்திரகிரியார், சேக்கிழாரும், அதன் பின்னர் தாயுமானார், குமரகுருபரர், வில்லி மூவரும், பின்னர் கவிராயர் பலரும் தமிழ்மொழியைப் பலவாறு வளர்த்துச் சிறக்கச் செய்தனர்.

தொலகாப்பியம் கடற்கோளினின்று தப்பிப்பிழைத்த முதனூலெனப்படும். திருமுருகாற்றுப்படை, குறள், சங்க நூல்களில் தலைப்பட்டன. சிலப்பதிகாரம், மணிமேகலை,

சீவகசிந்தாமணி பௌத்த சமண சமயக் கொள்கைகளை விளக்கவந்த அருமையான நூல்களாம். திருமூலர் திருமந்திரம் ஞானக்களஞ்சியமாகும். மூவர் தேவாரமும், திருவாசகமும், வைதிக சைவ சமயத்தைப்பரவச்செய்தன. நாலாயிரப் பிரபந்தம் வைணவத்தைப் பரவச்செய்தது. சிவஞான போதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் முதலான பதினன்கு மெய்கண்டார் சாத்திரங்கள் சைவசித்தாந்தக் கொள்கைகளைத் தெரிவித்தன. சிவஞான சுவாமிகளின் மகா பாடியம் சிவஞான உண்மையைத் தெற்றென விளக்குகின்றது. இராமாயணம், உலா, ஈட்டியெழுபது, நளவெண்பா இதிகாசத்தையும், சோழவரசர் வீரத்தையும், வடநாட்டரசன் பெருமையையும் விளக்குகின்றன. இகத்தினுண்மையைத் தெரிவித்துப் பரத்தை நாடியுழைத்தல் பெருமையென்பதை தத்தம் புலம்பல்களால் சிவப்பெரியார் வெளியிட்டனர். அறுபத்துமூன்று சைவ நாயன்மார்களின் முதிர்ந்த வன்மை விளக்குவது பெரிய புராணமாகும். வேதாந்த சித்தாந்த ஒற்றுமைப்பாட்டைத் தெரிவித்தவர் தாயுமானர். நீதி நெறியை விளக்கியவர் குமரகுருபரர். மகாபாரதத்தைச் சந்த விருத்தங்களாக மொழிபெயர்த்தவர் வில்லிபுத்தூரர். பின்னர் குற்றால தலபுராணம், மச்சபுராணம் ஆதிய பல புராணங்கள் தமிழ்மொழியில் தரப்பட்டன. அவற்றிலெல்லாம் பழங்கதைகளைக் காணலாம். அவற்றின் பாவன்மை யமகம், திரிபு, சிலேடை, அலங்காரம் தழுவிய யாப்படித்தை யெனப்படும். பலவகைப் பிரபந்தங்களை யாக்கினவர் மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள். நீதி நூலையும் பெண் கல்வியையும் சர்வசமய சமரசக் கீர்த்தனையையும் ஆக்கியவர் வேதநாயகம்பிள்ளையாவர். புதிய வழியில் நாடகத் தமிழைத் தமிழருக்களித்தவர் மனோன்மணியின் ஆசிரியரான பேராசிரியர் சுந்தரம் பிள்ளையாவர். நாடக

நூலை இயற்றிய புலவர் சூரியநாராயண சாஸ்திரியாரெனப் படுவர்.

உரையாசிரியருள் இளம்பூரணர் தொல்காப்பியப் பொருளை விளக்கினர். நச்சினார்க்கினியரும் சேனாவரையரும் உச்சிமேற் கொள்ளப்பட்டுளார். அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தின் பெருமையை எடுத்துக்காட்டினர். மணக்குடவரும் பரிமேலழகரும் குறளின் சிறப்பை விளக்கியுளார். பெரியவாச்சான்பிள்ளை நாலாயிரப்பிரபந்தத்தின் பெருமையைப் பெருக்கியுரைத்தனர்.

தமிழ் கற்ற ஐரோப்பியர்களுள் பெஸ்கி என்ற இற்றலி தேசத்துப் பாதிரியார் வீரமாமுனி என்ற மகுடந்தாங்கி தேம்பாவணி யென்ற அருமையான கிறிஸ்தவ புராணத்தை வரைந்தனர். அவரடிபற்றி கிருஷ்ணபிள்ளை யென்றவேளாளக் கிறிஸ்தவர் இரக்ஷணிய யாத்திரிகம் என்ற பெரியநூலை ஆக்கி யுதவினர். போப் ஐயர் குறள், நாலடி, திருவாசகம் ஆதிய அரும் பெரும் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தமிழ் மொழியின் சிறப்பைப் பல தேயத்தாருமறியுமாறு செய்தனர்.

சில பழைய சமண நூல்களையும் இலக்கணங்களையும், சைவ நூல்களையும் அச்சுவாகன மேற்றியவர் நீதிபதி இராவ்பகதூர் தாமோதரம்பிள்ளையும், பேராசிரியர் உ. வே. சுவாமிநாத ஐயருமாவர். தமிழ்மொழி நூலியற்றியவர் மதிநுட்பமுள்ள மாகறல் கார்த்திகேய முதலியாரும், ஆங்கில மொழி நூல் பயின்ற குறுமலை சுந்தரம்பிள்ளையுமாவர்.

## 2. உலகம்.

நிலம், நீர், தீ, வளி, வெளி இவ்வைந்தால் ஆயது உலகம்.

நிலம் குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என ஐந்து வகைப்படும். குறிஞ்சி யென்பது குறிஞ்சிப்பூவுள்ள மலை நிலம். முல்லை என்பது மலையைச்சார்ந்த காடு. அதில் முல்லைப்பூ மலரும். மருதம் பயிரிடத்தக்க புனல் வளமும், மருத மரமும் பொருந்திய சமமான நிலம். பாலை பயிரிடத் தகாத பாழ் நிலம் அது எப்பொழுதும் வாடாத பாலைமரம் உள்ளவிடம். நெய்தல் கடலோரமான பெருமணல் நிலம். அதில் நெய்தற்பூ பூக்கும்.

நீர் சுனை, கேணி, ஊற்று, கிணறு, குட்டை, பொய்கை, குளம், ஏரி, யாறு, கடல் இவற்றில் கிடைக்கும். சூரியன் வெப்பத்தால் மேகம் உண்டாகின்றது. மேகம் திரள மழை பெய்கின்றது. மழையின்றி நீர் கிடையாது.

தீ நெருப்பு எனப்படும். வளி யென்பது காற்று. வெளி யென்பது விசும்பு, ஆகாயம் ஆகும்.

இவ்வைந்தும் கலவாத பொருளில்லை. 'பாரிலங்கு புன லனல் காய் பரமாகாசம்' என்றனர் அப்பமூர்த்திகளும். பரந்த உலகம் தோன்றியது எங்ஙனம்?

நிலத்திற்குக் காரணம் நீர். நீருக்குக் காரணம் தீ. தீக்குக் காரணம் காற்று. காற்றிற்குக் காரணம் ஆகாயம் என்பர் அறிஞர்.

நிலத்திற்கு அடியிலும் நிலத்தைச்சுற்றியும் உள்ளது கடல். கடல் வற்றினால் நீர் கிடைப்பது அரிது. ஆகாயத்தில் அசைவு உண்டாகக் காற்று வீசுகின்றது. காற்று மோதும் பொழுது தீ பிறக்கின்றது. கல்லொடு கல்லை அடித்து நம் மூன்னோர் தீ பற்றவைத்தார்கள். அக்கற்களுக்குத் தீத்தட்டிக் கற்களென்று பெயர்.

உயர்ந்த அறிவுடையவர்களை உலகமென்று நூல்கள்

கூறுவதைக் காண்கின்றோம். 'உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே'. உலகத்திலுள்ளவர்களை உலகமென்று கூறுதல் ஆகுபெயராம்.

உலகம் விண்ணுலகம், மண்ணுலகம், இருளுலகம் என்றும், மேலுலகம் கீழுலகம் நடுவுலகம் என்றும், சுவர்க்கம், மத்தி(பூமி), பாதாளம் என்றும் பகரும் புராணங்கள்.

## 3. உயிர்.

உயிர், மன்னுயிர், ஆவி, அழியாத பொருள் எனப் படும். அப்பொருளைப் புகைப்படமெடுத்தவர் இலர். இதுவரை கிராமபோனை ஆக்கிய எடிசன் என்ற வியனறிஞரும் முயன்றாரில்லை.

உடலை விட்டு உயிர் போய்விடுமென்பர். கூட்டைவிட்டிங்கு ஆவிபோம் என்பர் புலவர். இவ்வுயிர்க்கு ஆன்மா என்ற பெயருளது. இவ்வுயிர் தங்கும் பொருளை உயிர் என்றும் மொழிவர். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்றனர் திருவள்ளுவரும். தாய் வயிற்றில் உதிப்பனவே எல்லா வுயிர்களும், வேறு வழித்தோன்றும் உயிர் கிடையாது. முகமுதலான உறுப்புகளில் உயிர் தோன்றிற் றென்பது புராணி கதை.

உயிர்களனைத்தும் அறிவுடையன ஆதலால் அவை ஒன்றுமுதல் ஆறுவகையாகப் பகுக்கப்பட்டிருக்கின்றன. உள் வைர (காட்பு) முள்ள மரமும் அது இல்லாத புல்லும் தொடுதலுடைய ஓரறிவுயிரெனப்படும். ஈரறிவுயிருக்குத் தொடுதலாகிய உணர்வும் சுவையுணர்வுமுள, ஏனெனில் நத்தை, கிளிஞ்சில் ஆதிய உயிர்களுக்கு மெய்யும் நாவுமுள. கறையான், எறும்பு ஆதியன மூவறிவுயிர்களாகும், ஏனெனில் அவற்றிற்கு மெய், நாவொடு மூக்குமுளது. இம் மூன்று உறுப்புகளுடன் கண்ணுமுள்ளன நான்கறிவுயிர்க

ளாம். அவை நண்டு, தும்பி முதலியன. அந்நான்குடன் செவியும் சேருமாயின் அவை ஐஅறிவு உயிர்களெனப்படும். அவை விலங்குகள், மாக்கள் எனப்பெயர் பெறும். மேற் கூறிய ஐந்தினுடன் மனமும் சேரின் அவ்வுயிர்கள் ஆறு அறிவுயிர்களெனப்படுவர். அவர் மக்களே ஆவர். இவைக ளனைத்தும் சிற்றுயிர்களெனப்படும். இவ்வறிவிற்கும் மேலானது பேரறிவு. பேரறிவு பெற முயலுவர் சான்றோர்.

உடலினுள்ள ஒவ்வொரு உறுப்பும் தத்தம் தொழிலைச் செய்ய உயிர் இயக்கம் நிகழுமென்பாருமுளர். உடலைவிட்டுப்பிரியும் உயிர் வேறு உடலைச்சாரும். கூடுவிட்டுக் கூடு பாயுமுயிர், ஒன்றைப்பற்றி ஒன்றை விடுமுயிர்என்று ஞானிகள் கூறுவர்.

பிதிருலகம் உண்டென்ற நம்பிக்கை மேற்றிசை ஞானிகளையும் பிடித்து வருகின்றது. இறந்துபோன பெற்றோர் தம் தனயர்களிடம் பேசுவதாக மேனாட்டறிஞரிற் சிலர் எழுதுகின்றனர். எடிசன் என்பவரும் அது கூடுமென்று கருதுகின்றனர்.

## 4. கடவுள்.

கடவுள் ஒருவரே. அவரையே ஆதி என்பர் விழுமியோர். முழுமுதற் கடவுளும் அவரே. அவரை அறிந்தவர் எங்குமிலர். அவர் எழுதிக் காட்டொணாதவர் என்றனர் திருநாவுக்கரசர். அவரே "கண்டேன் அவர் திருப்பாதம், கண்டறியாதன கண்டேன்" என்றுங்கூறியுளர்.

ஆக்கல், காத்தல் அழித்தலாகிய முத்தொழில்களைச் செய்பவர் ஒருவரெனினும் அயன், அரன், அரி என மூம் மூர்த்திகளாகப் புராணங்கள் பாவிக்கும். அவருக்கு ஐந் தொழில்களுள என்பர். அவை ஆக்கல், காத்தல், அழித்தல், அளித்தல், அருளல் என்பன.

அவர் குணங்கள் எட்டு என்றும், மூன்றே முதன்மை பெற்றனவென்றும் கூறுதல் வழக்கம். சிறந்த மூன்று குணங்களும் கந்தழி, கொடிநிலை, வள்ளி எனப்படும். கந்தழி என்பது பற்றின்மை. கடவுள் வேண்டுதல் வேண்டாமையிலான். கொடி நிலையாவது கொடிபோன்று மண்டலம் எங்கும்பரவிய நிலையுள்ளது. கடவுளைச் சர்வவியாபி என்பர். அவரில்லாத பொருளில்லை.

> "நீருமாய்த் தீயுமாகி நிலனுமாய் விசும்புமாகி
> ஏருடைக் கதிர்களாகி இமையவர் இறைஞ்ச நின்றார்."
> "நிலநீர் தீவளி யாகாசமாம்
> ஈசனை யெம்பெருமானை."

வள்ளி என்பது சந்திரன் போன்ற வண்மைத் தன்மை, அல்லது அருளுதல். எங்குமிருத்தல், பற்றின்மை, அருண்மையே கடவுளின் சிறந்த முக்குணங்களாகும். மக்களாகப் பிறந்த அனைவரும் அவரிடம் அன்பு பாராட்டுதலும், நன்றி கூறுதலும் கடமையாகும்.

அவரை வழிபடுமுறை அவரவர் அறிவு நிலைக்கு ஏற்றதாகும். உருவமைத்து வணங்குவாரும், உருவின்றி வணங்குவாரும் உளர். "கற்றுக்கொள்வன வாயுள, நாவுள, இட்டுக்கொள்வன நீருள பூவுள." நாவினால் நன்றி கூறலும் புகழலும், கையினால் நீரும் பூவும் அளித்தலுமே அறிவுடையமக்கள் கைக்கொள்ளத் தக்கன. இறைவனைப்புகழவும், அவனருளைப் பெறவும் இறைவன் நாவையும், நெஞ்சையும் அமைத்திருக்க நாம் அவற்றை உபயோகப் படுத்தாமல் சோம்பேறிகளாய்ச் சம்பளம் கொடுத்துப் பிறரை நியமித்து அவர்களடியை நாம் வணங்குதல் அடிமைத்தனம் அன்றோ?

அக அடிமையை ஒழித்தலே முன்னேற்றத்திற்கு அடிப்படை: புற அடிமை அரசு முறையில் ஒழிந்துளது. அகவடிமையை நீக்க அரசரால் இயலாது. கல்வியைப் பரப்பி

சுயமரியாதையை விருத்தி செய்வதால் அது ஒழியலாம். ஆதலால் கல்விச்சாலைகளை ஏற்படுத்துவதுமன்றி, கற்றுக் கொடுக்கும் பொருளும் சுயமரியாதையைப் புகட்டத்தக்க தான பாடங்களில் அமைக்கப்பட வேண்டும்.

"கற்றவர் மனம் கோயில்" என்பதால் கடவுளகம் கல்வி பயின்ற மனமென்பதை விளக்கிக் காட்டுதலே கணக்காயர் கடமையாகும்.

"ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடித் தெள்ளேணங் கொட்டாமோ?"

ஆயிரந் திருநாமம்(சகஸ்திரநாமம்) கடவுளின் ஆயிரங் குணஞ்செயல்களின் பெயராகும்.

இடி புயலாதிய் பயமுறுத்தும் ஒவ்வொன்றையும் ஆரியர் கடவுளராகப் பாவித்தனர். புறநாகரிகம் சிறிதுபெற்ற மக்கள் பின்னர் கடவுளர்களுக்கு மனித வுறுப்புக்களை ஏற்படுத்தினர். அறிவு ஆய்ச்சிமிகுந்தபின்னர் ஆவியாக மதிக்கப்பெற்ற கடவுள் ஒருவர் அன்பே என்பதை யுணர்ந்து மனம் மொழி மெய்களால் வந்தித்து வந்த தமிழருடைய கடவுள் வழிபாடு எங்கும் பரவிற்று.

சைவ சித்தாந்திகள் உலகம், உயிர், கடவுள் மூன்றையும் என்றும் உள்ள முப்பொருள் என்பர். மூன்றும் தொன்று தொட்டு வருவது உண்மை என்பர்.

## 5. உடல்.

உடல், உடம்பு என்றும், யாக்கை யென்றும், பெயர் பெறும்.

உடலில் பல உறுப்புகளுள. அவை தலை, கண், காது, மூக்கு, வாய், நாக்கு, மார்பு, வயிறு, கீழ்வாய், கை, கால், நீர்வாய் ஆதியன. இவ் உடம்பில் ஒன்பது வாயில்கள் உள என்பர் புலவர். அவை கண்கள் இரண்டும், காது

கள் இரண்டும், மூக்குத்துளைகள் இரண்டும், மேல்வாய் ஒன்றும், கீழ்வாய் ஒன்றும், நீர்வாய் ஒன்றுமாம்.

எலும்பு, நரம்பு, தசை (சதை,) தோல் இரத்தம் (உதிரம்) இவற்றால் ஆக்கப்பெற்றது யாக்கை எனப்படும்.

'கால் தொடுத்து எலும்பு மூட்டிக் கதிர் நரம்பு ஆக்கை யார்த்துத் தோலுடுத்து உதிரமட்டித் தொகுமயிர் மேய்ந்த கூரை'.

கண்கள் பார்க்கவும், காதுகள் கேட்கவும், மூக்கு முகரவும், வாய் பேசவும், கை வேலை செய்யவும், கால் நடக்கவும் உதவும். உடம்பிற்கு மெய் என்றும் பெயருளது. மண், நீர், தீ, வளி வெளி ஆகிய ஐந்தும் உடம்பிற்கும் உரியன.

"அஞ்சினு வியற்றப்பட்ட வாக்கை"

உடம்பு அறியும் பொருள். உடம்பு உயிர்நிலை எனப்படுகின்றது. உடல் உயிருக்கு இருப்பிடம். அவ் உறைவிடத்திற்குச் சுவர் யாக்கையாகும்.

உடலைப் பேணுதல் முதற் கடமை. உடலைப் பேணுதலால் உயிரும் பேணப்படுகின்றது. சுவரின்றிச் சித்திரம் இல்லை. அவ்வாறே உடலின்றி உயிர் நிலைத்தல் இல்லை. உயிரை இழந்த உடல் பிணம், சவம் எனப்படுகின்றது. உடலுறுப்புக்கள் அரசருக்கும் ஆண்டிக்கும், தொண்டமானுக்கும், தோட்டிக்கும் ஒரு வகைப்பட்டனவே. புலவர்கள் உடலைப் புழுக்கூடு என்றும், புன்குரம்பைஎன்றும், சிறுகுடில் என்றும் கூறுவர். உடலைக் கூடம்பை என்றும், உயிரைப் புள் என்றும் உருவகப்படுத்தி உடம்பினின்று உயிர் புள் போலப் பறந்துவிடும் என்றும் எச்சரிப்பது வழக்கம்.

உடல் நலம் விரும்புவோர் உறுப்பு ஒவ்வொன்றும் அது அதனுக்குரிய தொழிலை மிகாமலும் குறையாமலும் செய்யுமாறு முயலவேண்டும். ஏதேனும் ஒரு உறுப்புத் தன்

தொழிலைச் செய்யா தொழியினும், மிகுந்து செய்யினும் கருவி திருப்பிடித்துந் தேய்ந்துந் தொழில் வன்மையற்று நோயுண்டாய்த் தளர்ந்து இயங்காதொழியும்.

உடலைப்பேணி அதனை நெடுங்காலமிருக்கச் செய்து பிறப்பின் பயனை அநுபவிக்கச் செய்தவர் சித்தர்களென்ற பெரிய ஞானிகள்.

உடல் சரீர மெனவும்படும். சரீரம் ஸ்தூல சரீரம், சூக்கும சரீரமென இருவகைப்படும். ஸ்தூல சரீரம் துயிலும் பொழுதும் சூக்கும சரீரம் தொழிற் செய்கின்றது.

உடம்பு வெற்றுடம்பு, புகழுடம்பு என இருதரப்படும். வெற்றுடம்பு புகழில்லாத உடம்பு. புகழுடம்பு என்றுமழியாத உடம்பு. புகழுக்கே பாடு படும் அறிவுடை யுலகம்.

'உடலுமுயிரு மொருவழிச்செல்லு முலகத்துள்ளே.'

'ஒண்ணுளே யொனபது வாசல் வைத்தாய்
ஒக்கவே யடைக்கும்போ தணர மாட்டேன்.'

'புலாலுடம்பே புகுந்து நின்ற கற்பகமே.'

'ஊற்றுத் துறை யொன்ப துண்ணின் றேரீர்
ஒக்க வடைக்கும்போ துணர மாட்டீர்.,

## 6. மக்கள்.

மக்கள் என்பது ஆண், பெண், இருபாலாருக்கும் பொதுப் பெயர். மக்கள் நிலமக்கள், தலைமக்கள், தொழில் மக்கள், கடைமக்கள் என நான்கு வகையினராவர். ஐவகை நிலத்திலுள்ளவர்கள் நில மக்களெனப்படுவர்.

குறிஞ்சிநில மக்கட்குப் பெயர் குறவன், குறத்தி. தலைமக்கட்குப் பெயர் மலைநாடன், வெற்பன். முல்லைநில மக்கட்குப் பெயர் ஆயர், வேட்டுவர். ஆயர் நிரை மேய்ப்போர். வேட்டுவர் விலங்குகளை வேட்டையாடுந் தொழிலைச் செய்வோர். ஆயர் யாதவர், கோவலர், இடையர் எனப்

படுவர். ஆயர் பெண்பால் ஆய்ச்சியர்; இடையர் பெண்பால் இடைச்சியர். குறிஞ்சிக்கும் மருதத்திற்கும் இடையி லுள்ளவ ராதலின் இடையரெனப்பட்டனர் கோன், கோனர் என்பன இடையர் தலைமைப் பெயராம். பொது வன் என்பது அன்னர் குலப்பெயர். குறும் பொறை நாடன் அவரது ஆட்சிப்பெயர். புனல்வளமுள்ள நிலமாகிய மருதத் திற்குரிய மக்கட்குப் பெயர் உழவர், உழத்தியர்; தலை மக்கட்குப் பெயர் ஊரன், மகிழ்நன் என்பன. பாலை நிலத்து மக்கட்குப் பெயர் மறவர், கள்ளர், எயினர் என் பன. மறத்தி. கள்ளி, எயிற்றி பெண்பாற் பெயர்கள். நெய் தல் நிலத்திற்குரிய மக்களுக்குப் பரதவர், நுளையர், பரத் தியர், நுளைச்சியர் என்பன பெயராம். அதன் தலைவர் சேர்ப்பன், துறைவன், கொண்கன் எனப்படுவர். மறவர் வீரர். வன்கண் மறவர் அகம்படியின் அகம்படியராயினர்.

'கள்ள மறவர் கனத்த வகம்படியர்
மெள்ள மெள்ள வெள்ளாள ராஞரே.'

களவுசெய்து, வழிபறித்து வாழ்ந்த மறவர் பெரும் பொருள் பெற்றபின் வீடுகளில் தங்கியும், அரண்மனைகளிற் பணி பூண்டும், பறித்த பொருள்களைக் கொண்டு நாளடைவில் நிலம் வாங்கியும் நிலம் ஏற்றும் பயிர்த் தொழில் செய்து வேள்-நிலம்-பூமி யாளராயினர் என்பதே அவ்வீரடிகளின் பொருளாகும். குடி, திசை காவல் செய்யும் மறவர் களவு செய்வதில்லை. மறவர் வெட்சி மறவரென்றும் கரந்தை மறவரென்றும் இருபகுதியினராவர்.

தொழில் மக்கள் யாவர்? பள்ளர், பறையர், சக்கிலியர், வலையர், புலையர், தோட்டி, நாவிதர், வண்ணர், கொத்தர், ஈழுவர், கைக்கோளர் (நெசவுகாரர்), சாணர் (நாடார்), படை யாட்சி, கம்மியர், தச்சர், கல்தச்சர், கொல்லர், தட்டார் (பொற் கொல்லர்), குயவர் (வேளார்), செக்கார், கன்னர்,

சிற்பர், ஓவியர் இவர்கள் அனைவரும் வேறு வேறு தொழிற் செய்து பிழைப்பவர். இவரிற் சிலர் இழிதொழிற் செய்கின்றனராதலின் அன்னார் கடைமக்களென அழைக்கப்படுகின்றனர்.

பள்ளத்தாக்குகளில் குடியிருந்துகொண்டு உழுதுபயிர் செய்து வாழ்பவர் பள்ளர். அன்னாருக்குரிய கூத்துக்குப் பள் என்ற பெயருளது. முக்கூடல் பள், சிவசைலப் பள் எடுத்துக்காட்டுகளாம். பறையறைவிப்பவர் பறையர். பாப்பிற்கு மூப்பு பறை என்பது பழமொழி. சக்கிலியன் செம்மான், செருப்புத் தைக்கிறவன். பள்ளி, பறைச்சி, சக்கிலிச்சி, செம்மாத்தி பெண்பாற்பெயர்களாம். வலையர் வலைகொண்டு புள் பிடிப்பவர். வலைச்சி வலையர் குடிப்பெண். புலையர் புன்றொழில், இழிதொழில் செய்பவர். மாடுகளைக் கொன்று தோலை யுரித்து விற்று வாழ்பவர். தோட்டி சுத்தஞ் செய்பவன், வெட்டியான், நாவிதர் (நாசுவர்,) அம்பட்டர், மயிர்வினைஞர், கொத்தர் நாட்கூலி பெற்று வேலைசெய்பவர். வண்ணார் வண்ணம் அழகு செய்பவர். துணிகளைத் தோய்த்து வெண்மையாக்கிக் கொடுத்து அழகு செய்பவர். ஈழுவர் இழை இழுப்பவர், நூற்பவர், ஈழநாட்டினர் (இலங்கையர்). கைக்கோளர் கையில் வட்டம் வைத்துப் பாவோட்டுபவர். சாணார் அரிவாள் தீட்டும் சாண் (அரைமுழமுள்ள) பலகையை உடையவர். பின்னர் கருவி தீட்டுவதற்குக் கல் ஏற்பட்டமையால் சாணைக்கல் என்றபெயர் வந்தது. நாடார் நாட்டு உட்பக்கங்களில் வசிப்பவர், நகரவாசிகளல்லர். சாணாரைக் காலிவிட்டுப் பனை ஏறுபவர் என்றும், நாடத்தகாதவர், விலகிப்போகவேண்டியவர் என்றும் பொருள் கோடல் கொளாறு விளைத்தலாகும். நாடு ஆள்பவர் (ஆண்டவர்) நாட்டார். கிராமணி என்ற பெயர் வடநாடுகளில் வழங்கி வருகின்றது. சாணாத்தி நாடாத்தி பெண்பாற்பெயர்களாம்.

ஏனைய மக்களின் பெயர்ப் பொருள் வெளிப்படை. தற் காலத்தில் நாகரிகம் பெற்றவர் தத்தம் இனப் பெயரை மாற்றிவருகின்றனர். ஆதி திராவிடர், மருத்துவ குலத் தினர், அருந்ததி குலத்தினர் போன்ற பல புதுப்பெயர்கள் வழக்கில் வருகின்றன.

அறிவு, ஒழுக்கம், உடைமை இவற்றால் மேம்பட்டவர் சிலராவர். முக்காலத்தையும் அறியவல்லவர் அறிவர் எனப் பட்டனர். அவர் பெரும்பாலும் துறவிகளாய்ப் புண்ணிய சீலர்களாய் மக்களுக்கு ஞானம் போதித்து வந்தனர்.

ஒழுக்கத்திற் சிறந்தவர் அந்தணர். அவர் அழகிய குளிர்ந்த தன்மையை யுடையவர், ஒப்புரவாளர். இல்லறத் தினின்று விருந்தோம்பி அந்தத்தை (கடவுளை) அணவு வோரும் அந்தணராவர்.

பரந்த நிலவுலகத்தைப் பாதுகாத்துக் கொடுப்பவர் காவலர், மன்னர், அரசர், வேந்தர், புரவலர் என ஒரு பொருள் குறித்த பல பெயருடையவர். அன்னாரினும் குறைந்த நிலக்காவலர் குறுநிலமன்னர் எனப்படுவர். காவல் காத்தலுமன்றி கலாம் விளையாமற் பாதுகாத்து நீதி செலுத் துவதும் அன்னார் கடமையாம். அத்தகையருக்குத் துணை யாவார் அமைச்சர் (மந்திரி), ஒற்றர் எனப்படுவர்.

வணிகர் பதினெண்கூலங் (விளை பொருள்கள்)கொண்டு சென்று விற்றுப் பொருள் தேடுகின்றவர். செட்டாக வாழ் ந்து வட்டிக்குப் பணங்கொடுத்து ஊதியங் கொள்பவரும் வணிகரே. கூலவாணிகர் அல்லாத இவர்கள் தனவணிகர் எனப்படுகின்றனர்.

வேளாளர் நிலத்தைச் சொந்தமாக உடையவர், அல்லது நிலத்தை ஆள்பவர் என்பது பொருள். வேள், மண், நிலம்

எனப்பொருள்படும். அவர்கள் உழுவித்து உண்போராவர். வேளான், குயவன், மண்வினைஞன். வேளாளரில் பிள்ளைமார், கார்காத்தார், முதலிமார் என்று மூன்று வகுப்பினருளர். அன்பு பற்றி அரசரால் மதிக்கப்பெற்றவர் பிள்ளைமார். மழைப் பெயலைக் காத்து நிலவளம் பெருக்கியவர் கார்காத்தார். அரச அவையில் முதனிலை பெற்றவர் முதலிமார். மூவகையாரும் உடனிருந்துண்ணும் உரிமையுடையவர். மூவருள்ளும் கொண்டு கொடுக்கும் வழக்கம் இலது.

கல்விப் பொருளும் செல்வப் பொருளும் உடையவர் மேலோர். அவற்றினை ஈவோர் மேலோர், ஈயாதவர் கீழோர் என்பது பட்டாங்கிலுள்ளது. நிலையாத செல்வத்தினும் கேடில் விழுச்செல்வம் கல்வியாதலின் கல்விச்செல்வம் உற்றாரே தலைப்படுகின்றனர். கல்விச்செல்வர்க்கு யாதானும் ஊர், யாதானும் நாடு வேண்டுவதிலது, அன்னார் சென்றவிடமெலாம் சிறப்பு எய்துவர் என்பர் புலவர்.

கல்விச் சிறப்பில்லாத மக்கள் மாக்கள் எனப்படுகின்றனர். 'விலங்கொடு மக்களனையர் இலங்குநூல் கற்றாரோடேனையவர்' என்றனர் நாயனாரும். (மா—க்—கள்—மிருகங்கள்.)

## 7. நாகரிகம்.

நாகர் தன்மை நாகரிகம். நாகவரசர்கள் பல பெருங்குணங்கள் வாய்ந்த பலரிருந்தனர். நாக கன்னிகைகள் வனப்பினும், வன்மையினும், வண்மையினும் பெயர் பெற்றவர்.

நாகரிகம் அக நாகரிகம் புற நாகரிகமென இருபாற்படும். நல்ல வெண்மையான அழுக்கற்ற நூற்றுணி, பட்டு சரிகை சேர்ந்த ஆடைகளைத்தரித்தலும், விலையுயர்ந்த மணி அணிகலன்களை அணிதலும், நாள்தொறும் குளித்து மாசு ஒழித்து உடலைத் தூய்மையாக வைத்துக்கொள்ளுதலும்

சுகம்பற்றிப் பலவகை ஊர்திகளிற் செல்லுதலும்,சொல்லள விற் பணிதலும், மரியாதை செய்தலும் புறநாகரிகம் எனப் படும். அது அக நாகரிகத்திற்கு முதற்படி எனலாம். அக நாகரிகம் என்றால் என்னை? பொறுமை, மிகுந்த ஆசை, காமம், கடுங்கோபம், கடுஞ்சொல் ஒழித்தலும், ஒப்புரவு, கண்ணோட்டம், விருந்தோம்பல், ஆகியன கைக்கொள்ளுத லும் அக நாகரிகக்குறிகளாம். தன் நயமே (எஞ்ஞான்றும்) பாராட்டாமல் பிறர்க்கென வாழ்தல் அக நாகரிக உறுப்பா கும். தீமை செய்கின்றவருக்கும் நன்மையே ஆற்றுதல் நன்னாகரிகமாகும். 'பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்.' 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்துவிடல்.' தீயவை செய்வாரைத் தண்டிக்கும் விதம் யாதெனில் அவர் வெட் கப்படும்படி நல்ல நயமான காரியத்தை ஆக்கிக் கொடுத் தலாம். பல தீமைகள் செய்திருக்கவும் அவற்றைப் பொருட் படுத்தாமல் ஒருவன் நன்மையையே செய்வானானால் தீமை செய்தவன் மனம் வாதிக்கும். அது தன்னையே தண்டிக்கும். ஒருவன் சிறந்த நன்மையைச் செய்யுங்கால் தீயமனம் வாத னைப் படுவதுமன்றி அவனைக்கண்டு நாணும், உட்கும், வெட்கமடையும். இதுவே உயர்ந்த அக நாகரிகம். இது மாசற்ற மனத்தின் செய்கையாம். தேவர்களுக்காகப் பாற் கடல் கடைந்தபொழுது நீலநிறமுள்ள நஞ்சை யுட்கொண்டு அமிர்தத்தை அளித்தனர் எம்பிரானென்பர்.

நகர-ரீகம்=நாகரீகம் எனப்படுவது நகரவாழ்விற்கு உரிய புறவொழுக்கத்தையே குறிக்கும்.

## 8. பெரியோர்.

பெரியோர் பெருந்தன்மை உடையவர். அவர் பிறரி னும் அரிய செயலைச் செய்பவர், பெருந்தகைமை பெற்ற

நல்லார். 'தகைமாண்ட தக்கார்' 'சிறந்தமைந்த சீரார்,' 'ஏந்திய கொள்கையர்'. 'இடிக்குந்துணையர்', 'மதலையாஞ் சார்பினர்'.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். கண்கூடாகக் காணும் தெய்வங்கள் தாயும் தந்தையும் ஆவர். ஏனெனில் கருவுற்ற நாள் முதல் ஒன்பது திங்களாகக் கருவினுக்குச் சிதைவு வராமல் தன்னைப்பேணி, பிள்ளைப்பேறாகிய துன்பத்தை'யடைந்து, பெற்ற பிள்ளை தன்னைத்தானே பாது காத்துக்கொள்ளும் காலம்வரை ஊட்டி, பாராட்டி, அது செய்யும் வாதனைகளைப் பொறுத்து அதற்கு நன்மையையே நாடுவது தாயின் கடமை. 'பெற்றமனம் பித்து' என்பது பழமொழி. தாய் படும் நோயைத் தணிக்க வல்ல மருந்து களைத் தேடிக்கொடுத்து, தாயையும் குழவியையும் பாது காத்து, உணவு, ஆடை, அணி, கல்வி இவற்றைப் பாடுபட்டுத்தேடிய பொருளால் ஈந்து நலமுறச்செய்பவன் தகப்பன் தந்தை, பிதா எனப்படுகின்றான். நன்றிசெய்த இவ்விரு குரவருக்கும் நன்றி பாராட்டுதல் பிள்ளைகளின் முதற் கடமையாம். நன்றி பாராட்டுவதுமன்றி அன்னாரிடம் அன்பு செலுத்துவது பெருங்கடமையே. அன்புடையராய், தந்தை தாய் தளர்வு எய்துங்கால் அன்னாரைப் போசிப்பதும் போற்றுவதும் பிள்ளைகள் செய்யும் கைம்மாறாகும். 'தம்பொருள் என்ப தம்மக்கள்' 'தந்தை தாய் பேண்' என்றனள் ஔவை மூதாட்டியும். 'தந்தைசொல் மிக்க மந்திரமில்லை', தாயைப் பேணுவான் சீரைப்பெறுவான். உயிருள்ளளவும் தந்தை தாயரைப் போற்றிப் பேணுதல் தனயரின் செல்வமெனப்படும்.

'மாதா மரிக்கின் மகன் நாவின் நற்சுவை போம்
தாதா வெனில் கல்வி தான்அகலும்—ஒதில் உடன்
வந்தோன் மரித்துவிடில் வாகுவலி போம், மனையேல்
அந்தோ!, இவை யாவும் போம்'.

காளைப்பருவம் அடைந்தபின் இருமுது குரவரையும் போற்றுமலும் பேணுமலும் வாழும் பிள்ளைகள் பிள்ளைகளல்லர், கொள்ளிகளே யாவர். தாயைப் பேணுத பெண்மக்கள் அரி தினும் அரிதெனலாம். தந்தை தாயரை வாயில் வந்தவாறு பேசி, கையாலடித்தும், காலால் உதைத்தும் கொடுமை செய்யும் மக்களை என்னென்று கூறுவாம். விலங்கும் ஈன்ற தாயைப் பேணுகின்றது. ஆதலால் அன்னுரை விலங்கினும் கொடியர் எனலாமேயொழிய அன்னுருக்குப் பெயர்கொடுத் தழைப்பதற்குச் சொல்லே கிடையாது.

எழுத்தறிவிப்பவர் அகக் கண்ணைத் திறக்கும் இறைவராவர். 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'. இவ்விரண்டு கண்களையும் திறந்து கொடுத்து நூல்களைப்பயிற்றுவித்து, உலகவியலைத் தெரிவித்து ஒழுக்கத்திற் செலுத்தி ஞானத்தைப் புகட்டுகின்றவர் குருவெனப்படுவர். குருவை வணங்கலும் போற்றலும் அவருக்கு உற்றுழி உதவலும் மாணவரின் சிறந்த கடமையாகும். இக்கடமையை மறந்து இகழும் மாணவர் மணியிடைப் பட்ட பதரே யாவர்.

பதரே யாயினும், தந்தை தாய் குரு ஆகிய மூவரும் மக்கள், மாணவர் மீது அன்பே செலுத்துவரன்றி அன்னுர் பெயரைத் தூற்றுதல் செய்யார். அதுவே அப்பெரி யார் பெருந்தன்மையைக் காட்டும்.

சாதாரண மக்களினும் சிறந்த அறிவும், தகுந்த ஒழுக்கமும், மிகுந்த அருளும் பெற்றவர் அரிய பெரிய அற்புதச் செயல்களை ஆற்றுந் தெள்ளியர் பெரியரெனப்படுவர். அவர் கண்ணுக்கு அஞ்சனம் போன்றவர். அவரைச் சுற்றி எங்கும் ஒளிவீசும், மணங்கமழும். அன்னுரை வழிபட்டுப் புகழ்ந்து உய்தல் அறிஞர்களின் செயலாகும்.

மேற்கூறிய குணங்களும் செயல்களு மில்லாதவரைச் சிறியரென்றும் கயவரென்றும் உலகம் அழைக்கும்.

## 9. இரவலர்.

இரவலர் யாசகர். தாம் உழைத்தலின்றிச் சோம்பேறிகளாய்ப் பிறருழைப்பினால் வரும் ஊதியத்தைத் தின்று பிழைப்பவரே யாசகராவர். 'ஏற்பது இகழ்ச்சி' யென்றிருப்பினும், 'ஈதல் இசைபட வாழ்தல்'என்றமையால் கொடுத்தல் பெருமையாம். கொடுத்தலையும் கொள்ளலையும் கண்டு அழுக்கறுப்பான் சுற்றம் உண்ண வுணவும் உடுக்கத்துணியு மின்றிக் கெடும், என்பதனால் ஈதலையும் ஏற்பதையும் பார்த்துப் பொறாமை கொள்ளலாகாது என்று மெய்ந்நூல் வற்புறுத்துகின்றது. பிடியரிசி யாயினும் கரவாது ஈதல் புண்ணியமென்ற கொள்கை பெண்டிர் மனத்தில் அழுத்தமாகப் பதிந்துளது. ஆதலால் யாசகர் குழாம் பெருகிவருகின்றது. தமிழ்நாட்டில் இரவலர் எண்ணிலர். தாமிரவருணி, பொருனையாற்றிலுள்ள குறுக்குத்துறை மண்டபங்களைக் கண்ணுற்றால் நூற்றுக்கணக்கான யாசகர் பெண்டிர் மக்களைப் பெற்றுப் பெருகிக் கவலையற்றுக் கஞ்சாத் தின்றும், பீடி, சுருட்டு கட்டுக் கட்டாகப் பிடித்தும், கள், சாராயம் குடித்தும் ஏமாப்புற்று வாழ்வதைக் காணலாம். காவி வேட்டி தரித்துக்கொண்டும், தாடியை வளர்த்துக் கொண்டும், தலைமயிரை வளர்த்துச் சடைசடையாகத் தலைமீது சுற்றிக் கொண்டும், திருநீறு, சந்தனப்பொட்டு, குங்குமம், கோபி முதலான சமய அடையாளங்களை அணிந்துகொண்டும், காவடி தூக்கிக்கொண்டும், ஊர் ஊராகச் சென்று நாள் தோறும் ஆணும் பெண்ணும் குறைந்தது குருணி அரிசிப் பிச்சை யெடுத்துச்சமைத்து உண்டதுபோக மீத அரிசியை விற்றுத் துணிமணிகள் வாங்கியும் ஐந்தாண்டளவில் போது

மான பணத்தைக் கைக்கொண்டு உலாவித் திரிகின்றனர். சிலர் பஞ்சநதித் தீரத்திலிருந்து தலயாத்திரை செய்ய வரும் இலாடர்கள் போன்று இலங்கோடு அணிந்துகொண்டும், கோபிதீட்டியும், முக்கோல், மணை தாங்கியும், அரச மரத்தடியில் கண்மூடி பரவசமானாற்போன்று அறிவிலிகளை ஏமாற்றிப் பணம் பறிக்கின்றனர். இவற்றிற்குக் காரணம் என்னை? கல்வியறிவுக் குறையே. 'பாத்திரமறிந்து பிச்சையிடு' என்ற ஆன்றோர் கூற்றையுணராமல் வேடதாரிகளைக் கண்டு மயங்கி பொய், களவு, வஞ்சகம் முதலான தீயொழுக்கம் நிரம்பித் ததும்புகின்ற இரவலரைப் போற்றுகின்றவர் எண்ணிலர்.

'நன்றாற்றலுள்ளும் தவறுண்டு அவரவர் பண்பறிந்தாற்றாக்கடை' என்பது முதுமொழி. வெகுண்டும் பயமுறுத்தியும் இரக்கின்றவருக்கு ஈவார் அறிவிலிகளேயாம்.

கணக்கில்லாத இரவலரை நீக்குவது எங்ஙனம்? கூன், குருடு, நொண்டி, சப்பாணியையும் அவரைப் போன்று வேலைசெய்யத் திறனில்லாத முதியோரையும் காப்பாற்ற அன்னசாலைகள் ஏற்படுத்தல் அரசு முறையாம். பணக்காரர் புண்ணியசீலராய் இவ்வகையாருக்கும், நிரப்பிடும்பையுற்றார்கட்கும் சத்திரங்கள்கட்டிச் சோறு போடும்படிசெய்தல் பெருமையாம். 'இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண் மாஞாலம் மரப்பாவை சென்று வந்தற்று.' வேலைசெய்யத் திறனுடையவர்கள் பிச்சைக்கு வரலாகாது. வந்தால் அன்னாருக்கு சட்டப்படி தண்டனை விதிக்கப்படுமென்றால் யாசகர்கள் தொகை குறையும். தீயொழுக்கமும் குறைந்துவிடும்.

இரந்தே பிழைக்குமாறு மக்களைப் படைத்திருப்பின் 'விரைந்து கெடுக உலகு இயற்றியான்' என்று கூறியதன் கருத்து படைப்பில் அங்ஙனம் இல்லை என்பதை உறுதிப்படுத்துவதேயாம்.

ஆடவரும் பெண்டிரும் இவ்வுண்மையை மனதிற் கொண்டு ஒழுகுதல் நன்றாகும்.

'தெண்ணீர் அடுபுற்கையாயினும் தாள்தந்த' துண்ணலின் ஊங்கினியதில்' என்பது மானமுடைய மக்கள் கையாளத்தக்கது.

## 10. விளை பொருள்கள்.

இயற்கையில் விளையும் பொருள்களும், மனித முயற்சியால் விளையும் பொருள்களும் உள. மலை நாட்டில் மூங்கிலரிசி, தேன், மிளகு, மாம்பழம், பலாப்பழம் வள்ளிக் கிழங்கு அகப்படுவதன்றி தினை, வெதிர்நெல், ஐவனமும் விளைகின்றன. பல மருந்து மூலிகைகளும் ஆங்கு உள. மலைசார்ந்த காடுகளில் வரகு, முதிரை, முந்திரி யுண்டாவதுமல்லாமல் வளமாகப் பசும்பாலும் கிடைக்கும். சமநிலத்தில் நீர்வளம் பொருந்திய நன்செயில் பலவகை நெல்லும் புன்செயில் நவதானியங்களும், பருத்தியும் விளையும். பனைமரம் ஏராளமாக உண்டாகும். நிலவளம் நீர்வளமில்லாத பாலை நிலத்தில் விளைபொருள்கள் கிடையா. கடலோரமுள்ள நாட்டில் தேங்காய் மிகுதியாகக் கிடைக்கும். கடல் மீன் வகைகளும் உப்பும் விளையும்.

தற்காலத்தில் மலைகளில் காபி, தேயிலையும், முல்லை நிலத்தில் கோதுமையும், உருளைக்கிழங்கும், காராட் கிழங்கும், மருதநிலத்தில் புகையிலையும், நெய்தல் நிலத்தில் விறகுக்கேற்ற சவுக்கு மரங்களும் பயிரிடப்படுகின்றன.

மலைகளில் மரம் வெட்டப்படுவதால் மாச்சோலைகள் நாளடைவிற் குறைந்து மஞ்சாடுவதற்கு இடமின்றிப் பருவமழை குறைந்து வருகின்றது. அதனால் விளைபொருள்கள் வளமாகக் கிடைப்பதில்லை. வறட்சியினால் பஞ்சமுண்டாகி மக்களை வருத்துகின்றது. புகைவண்டிகளிலும் கப்பல்களி

லும் விளைபொருள்கள் பலவிடங்களுக்கும் கொண்டுபோகப்படுவதால் கருப்புப் பெரிதாகத் தோன்றவில்லை.

நன்செய் நெல்வகை— கார் பிசானமாகிய இரு பருவத்திலும் 18 சம்பாவும், ஆனைக்கொம்பன், காடைக்கழுத்தன், செம்பாளை, பூம்பாளை, கோவை, பிச்சவாரி, செந்நெல், வெண்ணெல், செம்பிலி முதலாயின.

புன்செய்த் தானியங்கள்- கோதுமை, வாற்கோதுமை, வரகு, கேழ்வரகு, மஞ்சட் சோளம், செஞ்சோளம், முத்துச்சோளம், காக்காய்ச்சோளம், கம்பு, சாமை, தினை, துவரை, உழுந்து, கடலை, பயறு (கறுப்பு, பச்சை, பனி, மூரி, தட்டை, பெரிய, துலுக்க), கொள்ளு, எள்ளு, மொச்சை முதலாயின. இவையன்றி அவுரி, ஆமணக்கு முதலாயின விளைவிக்கப்படும்.

## 11. உணவு.

உண்ணுதற்குதவும் பொருளனைத்தும் உணவுப்பொருளாகும். உணவு சைவ உணவு அசைவ உணவு என இருவகைப்படும். அரிசி, இலை, காய், கிழங்கு இவற்றாலாகிய உணவு சைவ உணவெனப்படும். சிவத்தை வழிபடுபவரும் செம்மையை விரும்புகின்றவரும் உண்ணுமுணவு இதுவாதலின் இது சைவ உணவு என்ற பெயர் பெற்றதுபோலும். 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்றமையால் தமிழகத்திலே சிவ வழிபாடு மிகுந்திருந்ததென்றும், அவ்வழிபாடுடையாரே அவ்வுணவு கொண்டனரென்றும் தெரிகின்றது. வடநாட்டின்கண் ணிருந்த துறவிகள் மட்டும் சைவ உணவைப் புசித்தனரென்று அறிகின்றனம். கோழி, பறவை, ஆடு, மாடு, குதிரை, பன்றி, மக்கள் ஆதியவற்றை அடித்துக்கொன்று அவற்றின் தசையைப் பறித்தெடுத்துச் சுட்டுச் சமைக்கப்பெறுவது அசைவ உணவு, அல்லது புலா

லுணவு எனப்படும். உலகில் புலாலுணவு உண்ணும் மக்கள் நூற்றுக்கு எண்பதின்மராவர். மண்ணுலக வாழ்க்கையை நாடுகின்றவருக்கு உடல்வன்மையும் வீரமும் வீறும் அகத்தியம். இம்மூன்றையும் சிறுபொழுதில் தரத்தக்கது புலாலுணவென்பர். அவற்றைச் சைவ உணவு நாட்பட்டு அளிக்குமென்பர். அன்றியும் அது மன அமைதியையும் பரிவினையும் பெருக்குமெனவும்படும். உலகப் பற்றுடையார் எண்ணிலர் ஆதலின் அசைவ உணவினர் பெரும்பாலாராயிருக்கின்றனர். உலகப் பற்றினை வெறுப்பவர் சிலரே யாதலின் உண்மையான சைவர் தொகை சிறிதேயாம். உயிர் வதைக்கஞ்சிக் கண்ணோட்டமிகுந்து அருட் பேற்றை விழைகின்றவர் கந்தமூலாதிகளைப் புசிக்கின்றனர். பயன் கருதிச் சைவ உணவை அருந்துவோரும், இயற்கை அமைப்பிலே புலாலைக்கண்டு வெறுப்பவரும் ஆகிய இருவகையாரும் சைவர் எனப்படுகின்றனர். சிவனை வழிபடுவோரனைவருஞ் சைவரோ யெனில் அற்றன்று. அவர் சிவனடியாரெனப்படுவர். அவர் திருநீறும் உருத்திருவாக்கமும் சிவவழிபாடுஞ் செய்வர்.

தற்கால உயிர் நூலாராய்ச்சியாளர் உலகப் படைப்புத் தொட்டு எம்மக்களும் புலாலுண்டவரென்றும், அறிவு விருத்தியானபின் சிலர் அவ்வுணவில் அருவருப்பு உண்டாக அதனை நீக்கினரென்றும் கூறுவர். அதற்குச்சான்று யாதெனில் மனிதனுடைய பற்களில் விலங்குகளின் பற்கள் போன்று சில இருப்பதாகச் சொல்கின்றனர். 'புல்லாய்ப் பூடாய் புழுவாய்' என்று படிப்படியாக உயிர்கள் வளர்ந்து வருகின்றன என்ற இந்தியர் கொள்கையை மேனாட்டாரும் ஒப்புக்கொண்டுளரென்றும் பகர்கின்றனர்.

புலாலுணவில் அறிவு வளர்ச்சியால் மக்கட்கு அருவருப்புண்டாயிற்றெனின் ஆடு, யானை முதலான உயிர்களின்

அறிவு ஆறறிவுற்ற மக்களறிவினிற் சிறந்துளதாயிருத்தல் வேண்டும். அவ்வாறு காணப்படவிலதே.

சமைக்கப்பெற்ற அரிசிச் சோற்றுடன், மிளகு, சீரகம், கொத்தமல்லி, பூண்டு, முதலானவை சேர்த்துக் கறி, ரசம் ஆக்கி யுண்பது சைவ வுணவாகும். அதுபோன்று அசைவ வுணவிற்கும் அரிசிச் சோற்றுடன் தசையைத் துண்டுப் படுத்தி மசலாச் சேர்த்துச் சமைத்தல் வழக்கம்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே."

'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுகென
ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்து.'

அருமையான உயிருக்கு மருந்தாகிய உணவை உண்ணுகின்றவர் அளவு அறிந்துண்ணல் வேண்டும்.

'ஒருபோது யோகியே, ஒண்தளிர்க்கை மாதே!
இருபோது போகியே என்ப — திரிபோது
ரோகியே, நான்குபோ துண்பான் உடல்விட்டுப்
போகியே என்று புகல்.'

## 12 உழவு.

எத்தொழிலினும் உழவுத் தொழிலே மேன்மையானது.

"ஏரு மிரண்டுளதா யில்லத்தில் வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய் — ஊரருகே
சென்று வரவெளிதாய்ச் செய்வாருஞ் சொற்கேட்கில்
என்று முழவே யினிது."

உழவன் முதன்முதலில் நிலம் பள்ளத்தாக்கா, மேட்டுப் பாங்கா, சமநிலமா, செய்காலா, கரம்பா, புறம்போக்கா என்றும், பாய்ச்சல் ஏரிப் பாய்ச்சலா, ஆற்றுப்பாய்ச்சலா, மானமாரியா என்றும் கவனித்தல் வேண்டும்.

'உழுது உண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை, கண்டீர்
பழுது உண்டு வேறுஓர் பணிக்கு'.

உழவுத் தொழிலென்பது நிலத்தை ஏர், கலப்பை, கொழு, நுகம் கொண்டு உழுது பரம்படித்துச் சேடையாடிப் பண்

படுத்தி வித்திப் பயிரிடுதலேயாம். 'உழவினார் கைம்மடங்கின் இல்லை உலகம்' என்பது ஆன்றோர் மொழி. இல்லறம் துறவறம் இரண்டிற்கும் இன்றியமையாதது இத்தொழிலே. 'சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர் கடல் கடந்தும் பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும், நாழி யரிசிக்கே நாம்' என்றனர் ஔவையாரும். பிறரிடம் கை கட்டி வாய் பொத்தி ஏவல் செய்தல் சேவித்தலாகும். பல வூர்கட்குஞ் சென்று பலரிடம் பல்லைக்காட்டி யாசித்தல் இரத்தலாகும். திரைகடலோடியும் திரவியம் தேடு என்றனள் மூதாட்டியும். தெளிவான நீரையுடையது கடலெனப்படும். இல்லதை உள்ளதென்றும், உள்ளதை இல்லதென்றும் கூட்டியும் குறைத்தும் மனோகற்பிதஞ் செய்தும் கூறல் பாவித்தல். வேடம் போட்டுப் பிழைத்தலும் இதனுள் அடங்கும். பரந்த பூவுலகை யாளுதல் பாராளுதல் எனப்படும். செவிக்கினிய பாக்களை, செய்யுட்களைச் செய்தலும் இசையுடன் பாடுதலும் பாட்டிசைத்தலாகும். நாழியென்பது மூங்கிலின் இரண்டு கணுக்களுக்கிடையிலுள்ள குழாய். அது கால்படி அரிசி கொள்ளும். பலவாறு உழைத்துழல்தலும் பசிப்பிணி தீர்க்கும் அரிசியின் பொருட்டே. அரிசி, நெல்லரிசி, மூங்கிலரிசி, கோதுமையரிசி என பல வகைத்தாம். வாணிகஞ்செய்து பொருளீட்டினும் பொருள்கொண்டு உணவுப்பொருள் பெற்றே தீரவேண்டும். பதினெண் கூலமும் விளைவது உழவின் பயனே. பசிப்பிணி தீர்த்தல் பேரறமென்பர். நாணயம் உண்ண உதவாது.

கிரீசஸ்என்ற அரசனுக்குப் பொன் பொருள் மீது அவா மிகுந்தது. அவன் தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டுமென்று தெய்வத்தை வந்தித்தான். அங்ஙனமே அருளப் பெற்றான். உணவைத் தொட்டான். அது பொன்னாக மாறியது. உண்ணுவதற் குணவொன்று மில்லாமல் பசிப்பிணி

வாய்ப்பட்டு உழன்ருன். புதிய வாம் நீங்குமாறு அவன் அத்தெய்வத்தையே வேண்டினன். வருத்தங்கண்ட இறைவன் இரக்கமுற்று அளித்த வாத்தை மீட்டினுன். உணவு உண்டு பசியொழிந்து மன்னன் உய்ந்தனன். கண்ணிழந்தாணுக்கே கண்ணின் தருமை தெரிவதுபோல் உணவு இழந்தாணுக்கே உணவுப் பொருளின் அருமை தெரியும். உணவுப் பொருள் கிடைத்தற்கு உழவு இன்றியமையாத தொழிலாதலின் உணவு வேண்டும் மக்கள் அனைவரும் உழவின் அருமையை அறிவர்.

அகல உழுவதினும் ஆழ உழு. தொடிப்புழுதி கக்சாவுணக்கவேண்டும். எருவும் குழையும் ஏற்ற உரமாம். காய்ச்சலும் பாய்ச்சலும் கனகமிழைக்கும். வேளாளன் பார்க்கின் பயிர் நாளொருமேனி என்பது முதுமொழி. மேழிச் செல்வம் கோழைபடாது. மேழியினுல் வரும் செல்வம் உணவுப் பொருளேயாம். உழவன் பல்லுயிருக்கும் பகுத்துக்கொடுத்து மீதத்தைத் தான் கொணர்ந்து துய்ப்பதால் உழவு அறத்தோடிசைந்த தொழிலாகின்றது. அதன் மேன்மை அதனுல் விளங்குகின்றது. ஆனுல் வரி, தீர்வை முதலானவற்றை உற்றுநோக்குழி உழவனுக்கு உழவுக்கோலுமிஞ்சாது என்பர். அதனுல் அதனூதியக் குறைவு வெளியாகின்றது.

> 'மேழி பிடிக்குங் கை, வேல்வேந்தர் நோக்குங் கை,
> ஆழி தரித்தே அருளுங்கை — சூழ்வினையை
> நீக்குங்கை, என்றும் நிலைக்குங் கை, நீடூழி
> காக்குங் கை காராளர் கை.'

## 13. காலம்.

மாத்திரை, நாழிகை, யாமம், பொழுது, நாள், பக்கம் (பக்ஷம்) திங்கள்(மாதம்), பருவம், அயனம், ஆண்டு, யுகம் எனப் பலபகுதி யுடையது காலம். கைச்சொடக்குப்போடு

தல், கைநொடித்தல், கண் இமை மூடித்திறத்தல் ஆகிய காலம் மாத்திரை எனப்படும். விநாடி அறுபது கொண்டது நாழிகை. யா(சா)மம் ஏழரை நாழிகையாம், நடு இரவிற்கும் யாமமென்றே பெயர். பொழுது என்றால் நேரம். அது பகற்பொழுது இராப்பொழுது என இருவகைப்படும்.

பகல் மூன்று பகுதியுடையது. அவை காலை அல்லது விடியல், நண்பகல் (உச்சிவேளை), எல்(ற்) ப(பா)டு என்பன. (எல் — ஞாயிறு, படுதல்-அடைதல்). இரவும் மூன்றுவகைத்தாம். மாலை இரவின் முற்கூறு, யாமம் நடுக்கூறு, வைகறை பிற்கடைக் கூறு. "நாளென வொன்று போற்காட்டி உயிரீரும் வாள் அது உணர்வார்ப் பெறின்".

பகல்பொழுதும் இராப்பொழுதும் சேர்ந்தது நாள் எனப்படும். ஞாயிறு தோன்றி, மறைந்து, தோன்றும் வரை நாளொன்றாகும்.

ஏழு நாட்கொண்டது வாரம். வாரத்தில் ஒவ்வொரு நாளும் (கிழமையும்) ஒவ்வொரு கடவுளுக்கு உரியது. ஞாயிறு சூரியன் எனவும், திங்கள் சந்திரன் எனவும், செவ்வாய் (செவந்த) செந்தீவண்ணன், அழலோன், அங்காரகன், குசன் எனவும், புதன் புந்தி, மதிமகன் எனவும், வியாழன் குரு, பிரகஸ்பதி எனவும், வெள்ளி சுக்கிரன், பார்க்கவன் எனவும், சனி காரி, மகதன், முடவன் எனவும் பெயர்கள் பெறும். 'வாரம் பட்டுழி தீயவும் நல்லவாம், தீரக்காய்ந்துழி நல்லவுந் தீயவாம்'.

பக்கம் (பக்ஷம்) பதினான்கு நாள் கொண்டது. இருள் பக்கம் வெண்பக்கம், (கிருஷ்ண பக்ஷம், சுக்கில பக்ஷம்) எனப் பக்கம் இருவகைப்படும். சந்திரன் கலை முற்றிலும் இழந்து இருண்ட இரவு அமாவசி எனப்படும். கலைமுற்றும் நிறைந்த மதி பௌரணை எனப்படும். திங்கள் என்பது

மாத(ச)ம். கலை முற்றும் இழந்து பின் முற்றும் நிறைந்து வரும் திங்கள் முப்பது நாளாகும்.

பருவம் (இருது) இரண்டு திங்கள் (மாதம்) அளவையைக் குறிக்கும். பருவம் ஆறாகும். கார்ப் பருவம் மழை பெய்யுங் காலம். அது ஆவணி புரட்டாசி மாதங்களாகும். கூதிர் (குளிர்)ப்பருவம் ஐப்பசி கார்த்திகை இரண்டுமாம். பனிப்பருவம் இரண்டாகும். முன்பனி மார்கழி, தை இரண்டு திங்களிலும், பின் பனி மாசி பங்குனி இரண்டு திங்களிலும் காணப்படும். வேனில் பருவமும் இருவகைப் படும். இளவேனில் சித்திரை, வைகாசியிலும் முதுவேனில், ஆனி ஆடியிலும் உணரப்படும்.

அயநம் என்பது ஆறுமாத காலம். சூரியன் தெற்கில் சஞ்சரிக்கும் ஆறு மாதங்கள் தட்சணாயன மென்றும், வடக்கில் சஞ்சரிக்கும் ஆறு மாதங்கள் உத்தராயன மென்றும் அழைக்கப்பெறும்.

இரண்டு அயந காலமும், அதாவது பன்னிரண்டு மாத காலமும், சேர்ந்தது ஆண்டு (வருஷம்) எனப்படும். 'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவேரா மாநிலத்தீர்'?

பல ஆண்டுகள் கொண்டது ஒரு யுகமாகும். பல யுகம் அடங்கியது ஒரு கற்பம்.

தற்காலத்தில் அறுபது விநாடி கொண்டது ஒரு நிமிஷம், அறுபது நிமிஷம் ஒருமணி, பகல் பன்னிரண்டு மணி நேரம்; இரவு பன்னிரண்டு மணிநேரம். ஆக இருபத்து நாலுமணி நேரம் ஒருநாள் அல்லது திதி. ஒரு நாள் அறுபது நாழிகை நேரமாதலால் ஒரு மணி இரண்டரை நாழிகையாகின்றது. ஒரு நாழிகை இருபத்து நான்கு நிமிஷ

மாகும். ஒரு முஹூர்த்தம் (முகூர்த்தம்) மூன்றே முக்கால் நாழிகை.

வேளை, போது, பொழுது என்பன நேரத்தைக் குறிக்கும். நல்லவேளை—கெட்டவேளை, நல்லகாலம்-கெட்டகாலம், எனவும் பாகுபாடுளது. இராகு, கேது கெடுதி காட்டும் குறிகளாம். உதித்து மூன்றேமுக்கால் நாழிகை (ஒன்றரை மணிநேரம்) வரை ஒவ்வொரு நாளும் நல்லதாம். அதன் பின் இராகு வேளை ஆரம்பிக்கும். தி, ச, வெ, பு, வி, செ, நா என்ற வெழுத்துக்கள் திங்கள், சனி, வெள்ளி, புதன், வியாழன் செவ்வாய், நாயிறு என்ற நாட்களை முறையே குறிக்கும். அந்த வரிசைக்கிரமத்தில் எந்த நாளில் இராகு காலம் எப்பொழுதென்று அறியவேண்டின் அந்த நாள் எத்தனாவது எழுத்தால் குறிக்கப்படுகிறதென்று கண்டு அதை மூன்றே முக்காலைக்கொண்டு பெருக்கி அந்தத்தொகையை அடுத்துவரும் ஒன்றரை மணி நேரமும் இராகு காலமென்றறிக. நா ஏழாவது எழுத்து. $7 \times 3\frac{3}{4} = 26\frac{1}{4}$-க்குப்பின் 30 நாழிகைவரை ஞாயிற்றுக்கிழமையன்று இராகு காலம். சூரிய சந்திர கிரகணத்தை இராகு கேது, கரும் பாம்பு செம்பாம்பு மறைத்தலென்பாருமுளர்.

காலம் என்பதைக் கடவுள் அல்லது தெய்வமாகப் பாவித்து அதன் வல்லமையைக் கடத்தல் மனிதற்கு அரிதென்று புலவர்கள் கூறுவர். காலன் காலத்துக் குரியவன், காலக்கணக்கன். காலத்தை வலையாகக் கொண்டனர் கம்பர் பெருமான். 'காலமென்றொரு வலை கடக்கலாகுமோ?' 'புண்ணிய நறுநெயிற், பொருவில் கால மாம்—திண்ணிய திரியினில், விதியென் றீயினில், எண்ணிய வின்னவை யிரண்டு மெஞ்சினால், அண்ணலே, யவிவதற் கைய மாவதோ?'

'காலத்தாற் செய்த நன்றி சிறிதெனினும்' என்பதில்

காலமென்பது தக்க, தகுந்த, சரியான காலமென்று பொருள்படும்.

ஒரு மனிதனுடைய வாழ்நாட்கள் எல்லாம் அவனுடைய ஆயுள் எனப்படும். ஆயுள் எண்பது நூறு ஆண்டு என்பர். அதற்கு மேலும் கீழும் இருக்கலாம். வயது பத்தில் பதற்றம், இருபதில் ஏற்றம், முப்பதில் முறுக்கு, நாற்பதில் நழுவல், ஐம்பதில் அசதி, அறுபதில் ஆட்டம், எழுபதில் ஏக்கம், எண்பதில் தூக்கமென்று கூறுவாருமுளர்.

## 14. உண்மை.

உள்ளத்தில் உள்ளது உண்மை. உண்மை வாய் வழியாக வெளிப்படுதலால் வாய்மை எனப்படுகின்றது. உள்ளத்திற்கும் வாய்க்கும் தட்டுத்தடை இயற்கையில் இலதாம். செயற்கையால் ஏற்படின் பொய் பிறக்கும். உள்ளதையும் இல்லாததையும் வெளியிடுவது வாயே. ஆதலால் நாக்குக் கொடியதென்பர். அதில் எலும்பில்லாததனால் அது உறுதிப்பாடுடையதன்று என்னும் உலகம். அது போற்றினும் போற்றும், தூற்றினும் தூற்றும். 'யாகாவாராயினும் நாகாக்க' என்றனர் பொய்யில் புலவரும்.

உள்ளதை உள்ளவாறு கூறுதலால் நன்மை யுண்டாகுமா, தீமை யுண்டாகாதா என்று கேட்கலாம். சிறிதும் ஒளியாமல் நினைத்ததையும் நிகழ்ந்ததையும் நினைத்தவாறும் நிகழ்ந்தவாறும் கூறுகின்றவனை உலகம் பேதை என்கும். ஒவ்வொருவரும் அகத்தில் தோன்றும் எண்ணங்கள் அனைத்தையும் கூறுவதில்லை. பயன்கருதிச் சொல்லத் தகுவதைச் சொல்லுதலும் பயன்படாத நினைப்பை அடக்குதலும் அறிஞர்கள் செயலாகும், யாதொன்றும் தீமையிலாததைச் சொல்லுதலே வாய்மை என்றுளார் குறளாசிரியரும்.

நெஞ்சையொளித்தொரு வஞ்சகமில்லை என்பது முதியோர் வாக்கு. வாய் ஒளித்தாலும், மறைத்தாலும் தீச்சொல் சொன்னாலும் நெஞ்சு சுடும். கொலை, களவு செய்பவன் நெஞ்சும் பாவம் செய்யலாகாது என்று பன்முறை வலியுறுத்துகின்றது. உடல் வன்மை, பணச் செருக்கு, செல்வாக்கு, துணைவலி இவற்றால் நெஞ்சறிவுறுத்தல் ஏற்கப்படுதலில்லை.

புரை தீர்ந்த, குற்றம் நீங்கிய, நன்மையைத்தரும் எச்சொல்லும் செய்கையும் பொய்மையாகா, வாய்மையேபோன்றும். கள்ளுண்டலினாலாயினும் வெகுளியினாலாயினும் நெஞ்சைத்துறந்தவனாய் வெறிபிடித்துத் தன்னை மறந்து கொடுஞ்செயல் செய்யப்புகுவானை இல்லாததைச்சொல்லித் தடுத்து உயிர் காத்தல் புண்ணியமாகும். வெறிதீர்ந்து தன்னறிவுற்றக்கால் தன்னைத் தடுத்தாட் கொண்டதற்காக களியாட்டயர்ந்தவன் நன்றியே கூறுவதன்றி கோபம் கொள்ளான். குடிவெறிகொண்ட கணவன் சூலியாகிய தன் மனைவியைக் கொல்லத் தொடங்குகின்றான். அவள் உயிர் தப்புமாறு ஓடிப்போய்ப் பக்கத்திலுள்ள இல்லத்தில் மறைந்துகொள்கின்றாள். கணவன் அவள் பின் ஓடிச்சென்று அயலகத்தாளைக் கேட்கின்றான். அவள் உன்மனைவி என் வீட்டில் இல்லை என்கின்றாள், வெறியன் வேகங்கெட்டு மீளுகின்றான். மனைவி அவன் கையில் அகப்படாமல் உயிர் பிழைக்கின்றாள். இவ்வாறு நன்மை பயந்த அயலாள் மொழி பொய்ம்மொழி யாகாது, மெய்ம் மொழியே யாம். எங்ஙனமெனில் சோல் விளம்பியை உட்கொண்டவன் தன்னை யொழித்து வேறொருவன் ஆகின்றான். இவன் பிழை செய்ய முயலுகின்றான். உண்மையில் அறிவுடைய எவனும் ஆருயிர் மருந்தாகிய மனைவியைக் கொல்லான்.

வழக்கு மன்றத்தைச் சார்ந்த அமினுவுக்குப் பயந்து ஒளிக்க வந்த கடன்காரன் கிறிஸ்தவப் பாதிரியின் அகத்துட்சென்று கட்டிலின் கீழ் மறைந்துகொண்டான். வாயிலில் நின்ற பாதிரியாரை அமினு வினுவுகின்ருன். கோபக்குரலொடு கடன்காரன் கட்டிலின்கீழ்க் கிடக்கின்ருன் என்றனர். பாதிரியார் கோபக்குரலைக்கேட்ட அமினு அவர் அவன் வரவில்லை யென்று சொன்னதாக நினைத்துக் கட்டிலின்கீழ்ப் பார்க்காமற் போய்விட்டனன். கடன்காரன் தப்பினுன். கடன் கொடுத்தவன் வீண்செலவென்று நினைத்து வருத்தமுற்ருன். பாதிரியார் உண்மையே சொற்றனர். விளைந்தது தீமை. மனமாரப் பாதிரியார் கூறிய கூற்றுப் பொய்மை இடத்தது, வாய்மை யன்று.

நாடக வழக்கினும், கட்டுக்கதைகளினும் இயற்கையிலமையாத குணங்குற்றங்களைக் கதை நாயகன் நாயகி களுக்கு ஏற்படுத்துகின்றனர் ஆசிரியர், அவர் நெஞ்சறிய உலகத்தார் இன்பமுறுதற் பொருட்டுப்புனைந்துரை செய்கின்றனர். அவ்வுரையால் இன்னு விளைவதில்லை. அதனுல் அது பொய்யாகாது.

முனிவரிடம் உண்மை தவறேன், பொய்யுரை யாடேன் என்றுரைத்த அரிச்சந்திரன் வரலாற்ருல் உண்மை கடைப்பிடித்தலால்இறுதியிலுண்டாய நன்மையும் சிறப்பும் சிறந்து விளங்குவதைக் காண்கின்ருேம். அரசன் இழந்த நாடு, நகரம், பாலன், மனைவி அரசு அனைத்தும் வாய்மையின் பயனுக மீளவும் பெற்றுய்ந்தன வன்ருே?

## 15. உலோகம்.

பஞ்சலோகங்கள் என்பன இரும்பு, ஈயம், செம்பு, பொன், வெள்ளியாகும். இவ்வைந்தும் போக பாதரசம், நிக்கல், துத்தநாகம் (சிங்க்), தகரம், அலுமினியம், பித்தளை,

பிளாற்றினம், முதலான உலோகங்களும் வழங்கி வருகின்றன.

இரும்பு வார்க்கப்பட்ட இரும்பு, தேனிரும்பு, உருக்கு என்று மூவகைப்படும். வார்க்கப்பட்ட அல்லது வார்ப்பு இரும்பு என்பது கரிகலந்த இரும்பு. அது சுத்தமில்லாதது; விலை குறைந்தது, இலகுவில் முறிந்துபோகக் கூடியது. அது அடுக்களைப் பாத்திரங்கள், இருப்புச் சட்டிகள், உருளைகள், விளக்குத் தூண்கள், கட்டிடத் தூண்கள் முதலானவை செய்ய உதவும். அந்த இரும்பிற்கு 'பிக் (பன்றி) அயரன்' என்ற பெயருமுண்டு. அந்த இரும்பைப் பெரியஉலையில் வைத்து ஊதும்பொழுது அசுத்தங்கள் உயிர் வாய்வுடன் கலந்தபின் அவை நீக்கப்படுகின்றன. அவை நீங்கியபின் இரும்பு கட்டிப்படுகின்றது. அதனை உலையினின்று எடுத்துக்கனத்த சம்மட்டியால் அடித்து உருட்டுகின்றார்கள். அதுதான் தேனிரும்பு எனப்படுகின்றது. அதை உலையில் வைத்து ஊதினால் இளகாது, தட்டி நீட்டக்கூடியதாகின்றது. குதிரைலாடம், கதவுகள், கிராதிகள், வண்டிப்பட்டைகள் முதலானவை செய்ய அது உதவும். கரியிரும்பிலுள்ள அசுத்தங்கள் நீங்கியபின் மீந்த இரும்பைக் காய்ச்சி நீராக்கிக் கருக்களில் ஊற்றப்படும். அதனை உருக்கு அல்லது எஃகு என்பர். இரும்புப் பாலங்கள், இரும்பு உத்தரங்கள், பலவகைக் கருவிகள் - அரம்,உளி, வாள், இழைப்புளி செய்வதற்கு உருக்கு உதவுகின்றது.

தங்கம் மங்காத ஒளியுடையது. விலை உயர்ந்தது. தனித்தங்கம் மெதுவானது. அதை வெள்ளி செம்புடன் சேர்த்து வேலைசெய்யப்படும். இருபத்துநான்கு குன்றிமணி எடையுள்ளது சுத்தமான தங்கம். இந்த எண்ணில் குறையக் குறைய தங்கத்தின் மாற்றுக் குறைகின்றது. தங்க நாணயங்கள், தங்க நகைகள் தங்கக் கலவையாலே

ஆக்கப்பெறுகின்றன. தங்கம் கரைந்துபோவதில்லை. உறை கல்லில் உறைத்து மாற்றுப் பார்ப்பது வழக்கம். அக்கினி நீர், அல்லது வெடியுப்புத் திராவகத்தில் தங்கத்தைப்போட்டால் அதன் தூய்மை வெளிப்படும். கரைந்த தங்கம் வெள்ளியைப்போல பூச்சுப் பூசவும் உதவும்.

வெள்ளி தங்கத்தைப்போல சுத்தமாகவும் ஒளி மங்காமலும் இருக்கும். தங்கத்தின் விலையினும் வெள்ளி விலை குறைவு. வெள்ளி நகைகளை அணியும் மக்கள் மிகுதி. தனி வெள்ளியுடன் செம்பைக் கலந்து வெள்ளி நாணயங்கள் ஆக்கப்படுகின்றன. வெள்ளி பூச்சுப் பூசுவதற்கும் உபயோகமுள்ளது. வெள்ளி பாத்திரங்கள் செய்யவு முதவும்.

செம்பு வெள்ளி தங்கத்தைப்போல அடிக்கவும், உருட்டவும், கம்பியாக்கவும் உதவும். செம்பினால் பலவகைப் பாத்திரங்களைச் செய்கின்றனர். செம்பின் கலவையே பித்தளை. பித்தளைப் பாத்திரங்களைவிட செப்புப் பாத்திரங்கள் அதிக உறுதியானவை. அவை வெகு காலம் தேய்ந்து போகாமலிருக்கும். செம்பும் தகரமும் கலந்தால் வெண்கலம் ஆகின்றது. வெண்கலப் பாத்திரங்கள் தவறி விழுந்தால் உடைந்துபோமென்றாலும் விளக்கினால் பளபளப் பாயிருக்கும். மோர், தயிர் வைத்தால் கைத்துப்போகாது. உருவங்கள், பதக்கங்கள், மணிகள், சேண்டிகள் அதனால் ஆக்கப்பெறும். துட்டுகள் தொண்ணூற்றைந்து பாகம் செம்புடன் தகரமும் சிறிது துத்தநாகமும் கலந்து செய்யப்படுகின்றன.

இரசம் அல்லது பாதரசம் என்பது நீர்போன்ற உலோகம், மிகப்பளுவானது. அதை ஒரு தட்டில் விட்டு விரலால் அழுத்திப்பார்த்தால் அது இலகுவில் அழுத்தப்படமாட்டாது. இரசம் கீழே விழுந்தால் துளிதுளியாகப் பிரிந்து போவதைக் காணலாம். 'பரோமீற்றர்' என்ற வாயுவின்

எடை தெரிவிக்கும் கருவிக்கும், நிலமட்டம் பார்க்க வுதவும் கருவிக்கும் இரசம் இன்றியமையாதது.

ஈயம் பளுவானது. நாதமில்லாதது. அது வெள்ளீயம், காரீயம் என இருவகைப்படும். பாத்திரங்கள் பல ஈயத்தால் செய்யப்படுகின்றன. அதனாலேயே பீரங்கிக் குண்டுகளும் ஆக்கப்படுகின்றன. நீர்க்குழாய்களும் ஈயத்தகடுகளால் அமைக்கப்படுகின்றன. ஏனெனில் தனி ஈயத்தால் குடிதண்ணீருக்குக் கேடுவிளைவதில்லை. ஈயத்தாள் தேயிலைப் பெட்டிகளின் உட்பக்கங்களிலும், பிணப்பெட்டிகளின் உட்பக்கங்களிலும் அடக்கஞ்செய்யப்படும் பொருள்கள் கெடாமலிருக்குமாறு அடிக்கப் படுகின்றது. தூக்குநூற் குண்டு (பிளம்மெற்) செய்வதற்கும் ஈயமே உதவுகின்றது. செம்பு பித்தளைப் பாத்திரங்கள் கையாமலிருப்பதற்கு வெள்ளீயம் பூசப்படுகின்றது. உலோகங்களில் ஒன்றினொடொன்றைப் பற்றும்படி செய்யவும் ஈயமுதவும்.

தகரம் இலகுவாக இளகுகின்றமையால் நெருப்பில் வைக்கக்கூடிய பாத்திரங்கள் அதனால் செய்யப்படுவதில்லை. இரும்பு துருப்பிடியா திருப்பதற்கு உருக்கிய தகரத்தில் அதை யிடுவார்கள். தகரம் அதிகமாக அகப்படுவதில்லை. ஆதலால் அதற்கு விலை அதிகம். ஈயத்துடன் தகரத்தைக் கலந்து கல்லீயமும் (வெள்ளீயமும்) பசைகாரமும் செய்யப்படும். நீலாஞ்சனமும் (ஆன்றிமனி) தகரமும் சேர்ந்த கலவையே தட்டு மூடிகள் செய்வதற்கு உதவுகின்றது. சாதாரணமான கண்ணாடிகளின் பின்பக்கத்தில் தகரமும் இரசமும் சேர்த்துப் பூசுகின்றார்கள். உயர்ந்தகண்ணாடிகளுக்கு வெள்ளியே உபயோகப்படுத்தப் படுகின்றது. மண்ணெண்ணெய் தகரப்பெட்டிகளில் அடைத்து வருகின்றது. தகரக்குழாய்களும் தகரக்கிண்ணங்களும் அதிகமாகச் செய்யப்படுகின்றன.

நிக்கல் வெள்ளிபோன்று வெண்ணிறமுள்ளது. அது அதிகமாக அகப்படுவதில்லை. அதற்கு ஜெர்மன் சில்வர் என்ற பெயருளது. கரண்டிகள் பல அதனால் செய்யப்படுகின்றன. உருக்குடன் நிக்கலையும்சேர்த்துக் கப்பற் பாலஞ் செய்தற்குத் தகடுகளடிக்கப் படுகின்றன. செம்புடன் நிக்கலைக்கலந்து நாணயங்கள் செய்யப்படுகின்றன. ஐரோப்பிய யுத்தத்தின் பின்னர் ஒரு அணா, இரண்டு அணா, நாலணா, எட்டணா நாணயம் நம் நாட்டில் வழங்கி வருவது அவ்விரண்டு உலோகங்களின் கலவையே.

துத்தநாகம் (சிங்க்) நீலம் கலந்த வெண்ணிறமுடையது. அதை உருக்கி அதில் இரும்பைப் போட்டுவிட்டால் அது 'கால்வனைஸ்டு அயரன்' என்ற பெயர் பெறும். ஏன் இப்படிச் செய்கின்றார்கள்? இரும்பில் ஈரம்பட்டுத் துரு ஏறாமலிருப்பதற்காகவே. ஓடு,சுவர்களுக்கு பதிலாக துத்தநாகத் தகடுகளை உபயோகிக்கின்றார்கள். அதனால் முகடு போடுதலையும் கூரைகள் வேய்தலையும் பார்க்கின்றோம்.

அலுமினியம் களிமண் தாதுக்களிலிருந்து முதலில் ஐம்பதாண்டுகளாகப் பாடுபட்டுத்தேடிக் கண்டுபிடிக்கப் பெற்ற உலோகம். களிமண்நீறு, தூள் இவற்றிலிருந்து இவ்வுலோகத்தைப் பிரிக்க மின்சாரம் உதவுமென்று கண்டபின் ஆயிரக்கணக்கான எடையுடைய இவ்வுலோகம் உலகெங்கும் பரவிவருகின்றது. அலுமினியப் பாத்திரங்கள் மலிந்து குவிகின்றன. அலுமினியத்தைத் தூளாக்கி அதனுடன் ஒருவகை எண்ணெய்யைச் சேர்த்து இரும்புச் சாமான்கள் துருப்பிடிக்காதபடிப் பூச்சுப் பூசப்படுகின்றன. நூற்றுக்கு ஐந்துபாகம் அலுமினியத்தைச் செம்புடன் கூட்டி வெண்கலம் செய்கின்றனர். அது தங்கநிறம் பெறுகின்றது. அதனால் நகைகள் செய்யப்படுகின்றன. இலே

சாயிருப்பதால் அந்த நகைகள் தங்க நகைகள் அல்லவென்று காணலாம்.

பிளாற்றினம் என்ற உலோகம் முக்கியமானது. அது தோற்றத்தில் மங்கலான வெள்ளிபோன்றது. விலையில் தங்கம் வெள்ளிகளின் விலைகளுக்கு நடுத்தரமானது. அதனை இலகுவில் இளக்கமுடியாது. அதன் கம்பிகள் தந்திக்கும், தெலிபோனுக்கும் உபயோகப்படுகின்றன. இவை வேறு உலோகக் குழாய்களில் அடைத்து உபயோகப்படுத்தப்படுகின்றன. இந்த உலோகத்திலிருந்து தயாரான பசையைக் கடிதாசியில் ஒட்டிப் படங்கள் எடுக்கப்படுகின்றன.

உலோகங்கள் எப்படிக் கிடைக்கின்றன? சில உலோகங்கள் சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்படும், சில பூமியிலிருந்து தோண்டியெடுக்கப்படும். தங்கம், வெள்ளி முதலான உலோகங்கள் நிறங்குன்றாமல் பளபளப்பாக இருக்கின்றன. மண் தாதுக்களிலிருந்து பலவிதமான வேலைகள் செய்யப்பெற்று உலோகங்கள் கிடைக்கின்றன. சில உருக்கிக் காய்ச்சிப் பிரித்து எடுக்கப்படும். சில சூட்டினால் மட்டும் பிரிபட்டு வெளிப்படுகின்றன. சில இலகுவாய் உருகும், சில அப்படியல்ல. சில அடிக்கப்பெறின் உடைந்து போம், சில உறுதியாயிருக்கும். நாகரிகம் அதிகரிப்பதற்குத்தக்கவாறு உலோகங்களால் ஆகும் சாமான்களும் அதிகப்படுகின்றன.

தங்கம் இந்தியாவில் மைசூரைச்சார்ந்த கோலாரிலும் தென் ஆபிரிக்கா, ஆஸ்டிரேலியாவிலும், வெள்ளி மெக்சிகோ, ஐக்கிய நாடுகளிலும், இரும்பு ஈயம் தகரம் இங்கிலாந்திலும் மிகுதியாக விளைகின்றன. இளைத்தவன் இரும்பைத் தின்பான் என்பது பழமொழி. அயம் உதிரத்திலுள்ள இரும்புடன் சேர்ந்தால் பலமுண்டாக்கும். தங்க பஸ்

பம், வெள்ளி பஸ்பம், தங்கம் வெள்ளியுடன் பலமூலிகை களைச் சேர்த்துப்புடமிட்டு ஆக்கப்பெற்று பல நோய்களைத் தீர்க்க உபயோகப்படுத்தப் படுகின்றன. நரம்பு பலவீன மடைந்தவர்கள் அயக்காந்த செந்தூரத்தைத் தேனுடனு வது நெய்யுடனுவது சேர்த்துக் குழைத்து நாவினுல் நக்கு கின்றனர். முத்துத் தூளால் தொண்டைக்கட்டு அடைப்பு நீங்கும். பவளத்தை நீற்றிப் பொடியாக்கிப் பல நோய் களுக்குக் கொடுக்கின்றுர்கள்

## 16. கற்கள்.

சாதாரணமான கற்கள் கருங்கல், வெண்கல், மாக்கல், சுக்கான் கல், வன்னக்கல் என்பன. கருங்கல் தூண், சிலை முதலானவை செய்ய உதவும். வெண்கல் படி, வரி கட்டுவதற்கு உபயோகப்படும். மாக்கல் உருவங்கள் செய்யுஞ்சிற்பிகளுக்கு முக்கியம். ஆனுல் அவை தேய்ந்தும் இலேசாய் உடைந்தும் போய்விடும் சுக்கான்கல் சுண்ணும்புக்கு உதவும். அன்றி யும் செங்கல்களாக அறுத்து அவற்றைக் கிணற்றுச் சுவர் கள், வீட்டுச் சுவர்கள் கட்டுவதற்கும் சில வூர்களில் உப யோகப்படுத்துகின்றுர்கள். வன்னக்கல் கோவிகள், கோரி கள், சிலைகள் செய்ய உதவும். அதிகவிலைபெற்றது. அதற்கு அடுத்த தரமான விலையிலுள்ளது கருங்கல். அதனை இழைத்துத் தூண்கள் செய்கின்றுர்கள். கருங்கல் மண்ட பத்திற்குச் செலவு அதிகமாகும். நினைப்பூட்டாகப் பெயர் முதலானவற்றைப் பொறித்துக் கல்லறைகளிலும் கட்டிட அடிப்படைகளிலும், தொட்டிகளிலும் பதிக்கின்றுர்கள்.

பளபளப்பான, ஒளியுள்ள கற்கள் மணிகளெனப்படும். நவமணி என்றுல் ஒன்பது மணி. வைரம், சிவப்பு, நீலம், பச்சை (மரகதம), புட்பராகம், வைடூரியம், கோமேதகம், நீலம், முத்து என்பன நவமணிகளாகும். கற்களின் விலை யை மதிப்போர் அவற்றின் ஒளி, நிறம், நாட்படவிருக்குந்

தன்மை, அபூர்வம் இவற்றைக் கவனிப்பதால் விலை பல தரம் ஏற்படுகின்றது. வைரம் அதிக ஒளியுடையது. வைரத்தை வெட்டுவதற்கு வைரத்தால் தான் முடியும். வைரவிலை வேண்டுவோர் ஆசைக்குத் தக்கவாறு ஆகும். அது காரட் கணக்கு வைத்து விலை மதிக்கப்படுகின்றது. வைரம் சாணையில் பிடித்து மெருகு செய்யப்படுகின்றது. ஆபிரிக்காவில் வைரச்சுரங்கமுண்டு. சிவப்பு, மாணிக்கம் ஆழ்ந்த சிவந்த நிறமுடையது. அது பர்மா, சயாம் நாடுகளில் விளைகின்றது. நீலக்கல் நீலநிறம் நிறைந்த கல். அது சயாமில் மிகுதி. புட்பராகம் பல நிறங்களுடையது. நீலம், வெளுத்த பச்சை, மஞ்சள், சிவப்பு இவை கலந்திருக்கும். ஒளியும் நிறமும் மங்கும். இலங்கையிலிருந்து அது ஏராளமாக வருகின்றது. கடுக்கன், மோதிரம் செய்வதற்கு உதவுகின்றது. பச்சை (மரகதம்) முதலில் ஈஜிப்த் தேசத்திலிருந்து வந்தது. பின்னர் சைபீரியா, கொலம்பியா, நியூ சவுத் வேல்ஸ் முதலான இடங்களிலிருந்து வருகின்றது. கண்ணோய்களைத் தீர்க்க வல்லது பச்சை யென்ற கொள்கை முன் காலத்தில் இருந்தது. செக்கச்சேவப்பான மாணிக்கம் சிலேட்டுக் கல், கருங்கல், சுக்கான் கல், எரிமலை யுருக்குக் கல் இவற்றினின்று எடுக்கப்பட்டுள்ளது. சூரியகாந்தமும், கோமேதகமும் இவ்வினப்பட்டவையே. நீலமும் பச்சையும் கலந்த நிறமுடைய கல் பாரசீகத்தில் கிடைக்கும். அக்கல்விற் சிறந்தது அந்தத் தேசத்தைவிட்டு வெளிவருவதில்லை.

முத்தும் பவளமும் பிராணிகளால் ஆக்கப்பெற்றுள. இப்பி மீனின் சிப்பியில் மணலும் வேறு பொருள்களும் சேர்ந்து அதனை அளுத்த அவற்றை வெளிப்படுத்த முடியாமல் அவற்றைச் சுற்றி வரி வரியாகத் தாதுப்பொருளுண்டாகி முத்தாகத் திரளுகின்றதென்பர். சிப்பிகளை எடுத்து

உடைத்துப் பார்த்தால் சிறு சிறு முத்துகள் அகப்படுகின்றன. சிப்பிகள் பெரிதாயிருந்தால் பெரியமுத்துகள் கிடைக்கும் இரண்டு இஞ்சு நீளமும் நாலு இஞ்சு வட்டமுமுள்ள பெரிய முத்துகள் சொற்பமே. அவற்றின் விலை மதிப்பிலடங்குவதில்லை. மன்னார் குடாக்கடலிலும், பாரசீக குடாக்கடலிலும், செங்கடலிலும், முத்துக்குளிப்பதுண்டு.

பவளம் ஒரு அற்பப் பிராணியால் உண்டாக்கப்படுகின்றது. அது உண்டாவதற்கு வெகு காலமாகும். இப்பூச்சிக்கு வாயும் சுவரணைக் கொம்புகளுமுண்டு. இக்கொம்புகளால் உணவை உட்கொள்ளும். கடல்நீரும் அதனுட் செல்லும். அதிலுள்ள சுண்ணதாது அவண் படியும், படியப் படிய பூச்சியின் உடற்கூட்டிலிருந்து பவளத்திற்குரிய மூலப்பொருள் வெளிப்பட்டுச் சுண்ணத்துடன் சேர்ந்து பவளமுண்டாகின்றதென்பர். செங்கடல், நடுக்கடல் அட்ரியாற்றிக் கடல் இவற்றில் பவளம் விளைகின்றது.

ஒளியுள்ள கற்கள் காதிலணியும் தோடுகளுக்கும் விரல்களிலணியும் மோதிரங்களுக்கும் கழுத்திலணியும் மாலை ஆரங்களுக்கும் கையிலணியும் காப்புக் கொலுசுகளுக்கும், மூக்கிலணியும் மூக்குத்தி, திருக்குகளுக்கும், தலையிலணியும் கிரீடங்களுக்கும் உதவும். பணச்செழிப்பிற்குத் தக்கவாறு கல்கள் அமையும்.

இரசவாத நூல் ஓங்கி வளரவும் உலாந்தா வைரமும் செர்மன் சிவப்பும் செய்யப்பட்டு சொற்ப விலைக்கு விற்கப்படுகின்றன. எண்ணெய் இறங்காமல் பார்த்துக்கொண்டால் அவற்றின் ஒளி மங்காது. பெரும்பான்மையோர் இவற்றையே வாங்கி நகை செய்து அணிந்து கொள்கின்றனர்.

## 17. இடவாட்சியின் பெயர்.

கண்டமென்பது கடலாற் சூழப்பட்ட பரந்த பூமி.

ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, தென், வட அமெரிக்கா, இவை கண்டங்களாம். ஒவ்வொரு கண்டத்திலும் பல தேசங்களுள. ஒவ்வொரு தேசத்திலும் பல நாடுகளுள. ஒவ்வொரு நாட்டிலும் பல ஊர்களுள.

ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் பரதகண்டமெனப் பட்டது. அது இமாலய மலை தொட்டுக் கன்னியாகுமரி வரைக்கும், மேல் கீழ்த் திசைகளில் கடல்களாற் சூழப்பட்டும் பரவியிருந்தது. அது இப்பொழுது மூன்று பெரிய மாகாணங்களாகவும், சில சிறிய மாகாணங்களாகவும், இராஜாங்கங்களாகவும், பாளையப்பட்டுகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. சென்னை, வங்காளம், வெம்பாய், வடமேற்கு மாகாணம் எனவும், பரோடா, இந்தூர், காசிமீரம், ஐதராபாத், மைசூர், திருவாங்கூர், புதுக்கோட்டை முதலான இராஜாங்கங்களாகவும், நூற்றுக்கணக்கான சமீன்தாரிகளாகவும் அமைந்துள. ஒவ்வொரு மாகாணமும் பல சில்லாக்களாகவும், ஒவ்வொரு சில்லாவும் பல தாலூகாக்களாகவும், ஒவ்வொரு தாலூகாவும் பல பிற்காக் களாகவும், ஒவ்வொரு பிற்காவும் பல கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திற்கும் கிராமமுன்சீபு, கணக்கன், தலையாரி, வெட்டியான், என்ற வேலைக்காரர்களும், ஒவ்வொரு பிற்காவுக்கும் ஒரு ரெவநியூ இன்ஸ்பெக்டரும், ஒவ்வொரு தாலூகாவிற்கும் ஒரு தாசில்தார், டிப்டி தாசில்தார் அல்லது சப்மேஸ்திரட்டும், இரண்டு மூன்று தாலூகாக்கள் சேர்ந்த டிவிஷனு (பகுதி)க்கு டிப்டி கலெக்டர் அல்லது டிவிஷனல் ஆபீசரும், ஒவ்வொரு சில்லாவிற்கும் கலெக்டர், சப்கலெக்டர், அசிஸ்டெண்டு கலெக்டர் அல்லது முதல் கிளாசு மேஸ்திரட்டும் அதிகாரிகளாயுளர். பல சில்லாக்கள் சேர்ந்த மாகாணத்திற்கு கவர்னர் என்ற பெரிய அதிகாரியுண்டு. சிறிய மாகாணங்களுக்கு லெப்டினென்டு கவர்னர்

உண்டு. இந்தியா முழுவதிற்கும் வைஸ்ராய் அல்லது இராஜப்பிரதிநிதி என்ற ஒரு தலைமையான அதிகாரியுளர்.

ஒவ்வொரு சில்லாவிலும் காவலுக்காகவும், குற்றவாளிகளைக்கண்டு பிடிப்பதற்காகவும் போலீஸ் ஏற்பட்டுள்ளது. போலீஸ் தலைவர் சூப்ரின்டெண்டென்று எனப்படுவர். அவருக்கு உதவி யொருவரன்றி டிப்டிகளும் உளர். டிப்டிகளுக்கு உதவியாக பல சர்க்கிள் (வட்டம்) இன்ஸ்பெக்டர்களும், அவர்களுக்கு உதவியாக சப் இன்ஸ்பெக்டர்களும், சப் இன்ஸ்பெக்டருக்கு உதவியாக கன்ஸ்டேபிள்களும், அவர்கள் குடியிருக்க வரிசைக்குடிசை (லயன்)களும் அவர்கள் கூடுமிடம் (ஸ்டேஷன்) ஒன்றும் உள.

ஒவ்வொரு சில்லாவிலும் முன்சீப்கோர்டு, சப்கோர்டு, சில்லாக் கோர்டு என்ற நீதிமன்றங்களுள. தாலூகாதோறும் முன்சீபு கோர்டும், தலைப்பட்டணத்தில் சப்கோர்டும், சில்லாக் கோர்டும் இருக்கின்றன.

சென்னை மாகாணத்திற்குத் தலைநகர் சென்னை அல்லது மதுராஸ் எனப்படும். அதில் கவர்னர் ஆபீசு (செக்ரிட்டேரியட்), ரெவனியு போர்டு, ஐக்கோர்டு முதலான பெரிய ஆபீசுகளுண்டு.

இவையனைத்தும் முகமதியர் காலந்தொட்டு ஏற்பட்ட புதிய ஏற்பாடுகள். பழந்தமிழர் காலத்தில் நாடுகள் பல. ஒவ்வொரு நாடும் கூற்றம், வட்டம், வணிதம், கிராமம் (ஊர்)என்ற பலபகுதிகளை யுடைத்தாயிருந்தது. ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் இருந்தன. அரசனே எல்லா அதிகாரமு முள்ளவன். அரசன் தூதர்களாலும் ஒற்றர்களாலும் உண்மைகளை யறிந்து நீதிசெலுத்தி வந்தான். அரச சபைகள் அரசர்கள் செய்யு முறைகளைச் செய்தன,

அரசர்கள் தங்கள் மனதிற்கு ஏற்பனவற்றை ஏற்றுத் தள்ளுவனவற்றைத் தள்ளி ஆட்சிபுரிந்து வந்தனர்.

பழங்காலத்தில் வழங்கிவந்த இடப் பெயர்கள் ஊர், சேரி, பாக்கம், குறிச்சி, என்பனவாம். மருதநிலத்தில் ஊர்களுள. முல்லைநிலத்தில் சேரிகளுள. மலை நிலத்தில் குறிச்சிகளுள. கடலோரங்களில் பாக்கங்களும் பட்டினங்களும் அமைந்திருந்தன. உறையூர், சேற்றூர், கோயம்புத்தூர் எனவும், விளாச்சேரி, சங்கனுச்சேரி, தாமரைச்சேரி எனவும், ஆழ்வார்குறிச்சி, செங்களக்குறிச்சி, கல்லிடைக்குறிச்சி எனவும், கயப்பாக்கம், ஆலம்பாக்கம், புரசைபாக்கம், நாகபட்டினம், காவிரிப்பூம் பட்டினம் எனவும் பெயர்கள் நிலவுகின்றன. சில ஊர்களுக்குக் குப்பம் என்ற பெயர் வழங்குகின்றது. 'நெல்லிக்குப்பம், மஞ்சக்குப்பம் தென் ஆற்காட்டிலுள. பள்ளி என்பதை திருச்சிராப்பள்ளி, திருக்காட்டுப்பள்ளி, என்ற ஊர்ப்பெயர்களில் வருவதைக் காணலாம். அனைத்தும் காரணப் பெயர்களாதலின் காரணத்தைக் கண்டுபிடித்தல் ஆராய்ச்சியாளர்களின் கடமையாகும்.

## 18. தொழில்.

எத்தொழிலும் இழிவன்று. ஒவ்வொரு ஆடவருக்கும் பெண்டிருக்கும் இயற்கையில் சிற்சில வழிகளில் அறிவு மிகுதியும் வாக்குச் செல்வமும் முடிக்குந்திறனும் அமைந்திருக்கின்றன. பெற்றோர்கள் அததனைக்கண்டு அவ்வவ் வழிகளுக்கு ஏற்ற கல்வியும் பழக்கமும் ஏற்படுத்தல் கடனாகும். ஓடியாடித்திரிகின்ற வாலிபருக்கு ஓரிடத்து இருந்து வேலை பார்த்தல் இயலாது. அதுபோன்றே இருந்த இருப்பிலிருந்து எழுத்துவேலை பார்க்கப் பிரியமுள்ளவர்களை ஓடியாடித்திரியும் வேலையிலமைப்பது பொருந்தாது. பெற்

றோர் கவனக் குறைவாலும் பிள்ளைகள் தத்தம் திறனையறியாமையாலும் செம்மறியாடு போன்று முன்னோடு போன வழியிலே போய்ப் பின் துயருறுகின்றனர். வாக்குச் செல்வமுடையவர் எழுத்து வேலைக்கு ஆகார். ஆதலால் முதன் முதலில் கவனிக்கவேண்டியது பிள்ளையின் திறம், பெற்றோரின் பொருள் நிலைமை, இவ்விரண்டையும் மனத்திற்கொண்டு கற்கச் செய்வரேல் பொருட்செலவு வீணாகாது, மனவருத்தமுண்டாகாது.

தொழிலை மேற்கொள்பவர் அதனைக் காலத்தாற் செய்யவேண்டும். குறிப்பிட்ட காலத்தில் தொழிலை இடையூறின்றிச் செய்து முடித்தல் புகழையும் பெருமையையும் விளைவிக்கும். திருப்பதி அம்பட்டன் போன்று ஒவ்வொரு வேலையிலும் சிறிது சிறிது தொடங்குகின்றவர் ஒன்றையும் கடைசிவரை செவ்வனே செய்வதில்லை. அதனால் புகாரும் மனச்சடைவும் உண்டாகின்றன. நம்பிக்கையையும் இழக்க நேரிடும். பலமரங்கண்ட தச்சன் ஒருமரமும் வெட்டான் என்பது பழமொழி

திறனறிந்து தொழிலை ஏற்கவேண்டும், காலமறிந்து அதனை முடித்தல்வேண்டும், செய்வதனைச் செவ்வனே செய்தலும் வேண்டும். கவடு கள்ளம் வஞ்சகமின்றிச் சரிவரச் செய்யவும் வேண்டும். பொருளீட்டுவதற்கு எத்தொழிலும் உதவும்.

முயற்சி திருவினையாக்கும். உத்தியோகம் புருஷலக்ஷணம் என்பர். சோம்பேறியாயிராமல் ஆடவரும் பெண்டிரும் தத்தம் வேலைகளைச்செய்து சுகவாழ்வு பெறுதல் நலம்.

## 19. மருந்து.

உண்ணும் உணவிற்கே மருந்து என்ற பெயருளது. உண்ணும் ஒவ்வொரு பொருளும் உடல் நலம் விளைவிக்கும்

பல குணமுடையது. ஆடவரும் பெண்டிரும் நோய்களுக்குக் கைப்பக்குவமாக சில மருந்துகளைச் செய்துகொள்ளத் தெரியவேண்டும். தலைவலி, காய்ச்சல், பித்தம், ஆரோசிப்பு, குமட்டுதல், பேதி, வாந்தி, சிறங்கு, பொடிப்பு, கர்ப்பநீர், வீக்கம், மேல்வலி, கை கால் உளைச்சல், பல்வலி, இருமல், தொண்டைக்கட்டு முதலான நோய்களுக்குச் சொற்பச் செலவில் மருந்துகளை ஆக்கிக்கொள்ளலாம். இஞ்சி, சுக்கு, மிளகு, திப்பிலி, திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம், பெரும்பஞ்சமூலம், பல வேர்கள், பல பச்சிலைகள், இவை இன்னவென்றும் இவற்றின் குணமிவையென்றும் இவற்றையாக்கி அளிக்கு முறைகள் இவையென்றும் அறிதல் பெற்றோர் கடமையாகும்.

இக்கடமையை மறந்து எச்சிறு நோய்க்கும் வைத்தியனை யழைப்பதும் பெருஞ் செலவிற்குட்படுத்துவதும் தகாத காரியங்கள். தாமே செய்யக்கூடியன வற்றைத் தாமே செய்வதால் பொருள் கேடுவராது.

தமிழ் நாட்டில் முன்காலத்தில் முதிய பெண்கள் பல வகை மருந்தையுமாக்கிச் சிகிச்சைகளும் செய்து செட்டாக வாழ்ந்துவந்தனர். தற்கால ஆடவரும் பெண்டிரும் மருந்து செய்யத் தெரியாததனாலும், இல்லாத அவஸ்தை உண்டென்று கொண்டும் பிறருடைய உதவியை நாடுவதுமன்றி சில சமயங்களில் கயவர்களைப்போன்று அச்சமிகுந்து தம்மையும் விற்கத் தயாராகின்றனர். அந்தோ, பரிதாபம்.

உணவைச் செய்யு முறையிற் செய்து சேர்ப்பனவற்றைச்சேர்த்து உண்டால் அதுவே அமிர்தமாகும். தற்காலப் பெண்களுக்குச் சோறு,கறி முறையி லாக்கவுந் தெரியாது. புறநாகரிகம் மிகுந்து பொருட் செலவிற்கு ஆட்படுகின்றவர் பலராவர்.

மருந்தை ஆக்குபவர் மருத்துவர். மருத்துவநூல்களைச் சிறிதாயினும் படித்து மருந்துசெய்யும் முறைகளைக் கற்றுக் கொள்ளுதல் ஒவ்வொரு மகன், மகளுடைய கடமையாகும்.

## 20. முன்னேற்றம்.

முன்னேற்றம் தனிமக்கள் முன்னேற்றம் தொகை மக்கள் முன்னேற்றம் என இருவகைப்படும். குணம், கல்வி, பொருளீட்டல், பதவிபெறல், முதலான பலவகைகளில் தனி மக்கள் முன்னேற்ற மடைகின்றார்கள். குணநலத்தால் கீழோர் மேலோராகின்றனர். கல்விப்பயிற்சியால் எவ்வகை யினராயினும் மேன்மை பெறுகின்றனர். உயர்ந்த பதவிகள் பெறுதற்கும் கல்வி அடிப்படையே. எவ்வழியினும் பணத் தைத் தேடுவோருக்கு உலகம் ஆட்படுகின்றது.

தொகை மக்கள், சனசமுகம், சமுதாயம் முன்னேற்றம் அடைவது எங்ஙனம்? கல்விச்சிறப்பாலும் பெரும்பதவி பெறுதலாலும் சனசமுகம் முன்னேற்ற மடைகின்றது. சிறந்த கல்வியால் சாதி குலம் பிறப்பு இவை அழிந்து போகும். இவையழியவே ஒற்றுமை மிகும். ஒற்றுமை மிகவே எய்த வொணாததும் எய்தும்.

பெரும்பதவி பெறும் ஒருவன் அவன் இனத்தை மேன் மைப் படுத்துகின்றான். அவனைச்சார்ந்த அனைவரும் நன்னி லைமை எய்துகின்றனர். அன்னாருக்கு ஊக்கமும் கிளர்ச்சி யும் உண்டாகின்றன.

முயற்சியால் முன்னேற்றமடையும் சமுகமு முண்டு. முயற்றின்மையால் கெடுதலும் உளது. இந்தியர்கள் தாழ்ந்த நிலைமையி லிருப்பதற்குக் காரணம் முயற்சியின்மையே.

சனசமுகம் பலவகுப்பு மக்களையும் உட்கொண்டது. ஒவ்வொரு வகுப்பும் நாகரிகம் அடைதலால் தேசமெங்கும் ஒற்றுமைப் படுகின்றது.

முன்னேற்ற மடைவதற்கு முக்கியமான காரணம் முற்றிலும் சுயநயமே பாராட்டாமல் பிறருக்காக உழைத்தலே. பிறர் நலம் கருதி உழைக்கும் எக்குலத்தினரும் விரைவில் முன்னேற்றம் அடைகின்றனர்.

வேறுபாடு நினையாத சனசமுகம் ஒற்றுமைப்படுவது மன்றி அன்பையும் பெருக்குகின்றது. அன்பினால் வெல்லக் கூடாதது எதுவுமில்லை. அன்புளதெனில் கல்லும் கனிந்து உருகும், நினைத்த காரியம் கைகூடும்.

## 21. ஆட்சித் தேற்றம்.

பாரதகண்டமெனப்படும் இந்திய தேசமானது முன்னாளில் ஐம்பத்தாறு பாகங்களாகப் பிரிந்திருந்தது வென்றும் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு மன்னனிருந்தனனென்றும் புராணங்கள்கூறுகின்றன. இப்பொழுது இவை அனைத்தும் ஓரரசரின் கைவசமுளது.

இந்தியர்கள் ஆங்கிலக் கல்வி கற்றுத் தேர்ந்து வர பல உத்தியோகங்களும் பொறுப்பான வேலைகளும் பெற்று ஆட்சிமுறை பயின்று வருகின்றனர். ரிப்பன் பிரபு காலந்தொட்டு அரசியலிற் சிற்சில பாகங்கள் இந்தியருக்குக்கொடுத்துவரப்படுகின்றன. பட்டணங்கள் தோறும் நகர பரிபாலன சபைகள் ஏற்பட்டு அவற்றை நடாத்த அதிகாரம் பெற்றிருக்கின்றனர். பரிபாலனப் பழக்கம் ஒழுங்குபடும் வரை டிப்டி கலெக்டர்கள் அச்சபைகளுக்குத் தலைவராகவும் நகரத்தில் பல பகுதிகளுக்கும் பிரதிநிதிகளைச் சர்க்காரே தெரிந்தெடுத்தும் ஆட்சி நடந்தது. பின்னர் பிரதிநிதிகளைச் சனங்களே சீட்டுக்கொடுத்து நியமிக்கு முரிமையைப் பெற்றனர். அதன்பின் சபையினுறுப்பினரே தலைவரைத் தேர்ந்தெடுக்கு முரிமையைப் பெற்றனர். உறுப்பின

ரில் ஒரு சிறு பகுதியைச் சர்க்காரே நியமிக்கும் அதிகாரத்தை வகித்துக்கொண்டு வருவது சபையின் நல்லொழுக்கம் பற்றியே.

இவ்வாறே யூனியன் போர்டு, தாலூகா போர்டு, ஜில்லா போர்டுகளிலும் நடந்து வருகின்றது.

பெண்களும் சபையுறுப்பினராவதற்கு உரிமைபெற்றுச் சபையலங்காரஞ் செய்துவருகின்றனர்.

அன்றியும் மாகாணச் சட்டசபையிலும் அம்முறையே நிகழ்ந்து வருகின்றது. சென்ற பத்தாண்டுகளாக சனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களில் மூவரை மந்திரிகளாக ஏற்று அவர்களுக்குச் சிற்சில விஷயங்களில் சுய அதிகாரம் நடத்தும்படி சர்க்கார் உரிமை கொடுத்திருக்கின்றனர்.

சென்னைமாகாணச் சட்டசபையில் மந்திரிகள் செம்மையாகக் காரியாதிகளை நடைபெறச் செய்ததனிமித்தம் இந்த மாகாணத்தைத் தமிழ் மாகாணம் ஆந்திர(தெலுங்கு) மாகாணம்என்று இரண்டுபகுதியாக்கி ஒவ்வொன்றிற்கும் தனித் தனிச் சபையும், தனித்தனிக் காபிநெற்றும், கவர்னரும் ஏற்படுத்தப் போவதாகத் தெரிகிறது. இவற்றால் ஆட்சி முறையில் இந்தியர் தேற்றம் விளங்கும்.

ஆனால் ஒரு முக்கியமான குறைபாடு இருந்து வருவதை நீக்கவேண்டும். ஒவ்வொரு சபையிலும் வகுப்புவாரி சனத்தொகைக்கு ஏற்றவாறு நாகரிகமுற்ற உறுப்பினர்கள் இத்தனை பெயரென்று குறிப்பிடப்படவேண்டும். அங்ஙனம் ஏற்படுமாயின் பலவகுப்பினரும் சேர்ந்து ஒற்றுமைக் கவும், ஐக்கியமாய்க் காரியாதிகளை நடத்தவும் கூடும். அஃதன்றி சில வகுப்பினர் மும்மரித்துச் சிறப்பெய்தாத வகுப்பினருக்குக் கொடுமை செய்யவும் கூடும்.

தவிரவும், ஒவ்வொரு போர்டு சபையிலும் ஒருமுறை தேர்ந்தெடுக்கப் பட்டவர் அடுத்த முறை நிற்கலாகாது

என்ற விதியும் ஏற்படுத்த வேண்டும். ஏனெனில் பணக்காரர் பணத்தைச் செலவு செய்து பலமுறை உறுப்பினர்களாக வருகின்றார்கள். அவ்வாறு வருவதால் அவர்களுக்குப் பரம்பரை ஏற்படுகின்றது. கல்வியறிவு கேள்வி யொழுக்கங்களாற் சிறக்காத உறுப்பினருக்குப் பரம்பரை ஏற்படுமாயின் அதனால் பிறருக்கு ஏற்படுந் தீமைக்குக் கணக்கில்லை. கபடிகளான சிலர் தங்களுடைய செல்வாக்கினால் தங்களுக்கிசைந்தவர்களை உறுப்பினர்களாக வரும்படி பிரமப்பிரயத்தனஞ் செய்து முடித்துக்கொண்டு பின்னர் அன்னாருடைய வாக்குரிமைச் சீட்டுப்பெற்றுத் தலைவர்களாக விளக்கமுற்றுப் பல இடைஞ்சல்களைச் செய்து வருவதைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

மற்றொன்று. சம்பளமாகினும் அதிகாரமாகினும் அதிகப்படும்பொழுது தன்னை மறந்து செருக்குற்றுத் தன்னலம் பாராட்டுதலே மிகுகின்றது. இதனை எல்லா போர்டுகளிலும் சபைகளிலும் பார்க்கின்றோம். பொதுவாக சபைக்கு வசூலாகும் பணம் பாதிகூடப் பொதுநலத்திற்கு உபயோகப்படுவதில்லை. இடைப்பட்ட கண்டிராக்டர்களுக்கும் அவர்கள் வேலையைச் சரிபார்க்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் பணம் வேம்பல்லவே?

தேற்றம் அதிகரிக்கும்பொழுது சீர்திருத்தங்களும் உடன் செல்லவேண்டும். இல்லையாயின் அரசியல் முறை கெட்டுவிடும்.

## 22. மண நிகழ்ச்சி.

தமிழகத்தில் பருவம் வாய்த்த ஒருவன் பக்குவமான ஒருத்தியைக் கண்டு காதலித்து இருவரும் இணங்கி ஒத்தபின் தோழன் தோழிகளின் மூலமாயும் பாங்கன் செவிலித்தாய்களின் மூலமாகவும் தங்கள் காதலைப் பெற்றோருக்குத்

தெரியப்படுத்துவார்கள். அவர்கள் இருமருங்கிலும் குலம், குணம், அறிவு, வயது, நிலைமை, பொருளுடைமை இவை யனைத்தையும் ஆய்ந்து சம்மதங் கொடுப்பர். (காதல் ஆண் பெண் பிரியம். காமம் அன்னாரின் மிதமற்ற பிரியம்). அதன் பின் மணம் நிகழும். அறிவர் என்ற பெரியோர் முன்னிலை யில் இறைவன் சான்றாக மணமகனும் மணமகளும் ஒன்று சேர்ந்து இணங்கி இல்லறம் நடத்தத் தொடங்குவர். உற்றார் உறவினர் வந்திருந்து மணத்தைச் சிறப்பிப்பர். நல்லாள் புறவழகுடையவள் மட்டுமன்று, நற்குணமுடைய வளேயாவள். குணம் குலத்திற்கு மேலாம்.

நல்ல பெண்ணின் இலக்கணத்தைப்பின்வரும் வெண்பா கூறும்:-

'அன்னை தயையும், அடியாள் பணியும், மலர்ப்
பொன்னின் அழகும், புவிப் பொறையும்—வன்னமுலை
வேசி துயிலும், விறல் மந்திரி மதியும்,
பேசில் இவை யுடையாள் பெண்.'

முன்காலத்தில் மணநிகழ்ச்சிக்காக காதலன் காதலி யின் பெற்றோர்கள் கடன்படுவதில்லை. பந்துக்களே கூடி யிருந்து பந்தல் போடுதல், காய் திருத்துதல் முதலான வேலைகளை அன்புடன் செய்வர். அதனால் தற்காலத்தில் பந்தற் செலவு, சமையற்காரர் செலவு பெருஞ்செலவாக யிருப்பது முன்காலத்திற் கிடையாது. கூட்டுறவு நிகழ்ந்த மையால் செலவு சுருக்கமாயிருந்தது. நவதானியங்களும் ஒவ்வொரு வீட்டுக்கும் விளைந்து வந்தபடியால் அந்தச் செலவுமில்லை. மேளம், தாலி, (மங்கிலியம்), துணி இவற் றிற்கு வேண்டிய தொகை மொய்ம் முறைகளில் வந்து சேரும். பணக்கணக்கேயொழிய ரூபா யென்ற பேர் மொய் சீர் சீராட்டுகளில் வழங்கினதில்லை. ஏனெனில் பலதுளி பெருவெள்ளம். ஒவ்வொரு உறவினனும் வந்து தீரவேண்

டும். சாப்பாட்டுச் செலவே தவிர இடம்பச்செலவு கிடையாது. இப்பொழுது கல்யாணமென்றால் தலைவலியுண்டாகிறது. அன்புப் பெருக்கமும் செலவுச் செட்டுமன்றி குடும்பக் கேடில்லை. ஆணும் பெண்ணும் மனமொத்து உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்றினர்.

சமைந்த பெண்களை மணப்பதே வழக்கம். சிறுகுழந்தைகளை மணத்தல் இலை. ஆதலால் வாலிப விதவைகள் கிடையா. பிள்ளைகளைப்பெற்றபின் கணவனையிழந்த நங்கைமார்கள் விதவைகளாகவே குடும்ப முன்னேற்றங்கருதி உழைத்துவந்தனர். பிள்ளைகளைப் பெறாதவர்கள் உணவுகளைச் சுருக்கிக் காமவிச்சைகளைக் களைந்து கடவுளிடம் அன்பைப் பெருக்கி உற்றாருறவினருக்கு உதவியாக விருந்து காலத்தைப் போக்கினர். பெரும்பான்மையாக பாடுபட்டுத் தேடி உண்டு உய்யும் வகுப்புகளில் விதவைகள் இசைந்த வரனைத்தேடி மறுமணஞ்செய்தல் அன்றும் இன்றும் வழக்கிலுளது. இவ்வொழுக்கத்தால் பிறர்மனை நயத்தல், பிற ஆண்மக்களை நயத்தல் என்ற குற்றம் ஏற்படாமலிருந்தது.

'கணவனை யிழந்தாள் கடையகத்தாளே' என்ற வசைமொழி தீரவேண்டுமெனின் மறுவிவாகஞ் செய்யும் உரிமை எக்குலப் பெண்களுக்கும் ஏற்படவேண்டும். கணவனையிழக்கும் பெண்கள் படும்பாடு இத்துணை யத்துணையன்று. பெற்றபிள்ளை தாயின் மனப்படி நடவாமல் அன்னவஸ்திரந்தானே உண்டென்கிறான். பிள்ளைபெறாத மனைவிகள் கணவர்களை இழக்க நேரிடின் வாரிசுக்காரர் அங்ஙனமே கூறுவது வழக்கமாயிருக்கிறது. ஆதலால் கணவர்கள் மனைவிகளுக்கு நன்கொடையளித்தல் நலம். சகோதர சகோதரிகளுக்குத் தகப்பன் சொத்தில் சமபாகங் கிடைக்குமாறு சட்டமேற்படுதலால் பெண்கள் நிலைமை சீர்ப்படும். உடன்பிறந்தாருக்குள் மனத்தாங்கல், கலகமேற்படக் காரணமிராது. ஆனால்

சொத்திற் பெரியவர்களெல்லாம் சிறியவர்களாய் விடுவார்கள். வக்கீல்களுக்கு (மன்றத்து வழக்கறிஞர்களுக்கு) ப் பிழைப்பு அதிகரிக்கும். வழக்குகள் அதிகரிக்கவும் கோர்டுகளும் பெருகும்.

தமிழகத்தில் மணநிகழ்ச்சிக்குச் சடங்குகள் பல ஏற்படவில்லை. காணங்களை ஏற்படுத்திய ஐயர் (முனிவர்) செலவில்லாத சடங்குகளை ஏற்படுத்தினர். புரோகிதன்மாரே கிடையாது. அவர்களுக்குக் கைக்கூலியும் கிடையாது. கரணம் தற்காலத்தில் வயிற்றுப் பிழைப்பிற்குத் தக்க வழியாய் முடிந்தது. நாளடைவில் சுயமரியாதையை நாடும் நண்பர்கள் முன்போலவே செலவில்லாமலே கரணங்களைத் தத்தமினத்தாரைக்கொண்டு நடத்திக் கொள்கின்றார்கள். ஏழு நாள் மணம் மூன்று நாளாகச் சுருங்கிப் பின்னர் ஒரு நாளிலே நடந்து வருவதால் மணத்திற்கேற்பட்ட குடும்பங்களுக்குச் செலவுச்சுருக்கமன்றி உழைப்பும் குறைந்துளது. பலதொழிலிலமர்ந்துள்ள பந்துக்களுக்கும் தொந்தரை இல்லை.

வயது வந்தபின் மணம் நிகழ்வதால் மணமகனையும் மணமகளையும் தனியே ஓரில்லிலிருந்து வாழும்படி செய்தல் பெற்றோர் கடமையாகும். தட்டுத் தடையின்றி இருவரும் பேசவும் அன்பைப்பெருக்கவும் இசைவதன்றி அவரவர் செலவை அவரவரே பார்த்துக்கொள்ள நேரிடும். இல்லறப் பொறுப்பு இலதென்று உணரவும் கூடும். மக்களைப்பெற்று அவர்களைப் பராமரிக்க உண்மையான உதவி மாமன் மாமிகளேயாவரென்ற உண்மையும் விளங்கும். அப்பொழுதுதான் மாமி மருமகள் சண்டைகள் ஓயும். காதலர் இருவரும் உண்மையான நேயத்துடன் வாழ்வர்.

அற்றேல் குடும்பப் பொறுப்பை இளைஞர் உணரார். வயது முதிர்ந்த பெற்றோர்கள் அதனைத் தலைமேற்கொண்

டொழுகிக் கவலையுற்று மடிகின்றனர். இவ்வருத்தம் ஏன்?

பாலிய விவாகத்தால் பால்ய விதவைகள் பெருகுவதால் அதைத் தடுப்பதற்கு பெண்ணுக்கு வயது பதினாலும் ஆணுக்கு வயது பதினெட்டும் ஆகுமுன் மணநிகழ்ச்சி கூடாதென்று சட்டம் பிறப்பித்திருப்பது நல்லது.

பெண் ணுதவுங்காலை பிதா விரும்பும் வித்தையே
எண்ணில் தனம் விரும்பும் ஈன்றதாய்—நண்ணிடையில்
கூரிய நற் சுற்றம் குலம் விரும்பும், காந்தனது
பேரழகு தான்விரும்பும் பெண்'.

## 23. இறந்தோரை நினைத்தல்.

பெற்றுவளர்த்த தாய்தந்தையர் அன்பினுக்குரிய தமர் இறந்துபோனால் செய்வது யாது? அன்னாரின் உயிர் பிரிந்த உடலைக் குளிப்பித்து ஆடை அணிவித்து இடுகாட்டில் இட்டும், சுடுகாட்டிற் சுட்டும், கழுகுகளுக்கு இரையாக்கியும் வருகின்றனர் உலகிலுள்ளார். கிறித்தவர்கள் பிணங்களைப் பெட்டியில் வைத்துப் பூமியில் அடக்கஞ்செய்து அதன் மேல் சிலுவையை யடித்து நாட்டுகின்றனர். முகமதியரும் பிரேதத்தை அடக்கமே செய்கின்றனர். இருவகையாரும் கல்லறைக்கும் புதைவிடத்திற்கும் சென்று பூக்களைச்சொரிந்தும் வாசனைத் திரவியங்களைச் சிதறியும் இறந்தோர் ஞாபகத்தைப் பாராட்டுகின்றனர்.

தமிழகத்தில் தமிழ் மக்கள் பெரும்பாலும் பிணத்தை எரிமூட்டிச் சாம்பராக்கிச் சாம்பலை ஏரி, குளம், ஆறு, கிணறு இவற்றிலிட்டு வந்தனர். இறந்த நாளை நினைத்து ஆண்டுதோறும் உறவினருக்கும் ஏழை மக்களுக்கும் தம்மால் இயன்றவரை உணவளித்து வந்தனர்.

பிற்காலத்தில் தமிழ்மக்களோடு ஏனைய மக்கள் கலப்பு நேரிட ஏனையமக்கள் செய்துவந்த வழிபாடுகளைத் தமிழ்மக்

களும் பின்பற்றினர். அங்ஙனம் கலவையானபின் இறந்த இரண்டாம் நாள் காடேற்றுகிறதென்றும், பதினாறு அல்லது பத்து நாள் வரைத் தீட்டு உண்டென்றும், அந்தநாள் முடிவில் தானங்கள் செய்வதும், நன்மைக் கிருத்துவதும், மாசியஞ்செய்தலும், ஆட்டைத்திதி நடத்துதலும், அன்று பொருட்செலவிடலும், ஆண்டுதோறும், ஆமை சிராத்தஞ் செய்தலும், அடிமையாகத் தாழ்ந்து பிறரைத் தெய்வமென்று பாவித்து அவர் அடியில் வீழ்ந்து காணிக்கையைச் செலுத்தி வலம்வந்து தொழுது கொடுத்தது சிறிதெனினும் பெரிதாக மதித்து ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வணங்குதலும் ஏற்பட்டன.

இறந்துபோன உயிர்கள் பிதிர்களாக வாழ்ந்து வருகின்றன வென்றும், ஆண்டுதோறும் இறந்த நாளை ஞாபகம் வைத்து மக்களிடையில் வந்துற்று அவர்கள் கொடுக்கும் பிண்டத்தை யுண்டும் நெய்ப்புகை மண்டிய மணத்தை முகர்ந்தும், போகின்றனவென்றும் பேதைகளை நம்பும்படி செய்து பணத்தைப் பறிப்பவர்கள் பூசுரர் என்றும், தரைத்தேவர் என்றும் பெயர் தாங்கி வாழ்கின்ற சோம்பேறிகளுமுளர்.

கல்வியறிவால் பேதைமை நீங்கும். அறிவாளிகளும் கொடிய வழக்கத்தால் பீடிக்கப்பட்டு அடிமைத் தனத்தை ஒத்துக்கொண்டு உழல்கின்றனர். உண்மையான அறிவாளிகள் சரியென்று தோன்றுவதைக் கடைப்பிடித்து ஒழுகுவார்கள். மடமை மிகுந்த கடமைகளை அறவே ஒழிப்பர்.

தரைத்தேவர்கள் இறந்தோர் ஞாபகமாகத் தங்களினத்தாரில் சிலருக்கு அன்னமளிக்கின்றனரே யன்றி அரிசி காய்கறி முதலானவை கடகங் கடகமாக அளிப்பதில்லை.

நாகரிகமுற்று வரும் தமிழ்மக்கள் தம்முன்னோர் செய்து

வந்த நல்ல வழிகளைக் கைப்பற்றுதல் நலம். இறந்த ஞான்று திரும்பவரும்பொழுது இறந்தோரை நினைத்துத் தெய்வ வணக்கஞ்செய்து திருப்புகழ்கள் பாடி உற்றுருறவினர் ஏழைகளுக்கு அன்னமளித்தல் அருமையான செயல்களாம்.

தமிழ்மக்கள் அறிவிலிகளல்லர். எளிதில் ஏமாற்றமுறு கிறவர்கள் அல்லர். தம்மினும் செல்வாக்கு மிகுதியுடைய வராய் அரசரை அடுத்துப் பழகிவருபவராய் நடித்துவந்த மக்களின்மீது அன்புற்று ஒப்புரவுண்டென்று நினைத்து சுய மரியாதையை நாளடைவில் இழந்தனர். எம்மக்களும் கட வுள் மக்களே என்றகொள்கை பரவிவரும் இந்நாளில் தமிழ் மக்கள் அக அடிமையை அகற்றி உண்மையை உணர்ந்து நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து நன்மை எய்துவார்க ளாக.

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல, கால வகையினுனே' என்பதைக் கைப்பற்றுவாராக.

## 24. தாய்மொழி போற்றல்.

தாய் நாடு, தாய் மொழி என்ற தொடர்கள் வழக்கிலி ருக்கின்றனவே யன்றி தகப்பன் நாடு, தகப்பன் மொழி என்பவை ஏற்படவில்லை. ஏன்? தாயை வைத்தே தகப்பனை அறிகின்றோம். தாயின் அன்பு சிறந்தது. பெற்ற தாய் மனம் பித்து. கைக்குழந்தைப் பருவமுதல் நடைபயிலும் நாள் வரை தாய் முத்தியும் மோந்தும் சைகை காட்டியும் பேசப் பயிற்றுகின்றனள். தாய் சொன்ன சொல்லையே குழந்தையும் சொல்லும். தகப்பன் தாய்போன்று எப்பொ ழுதும் உடனிருந்து பிள்ளையுடன் பழகுவதில்லை. படிக்கும் பருவத்தில் 'தந்தைசொல் மிக்க மந்திரமில்லை' என்பதை மக்கள் உணர்கின்றார்கள்.

## 24. தாய்மொழி போற்றல்.

ஒவ்வொரு வகுப்பாருக்கும் இந்நாட்டில் ஒவ்வொரு மொழி ஏற்பட்டிருக்கின்றது. அது தாய்மொழியே யாகும்.

தாய்மொழியைக் கசடறக்கற்றல் தாயை வணங்குதலொக்கும். கசடறக்கற்றுப் பேசி எழுதிப்பழகுதல் அறிவுடை மக்கட்கியல்பாகும். ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தாய்மொழியை நன்றாகக் கற்கவேண்டும். தாய்மொழியிலுள்ள பன்னூல்களைக் கற்று ஆராயவேண்டும். தாய் மொழியைக் கல்லாத மக்களுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும். புதிய புதிய அறிவுநூல்களை இயற்றித் தாய் மொழி சிறப்படையச் செய்யவேண்டும்.

ஆங்கிலேயர் தாய்மொழியை எவ்வாறு போற்றுகின்றனர்? பிறமொழிகளிலுள்ள அருமையான நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அவற்றை எங்கும் பரப்புகின்றனர். அவ்வாறு பரப்புவதால் தங்கள் மொழி செழிப்படைகின்றது. வாணிபங்கருதிச் செல்லும் நாடுகளிலெல்லாம் தங்கள் மொழியைப் பரவச்செய்வதால் அது உலக மொழியாகின்றது. அவ்வாறு செய்வதற்குத் தனவந்தர்கள் முன்வருகின்றனர். திறமையுள்ளவர்கட்குச் செல்வத்தையளித்துப் பிறநாட்டு மொழிநூல்களை மொழிபெயர்த்துப் பதிப்பிக்கின்றனர். பதிப்பதற்கு அழுத்தகங்கள் பல ஏற்படுத்தியுள்ளர். கையாலெழுதி முடியாத நூல்களை ஆயிரக்கணக்காக அச்சிலியற்றிப் பரப்புகின்றதால் பொருளுமாக்குகின்றனர். அறிவு பரப்பும் புண்ணியத்தையும் பெறுகின்றனர்.

தமிழ் மக்களுக்கு வாசக நூல்கள் மிகுதியாகக் கிடையாதிருந்தன. பாநூல்கள் ஓங்கி வளர்ந்தன. உரைகளைத் தவிர வாசகநடையில் நூலே இல்லை எனலாம். ஆங்கிலேயரைப் பின்பற்றித் தமிழில் வாசக நூல்கள் நாள்தோறும் எத்தனையோ வெளியிடப்படுகின்றன.

ஆங்கிலேயரைப் பின்பற்றியே தமிழ்மக்கள் நாள்தாள், வாரத்தாள், திங்கள் தாள், பருவத்தாள் முதலான தாள்களில் பல ஊர்களில் நிகழும் நிகழ்ச்சியையும், வெளியீடுகளையும், புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டனவற்றையும் எழுதிப்பல்லாயிர மக்களுக்கு அறிவு கொளுத்திவருகின்றனர்.

தபால், தந்திகளால் உலக நிகழ்ச்சிகள் அன்றன்றே உலகமெங்கும் பரவுகின்றன. கப்பல்கள், ரெயில் வண்டிகள் மூலமாக தூரதேயத்திற் காணப்படும், ஆக்கப்படும் எப்பொருளும் கூடிய விரைவில் எங்கும் கொண்டுபோகப்படுகின்றன. சிறுவர் சிறுமியர் வாயிலும் மோட்டார்கார் என்ற சொற்றொடர் வழங்கிவருகின்றது. விமானங்களும் ஆகாயக்கப்பல்களும் ஆறுமலைகளாற் பிரிக்கப்பட்ட பலதேயங்களை ஒரு தேயமாக்குகின்றன. ஒரு தேயமாகும்பொழுது மொழியும் ஒன்றேயாகும்.

நம் தமிழ்மொழி அத்தகைய மொழியாகலாகாதா? நம் தாய்மொழியைப் போற்றுவோமானால் அது உலக மொழியாதல் கடினமாகுமோ? உலகப்படைப்பில் வழங்கிய மொழி தமிழ் மொழியென்று அறிவுநூல் ஆராய்ச்சியாளர் பகருகின்றனரே! அங்ஙனமாயின் தமிழ்மொழியாகிய நம் தாய்மொழி ஏன் எம்மக்களுக்கும் இனியும் தாய்மொழியாகாது? தமிழர்களே, விழிமின், ஊக்கங்கொண்மின், பாடுபடுமின். முயற்சி திருவினையாக்கும். இறைவன் அருள்க.

## 25. நாட்டார் கூட்டம்.

பல நாடுகளை யாளும் அரசர்களுடைய பிரதிநிதிகள் ஒன்றுசேர்ந்து கூடும் கூட்டம் நாட்டார் கூட்டமெனப்படும். முன்காலத்தில் ஐம்பத்தாறு தேசமன்னர்கள் இருந்தனரென்பதைத் தவிர அவர்கள் எங்கணுமினும் கூடினார்களென்பதில்லை. 1914-ல் நிகழ்ந்த ஐரோப்பிய யுத்த

முடிந்த பின்னர் இத்தகைய கூட்டமொன்று ஏற்பட்டு உலக நன்மைகளைக் கருதிவருகின்றது. ஐரோப்பா கண்டத்தில் வெர்சேல்ஸ், ஜெனீவா முதலான நகரங்களிற் பலபிரதிநிதிகளும் ஆண்டுதோறுங்கூடிப் பல காரியங்களைப் பற்றிப் பேசிவருகின்றனர். இக்கூட்டத்திற்கு இந்தியர்களிலொருவர் ஆண்டுதோறும் போய்வருகின்றனர்.

இக்கூட்டத்திற்குப் பிரதிநிதிகள் அந்தந்த நாட்டின் விஸ்தீரணம்,வரும்படி, செல்வாக்கு ஆதியனபற்றி ஒருவர், இருவர், மூவரெனத் தெரிந்தனுப்பப் படுகின்றனர். அமெரிக்கர் பிரிந்துகொள்ளும் எண்ணமுடையர் என்று வெளியாகின்றது. இற்றலியும் அவ்வாறே நடக்கப்போவதாகக் கேள்வி. ஜெர்மனி சமீபகாலத்திற்றான் அதில் சேர்ந்தது. இக்கூட்டத்தில் பூரணமான ஐக்கியம் ஏற்பட்டால் உலகத்திற்கு நன்மை விளையும். ஐக்கியம் ஏற்படவேண்டுமானல் விஸ்தீரணம், வருவாய், செல்வாக்கு இவை சம்பந்தமில்லாமல் ஒவ்வொரு தேசத்திற்கும் ஒரு பிரதிநிதி என்று தீர்மானித்தல் முக்கியம். அவ்வாறு நிகழுமாறு ஒவ்வொரு தேசத்தாரும் முயலவேண்டும்.

கள்ளர்களிலும் ஒற்றுமை யுண்டு. சுதந்திரம் பிரிக்கும் கள்ளர்களில் தலைக்கட்டுகள் ஏற்பட்டுள. திசைகாவல், குடிகாவல் செய்வோர் வரும்படியை தலைக்கட்டு வீதமே பங்கிட்டுக் கொள்கின்றனர். ஒற்றுமையினுல் விளையும் பலமும் அமைதியும்.

## 26. சமாதானம்.

குடும்பங்களில் புது நாகரிகம் அதிகப்பட ஒற்றுமை வேற்றுமையாகப் போகின்றது. ஒவ்வொரு வீட்டிலுமுள்ள உறுப்பினர்கள் தாந்தோன்றிகளாகத் தங்களுக்குத் தோன்றியவாறு பிறருடைய நலத்தையும் இடுக்கணையுங் கவனியா

மல் கட்டுப்பாடின்றி நடப்பதால் ஐக்கியங் குறைந்து சமூகம் கெட்டு வருகின்றது. இது குடும்பத்திற்குக் கேடு விளைப்பது மன்றி நாட்டிற்கும் கேடு விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை. சமாதானமென்பதற்கு சமமானநிலை என்பதே பொருள். ஆணவம், செருக்கு, தருக்கு உண்டாகும் பொழுது 'நான் பெரியன்' என்ற வாதமுண்டாகின்றது, சமமான நிலைமை மறந்துபோகின்றது.

தூயமனதும், தன்னலத்துடன் பிறர் நலத்திற்கு உழைத்தலும் ஒற்றுமைக்கு அடிப்படை. அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இவை நான்கும் மனவமைதியைக் கெடுக்கும். மனவிகற்ப முண்டுபண்ணும் இக்கொடிய குணங்களை ஒழிக்க முயலுவது இன்றியமையாததாம். இத்தீய குணங்களே மனத்திற்படியும் மாசாகும். மாசற்ற மனமே ஏசற்ற இன்பம். சிற்றின்பம், பேரின்பம் எய்துவதற்குத் தெள்ளிய மனம் வேண்டும். தெளிந்த மனதுடையாரே ஒள்ளியரெனப் படுகின்றனர். ஒளி, புகழ் எய்தியவருக்கு அமைதி ஏற்படுகின்றது.

கல்வி, அறிவு, ஞானம், பொருள், ஒழுக்கம் இவற்றால் சமம் ஏற்படும். சமமாகிய ஸ்தானம் பெறுவதற்கு இவையே தக்க வழிகளாம். புயவலி, பொருள்மிகுதி, ஆள்கூட்டம், ஆயுதப் பெருக்கம், கப்பற் சிறப்பு, ஆகாயவூர்திகள் இவை மனத்தூய்மை இல்வழி தீமையையே விளைவிக்கும். விமானங்கள் ஏற்பட்டபின் மலை, யாறு, கோட்டை, துருப்பு முதலானவை படையெடுப்பவருக்குத் தடையாவதில்லை. மலை யாறுகளாற் பிரிக்கப்பட்ட பல தேசங்களும் ஒரு தேசமாவதற்கும், எத்தேசத்தாரும் ஒரு தேசத்தினராகி ஒருமைப்படுவதற்கும் விமானங்களே துணைக் கருவிகளாகும். அழிக்கின்ற கருவிகளே அளிக்கவும் செய்யும். அழித்த

லும் காத்தலும் ஓம்பலும் மனவடக்கம் மன அமைதியைப் பொறுத்த தாகும். சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல மனமும் இருத்தல் வேண்டும். 'பிறவும் தம்போல் செயின்' சமமும் சமாதானமும் உண்டாகும்.

வெளிப்படையாக உறவு காட்டுதலும், உள்ளத்தில் வெயர்த்தலும் உட்பகையாகும். 'செப்பின் புணர்ச்சிபோற் கூடினும் கூடாதே உட்பகை யுற்றகுடி' என்றனர் நாயனூரும். 'கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து மாணுத செய்வான் பகை' என்பதும் குறளே.

சமாதானம் நாடும் ஒவ்வொரு தேசமும் தற்காலத்தில் ஆட்படை, கப்பற்படை, ஆயுதப்படை முதலியனவற்றில் உட்கலகம் ஏற்படாமலிருப்பதற்கு வேண்டுமட்டும் வைத்துக்கொண்டு மீதத்தை எடுத்துவிடுதலே சமாதானத்திற்கு மூலமாகும். வாணிகப் பெருக்கமும், பொருளாசையும், வான்ஆளும் அவாவும் உளதேல் சமாதானம் என்றும் எவணும் நிலாவாது.

## 27. பெண்கள் கடமை.

பெண்கள் இலையெனில் உலகமும் இலை என்றனர் முதியோர். அன்னூர் தங்களைக் காத்துக்கொள்ளுதல் முதற் கடமை. அவர் கற்பென்னும் திண்மை பெறவேண்டும். கல்வி யறிவை வளர்க்க வேண்டும். கற்பும் கல்வியும் சுயமரியாதைக்கு வித்துக்களாம். சுயமரியாதைக்குச் சிறிதும் பின்னமின்றிச் சொன்ன சொற்களைக் காத்தலும் அன்னூர் கடமையே. எப்பொழுதும் சொற்சோர்வு படாதிருத்தலுமல்லாமல் புகழைத்தரும் விருந்தோம்பல் போன்ற நற்செயலையே ஆற்றல்வேண்டும். தங்களைப் பேணுவதுபோல தங்கள் நாயகர்களைப் பேணுவதும் கடமையாகும். பெண்

கள் கொண்டாருடன் இன்புற்று வாழ்வதன் பயன் நன் மக்களைப் பெறுதலாம்.

மக்களைப்பெற்ற தாய்மார்கள் பிள்ளைகளைப் பேணி வளர்த்தல் பெருங் கடமையன்றோ? காலமறிந்து உணவளித்தலும்; பாராட்டுதலும், அறிவு புகட்டுதலும், சான்றோராக்குதலும் அன்னாருக்குச் சிறந்த ஒழுக்கங்களாகும். 'அன்பின் தளைகள் பிள்ளைக'ளெனப் படுதலின் பிள்ளைகளைப் பேணுவதால் அன்பு பெருக்க முறுகின்றது. தாய்மார்களுக்குப் பொருள் பிள்ளைகளே. 'பொல்லாத சேயெனினும் தாய் தள்ளல் நீதமோ, புகலிடம் பிரிது முண்டோ'என்றார் தாயுமானாரும்.

பெண்கள் தம் கணவர்களின் வருவாய் வளத்துக்குத் தக்கவாறு இல்லற நடாத்துதல் பெரும்புகழாம். அங்ஙனஞ்செய்வதால் வறுமை வந்தடையாது. வருவாய்க்கு அதிகமாகத் துணி மணிகளிற் செலவிடும் பெண்கள் கணவனுக்குத் தீரா இடும்பைகளாவர். நிரப்புறின் மனவமைதி யுண்டாகாது. சுயமரியாதையை இழக்க நேரிடும். இக்கடமையை வழுவற நடாத்துதலே கொண்டானைப்பேணுதலாகும்.

பெண்கள் தங்களுடைய கடமைகளைச் செவ்வனே செய்யாமல் காரண காரியமின்றி அக்கம் பக்கத்திலுள்ள வீடுகட்குச் சென்று வாயாடுதலும் போர் விளைத்தலும் தகாத செயல்களாம். தாயைப்போல பிள்ளை என்பது முதுமொழி. பிள்ளைகளின் நலங்கருதி யாயினும் தாயானவள் தகாத நடைகளை ஒழித்தல் தகைமையாகும்.

வீடு வாயில்களை விளக்கமுறவைத்துக் கொள்ளுதலும் பண்ட பாண்டங்களைப் பாழாக்காமற் பாதுகாத்தலும், சுவை பொருந்திய உணவுகளைக் காலத்திலாக்கலும், மாமன் மாமிகளைத் தந்தை தாய் போற் பேணுதலும், உற்றாருக்கு

உதவுதலும், வருந்தி வந்தவருக்கு ஈதலும், பெண்களின் ஏனைய கடமைகளாகும். பொல்லாத குணம் வாய்ந்த பெண்களுடன் வாழ்தல் பாம்புகளுடன் உறைவதாகும். ஆடவர்கள் குணங்கெட்டவர்களாயினும் அவர்களுடன் வாழ நேரிடும் பெண்கள் கூடியவரை பொறுமையும் அமைதியும் உடையவர்களாயிருத்தல் நலம். இரண்டு கைகளும் தட்டினுல் ஓசையுண்டாம். உலகத்தின் நன்மதிப்பை நாடும் பெண்கள் உலகப் பழிப்பு எய்தாவண்ணம் பார்த்துக்கொள்ளுதல் தலை சிறந்த கடமையாகும்.

கல்வி கற்ற பெண்கள் தாய் தந்தையருக்குத் தக்க உதவியாவர்; கொண்ட கணவருக்கு மந்திரி, தந்திரிகளாவர்; தாம் பெற்ற பிள்ளைகட்குக் குருவாவர். 'இல்லாளகத்திருக்க இல்லாத தொன்றில்லை' என்பது யாது காரணம் பற்றி யென்பதை உணர்ந்து உய்யக்கடவர்.

கற்றநூல் துறைபோய் கடிமனைக்கிழவன்
நற்குணம் நிறைந்த கற்புடை மனைவியொடு
அன்பும் அருளும் தாங்கி இன்சொலின்
விருந்து புறந்தந்து அருந்தவர்ப் பேணி
ஐவகை வேள்வியும் ஆற்றி, இவ்வகை
நல்லறம் நிரப்பி, பல்புகழ் நிறுவிப்
பிறர்மனை நயவான் அறன்மனை வாழ்க்கைக்கு
வரையா நாளின் மகப்பேறு குறித்து
பெருநலம் துய்க்கும் பெற்றித் தன்றே'.

## 28. கண்ணுடி.

தற்கால நாகரிகத்தில் கண்ணுடி இன்றியமையாத பொருளாகும்; சிறுவர் சிறுமிகளுக்கும் மூக்குக்கண்ணுடியில்லாமல் பார்க்க முடியாது, பார்க்குங் கண்ணுடியின்றி தலைமயிர் வாரலும், முகம் பார்த்தலும், சட்டை பொத்தான் சுருளாமல் ஒழுங்குப் படுத்தலும் இயலா.

கண்ணாடி என்பது கண் ஆடுகின்றதைக் காட்டும் பொருள். 'அடுத்தது காட்டும் பளிங்கே போல்' என்றதனால் அதற்கு வழக்கமான பெயர் பளிங்கு என்பது தெற்றெனத் தெளிவுறும். தர்ப்பணம், ஸ்படிகம், என்பன வடமொழிச் சொற்கள்.

கண்ணாடி செய்யு முறை யாது? கண்ணாடி செய்பவர்கள் சிலிக்கா, சோடா, போட்டாஷ் (அல்லது மணல், உப்பு, சாம்பல்) இவை மூன்றையும் ஒன்றுசேர்த்துக் கலந்து உருகவைக்கும் சட்டிகளில் வைத்து பெரிய உலையில் உருகச்செய்து பசைபோலாகும்வரை அதனை ஆற அல்லது குளிர வைப்பார்கள். குளிர்ந்த பசையைக் கண்ணாடிகளாகவும், பொத்தல் (பாட்டில்) களாகவும், தகட்டுக் கண்ணாடியாகவும் செய்வது வழக்கம்.

உருகிய பொருள்களினின்று காற்றுக் குமிழிகள் வெளிவரும். அப்பொழுது அவற்றிலுள்ள மாசுகள் நீங்கும். இவை யிரண்டும் நீங்கியபின் அது உருட்டப்பட்டுப் பல சொரூபங்களாகச் செய்யப்படும். உருகவைத்து ஆறவைக்கும் முறைக்கு 'அனீல்' எனப்படும். ஒயின் கிளாஸ், கரகங்கள், பாட்டில்கள், தமிளர்கள், இவைபோன்ற பல பெயருள்ள கண்ணாடிச் சாமான்கள் பல உள. வெட்டுக் கண்ணாடி, தகட்டுக் கண்ணாடி, பூப்போட்ட கண்ணாடி முதலானவை சிறிது மாறிய வழிகளில் ஆக்கப்படும்.

பல நிறங்களைக் கண்ணாடியில் ஏற்றுவது எங்ஙனம்? இரும்புடன் உயிர்வாய்வு சேர்ந்ததைக் கண்ணாடிப் பொருள்களுடன் சேர்த்தால் பச்சை நிறமுண்டாகும். தங்கத்துடன் உயிர் வாய்வு கலந்ததைக் கண்ணாடிப் பொருள்களுடன் சேர்ப்பின் செம்மை நிறமுண்டாகும். வெள்ளியுடன் உயிர்வாய்வு கலந்ததைக் கண்ணாடிப் பொருள்களுடன் சேர்ப்பின் மஞ்சள் நிறமுண்டாகும்.

சில ஆண்டுகளாக நம்மவர்கள் ஜெப்பான் தீவிற்குச் சென்று பற்பலவகைக் கண்ணாடிகள் செய்யுமுறைமையை அறிந்து நம் தேசத்தில் கண்ணாடி செய்கின்றனர். தக்க பொருளுதவி கிடைக்குமாயின் இத்தொழில் சிறப்படையும்.

## 29. உப்பு.

உப்பின்றி உணவில்லை என்பர் உலகத்தவர். பல உணவுகளுக்கும் சுவையைக் கொடுப்பது உப்பேயாம்.

உப்பு எப்படிச் செய்யப்படுகிறது? கடல்நீரினின்றும், பூமியினடியினின்றும், உப்பு ஊற்றுகளிலிருந்தும் உப்பு பெறப்படுகின்றது. கடல்நீரை கடலோரத்தில் அமைக்கப்படும் சிறு பாத்திகளில் பாய்ச்சி, அந்த நீர் ஒரு பாத்தியிலிருந்து அடுத்த பாத்திக்குப் போகும்படி செய்து, அவ்வாறு பாய்ந்த நீர் சூரியவெப்பத்தால் நீராவியாக மாறிப்போனதும் உப்பு பாத்தியிற் படிந்து விளைகின்றது. தற்காலத்தில் இவ்வாறு உப்பை விளைவிப்பது சர்க்காருடைய அனுமதியின்றி கூடாது. உப்புப் பாத்திகளுள்ள செல்வர்கள் பலர். உப்பு அதிகமாக விளைவதால் அது சொற்ப விலைக்கு விற்கப்படுகிறது. படிக்கு இரண்டணா வீதம் விற்று வந்த உப்பை ஒரு அணாவிற்கு விற்கும்படி ஏழாம் எட்வர்டு மன்னருக்கு முடி சூட்டிய காலத்தில் கட்டளை பிறப்பிக்கப் பெற்றது. பின்னர் போர் நிகழ்ச்சியால் உப்பின் விலை சிறிது அதிகமாகி இப்பொழுது விலை இறங்கிய பாடில்லை. ஏழை எளியவர்கள் முதல் முடிமன்னர்வரை உப்பை உபயோகியாதவர்கள் இலர்.

பாறையுப்பு பூமியடியினின்று பெறப்படுகின்றது. இவ்வகை யுப்புள்ள இடங்களில் சிறு துவாரங்களைச்செய்து அதன் வழியாகக் குழாய்களைச் செலுத்தி குழாய்கள் மூல

மாக நீரை விட்டு பூமியிலுள்ள உப்பைக் கரையச் செய்து உப்புக் கலந்த நீரை குழாய் வழியாக மேலேற்றி வெப்பத்தால் நீர் சுட்டு மாறும்பொழுது படிகின்ற உப்பு பாறை உப்பு என்று சொல்லப்படுகின்றது.

உப்புமண் தரையினின்றும் உப்பு எடுக்கப்படுகிறது. உப்பு மண்ணைக் கரைத்துக் காய்ச்சி உப்பு எடுப்பது சட்டத்திற்கு விரோதமாகையால் அவ்வாறு உப்புச் செய்வதில்லை.

உப்பு ஊற்றுகளினின்றும் நீரையெடுத்துக் காய்ச்சி ஆவியாக மாற்றப்பட உப்பு அடியிற் படியும்.

உப்பு வரிப்பணம் சர்க்காருக்கு மிகுதியாகக் கிடைப்பதால் அதற்கென்றே ஒரு டிபார்ட்மென்று ஏற்பட்டுளது. அதிலுள்ள அதிகாரிகள் உப்பளங்களைப் பார்த்தலும், உப்புமண் உப்பைச் செய்கிறவர்களைத் தடுத்துத் தண்டனைக்குட்படுத்தலும் ஆகிய செயல்களைச் செய்துவருகின்றனர்.

சுத்தஞ்செய்யாத உப்பு வெண்ணிறமாக இராது, அதனைக் கரைத்துக் காய்ச்சினால் வெண்மையாயிருக்கும்.

உடம்பில் உப்புளது. ஆதலால் உடம்பிற்கு உப்புத் தேவை. பாறை உப்பும் உப்பு ஊற்றுகளின் உப்பும் ஆஸ்திரியா, உருஷியா, ஜெர்மனி தேசங்களில் மிகுதி.

எவ்வகையினும் இழிந்த மகனை 'அவன் அவனுடைய உப்பு விலை பெறான்' என்று எள்ளுவது ஆங்கிலேயர் வழக்கம்.

உப்பு சுவை கொடுப்பதுமன்றி நாற்றத்தையும் மாற்றும்; அது ஊறுகாய், அடைகாய் ஆகிய சாமான்கள் கெட்டுப்போகாமல் நெடுநாளிருக்கவும் செய்யும்.

'உப்பமைந் தற்றால் புலவி, அதுசிறிது
மிக் கற்றால் நீள விடல்'

என்பதில் உப்பு மிகுதலால் உணவு கெடும் என்ற உண்மை தொனிக்கின்றது.

ஊடிப் பெறுகுவம் கொல்லோ, நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு'.

என்ற குறளில் சீரான உப்பால் இனிமை தோன்றும் என்பது பெறப்படும்.

## 30. விளக்கு.

முன்காலத்தில் இந்தத் தேசத்தில் விளக்குகள் மண்ணாற் செய்யப்பட்ட தகளிகளே. புன்னைக் கொட்டையிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய்யை அகல்களில் விட்டு நூல் திரியாவது துணித்திரியாவது போட்டு தீத்தட்டிக் கல்லாலுண்டாக்கப்படும் நெருப்பைப் பஞ்சில் பற்றவைத்துத் திரியில் கொளுத்தப்படும். வெளிச்சம் பரவுமாறு தகளிகள் மரத்தண்டுகளின்மேல் வைக்கப் பெற்றுவந்தன.

அதன்பின் பித்தளை விளக்குகள் செய்யப்பட்டன. அதற்குத் தண்டு, பாதம், மேற்பாகம் முதலியன ஏற்பட்டன. எண்ணெய் அஃதே. ஆலயங்களில் தேங்காய்நெய்யும் ஆ நெய்யும் வழங்கிவந்தன.

அதன் பின் துத்தநாகம் தகரம் முதலான உலோகங்களாற் செய்யப்பட்ட விளக்குகள், கண்ணாடி சிம்னி (புகைப் போக்கி)யுடன் விளங்கின. புன்னைக்கெண்ணெய்க்குப்பின் தேங்கா யெண்ணெய் உபயோகப்படுத்தப்பட்டது. மெழுகுவர்த்தியும் ஷேடுகளுமுள்ள விளக்குகள் தோன்றின. காற்றிலணையாத விளக்குகள் (லாந்தல்கள்) பின்னர் செய்யப்பட்டன. இவற்றிலெல்லாம் மண் எண்ணெய் (கெரோசின் எண்ணெய்) வழங்கி வரப்படுகின்றது; இதனால் விளையுந் தீமைகளுக்கு அளவில்லை. விலைகுறைந்துள்ளதா யிருப்பதால் இவ்வெண்ணெயில்லாத வீடு குடிசைகள் கிடையா.

சபை யெங்கும் வெளிச்சம்பெற விரும்பி காஸ் லைட்டு கள் ஆக்கப்பெற்றன. இவை நன்மை தீமை வீடுகளிலும் நாடகசாலைகளிலும் உபயோகப்பட்டு வருகின்றன.

அதன்பின் மின்சார விளக்குகள் வந்தன. இவை சினிமாக் கொட்டகை களிலும் ரெயில்களிலும் மிகுதியாகக் காணப்படும்.

விளக்கு ஒளி அதிகப்பட கண்ணொளி மங்குகின்றது. பலவகையான புதிய விளக்குகள் வழங்கிவரு மிடங்களில் தீவிபத்துக்களும் அதிகம். கண்ணொளி கெடவே கண்ணாடி பெருவழக்காயிற்று. கண்ணாடி வியாபாரிகளும் பெருகியு ளர். இவற்றிற்கேற்படும் பணச்செலவு குடும்பங்களைப் பாதிக்கின்றது. கண்ணுக்குக் கெடுதி செய்யாத விளக்கு கள் பழையகாலத்து புன்னைக்கெண்ணெய் விளக்கும் தேங் காயெண்ணெய் விளக்குகளுமே. இவை மறுபடி வழங்கப் படுமாயின் கண்பெற்ற மக்கள் கண்ணொளியை இழக்கார்.

எவ்வுறுப்புக் கெடினும் கண் கெடலாகாது. நாகரிக முறையில் இவ்வுறுப்பே நாடோறும் கெடுதலடைந்து வரு கின்றது. சில்லாண்டுகளில் உலகமெங்கும் கண் கெட்ட மக் களே காணப்படுவர் போலும்! ஆந்தைகள் பகலொளியில் கண்ணைத் திறந்து வெளியேறுமல் இரவில் திரிகின்றன. மக்களோ பகலிலும் இரவிலும் கண்ணொளி யிழந்து நான்கு கண்ணர்களாகத் திரியும் காலம் வந்துற்றது. இது பெற் ஞேர்களும் பிள்ளைகளும் உற்றுநோக்கற்பாலது. இறைவ னருள் புரிக.

## 31. பள்ளிக்கூடம்.

முற்காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடம் தவிர வேறு கல்விச்சாலையாவது கல்லூரியாவது கிடையாது. கண்ணென மதிக்கப்பெறும் எண்ணும் எழுத்துமே அண்ணவிகள்

சொல்லிக்கொடுத்து வந்தனர். அதற்கு மேற்பட்ட படிப்பு வேண்டுமெனின் கற்றுத் தெளிந்த சான்றோரை அணுகி அவருக்குப் பணிவிடைகளியற்றி அவருடைய காலநேரம் பார்த்துக் கற்றுக்கொள்வது வழக்கம். மெய் கண்டார், அகத்தியர், மீனாட்சிசுந்தரம் பிள்ளை, சிவஞானசுவாமி முதலான பெரியார்களிடம் முப்பது நாற்பது வரை மாணவர்கள் பாடங்கேட்டுப் பல துறைகளிலும் பயின்று பிரபல வித்வான்களாயின ரென்பது எவருமறிந்ததே.

ஆங்கில ஆட்சியில் பள்ளிகளும் கல்லூரிகளும் ஒவ்வொரு பெரிய ஊரிலும் ஏற்படுத்தப்பட்டு ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஆங்கிலமும் தாய்மொழியும் பல நூல்களும் கற்றுப்பட்டம் பெற்று வருகின்றனர். முற்காலத்தில் அரசர்கள் கல்விச்சாலைகளை ஏற்படுத்தவில்லை. வித்வான்களுக்குத்தக்க பரிசுகள் அளித்துத் தாய்மொழிகளை வளர்த்து வந்தனர். தற்காலத்தில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் தொகை பெருகிவருகின்றது. அறிவும் வளர்ந்து வருகின்றது. ஆடவர் பெண்டிர் படித்துப் பட்டங்கள் பெறுகின்றனர். அவர்கள் படித்ததை அவகாசத்தில் சிந்தனை செய்தல் நலம். படிப்பின் ஊதியம் நல்லொழுக்கமும், தியானமும், பயனுறப் பேசுதலுமேயாம்.

பள்ளிக்கூடக் கட்டிடங்கள் பெருஞ்செலவு செய்யப்பெற்று மாடமாளிகைகள் போன்று எங்கும் திகழ்வதை ஊர் ஊராகக் காணலாம். மாணவர்களுக்காக காற்றும் வெளிச்சமும் போதுமான விஸ்தீரணமுமுள்ள கட்டிடங்கள் அமைக்கப்பெற்று வருவதை எங்கும் பார்க்கலாம். குறிப்பிட்ட நேரத்தில் பாடங்கள் ஓதப் பெறுதலையும் நாடோறும் பார்க்கின்றோம்.

பள்ளிக்கூடமொன்று திறக்கப்படின் சிறைச்சாலையொன்று மூடப்படும் என்றனர் மேனாட்டுப் புலவரொருவர்.

அதாவது கல்வி கற்பதால் முரட்டுத்தனமான குணங்கள் சாந்தப்பட்டு நாகரிக முதிர்ந்து சட்டப்படி நடந்து வருவதால் குற்றவாளிகளின் தொகை குறைந்து தண்டனை விதிக்கப்பெற்று சிறைச் சாலைக்கு அனுப்பப்படுபவர் தொகை குறைந்து வருகின்றது.

பள்ளிக்கூடங்களில் ஊருக்குத் தக்க பாடங்களை யமைத்துக் கல்வி பயிற்றுவிப்பது மன்றி சுகாதாரமும் கவனிக்கப்பட்டு வரவேண்டும்.

ஆண்டுதோறும் படிப்புச் சோதிக்கப்பெற்று மேல் வகுப்புகளுக்குப் பிள்ளைகள் போவதுமன்றி திறமையுடைய ஏழை எளிய மாணவர்களுக்குச் சம்பளமும் பரிசும் அளிக்கப்படுகின்றன.

இன்னும் போதுமானபடி அடிப்படைக் கல்வி பரவவில்லை. ஏனெனில் பல்கலை மாடங்கள் புதிதாக ஏற்பட்டு வருகின்றன. அவற்றிற்கு இலட்சக் கணக்காகப் பொருளளிக்கப்படுகின்றது. அடிப்படைக் கல்விக்குப் பணமில்லை.

அடிப்படையான கல்வியைப் பரப்புவதற்கு சிற்சில சீர்திருத்தங்கள் ஏற்படப் போகின்றன. அதற்காக ரூபாய்க்கு இரண்டு தம்படிவீதம் வரியொன்று விதிக்கப்பட்டிருக்கின்றது.

முன்னிருந்தபடி அடிப்படைக் கல்விச்சாலைகளுக்கு 'ரிசல்ட்ஸ் கிராண்டு', தேர்தலுக்குத் தக்க பரிசு அளிக்கப்படுமானால் ஆசிரியர்களுக்கு வரும்படி அதிகப்படும், பிள்ளைகளுக்குப் படிப்பு விருத்தியாகும்.

தற்காலத்தில் தேர்தல் சோதனை மோசம். வாத்தியாயருக்குச் சம்பளம் உறுதி, பிள்ளைகள் படிப்புக்கு இறுதி என்றிருக்கின்றது. சோதிப்பவர் தொகை பெருகப் பெருக

படிப்புக் குறுகி வருகின்றது. வாத்தியாயர்களுக்கு சொல்லிக்கொடுக்க வேண்டுமென்ற அக்கரை குறைந்துகொண்டே போகின்றது. இது கவனிக்கத் தக்கது.

## 32. புத்தகசாலை.

புத்தகம் ஏடு என்பன ஒரு பொருள் கிளவிகள். புத்தகங்களை வைத்திருக்கு மிடம் புத்தகசாலை.

புத்தகம் என்பது மயிலிறகு. புத்தகம் முன்காலத்தில் மயிலிறகைக் கொண்டு எழுதப்பட்ட நூல் என்பர். எழுத்தாணியால் ஓலையில் எழுதப்பட்டது ஏடென்றாயிற்று.

'புத்தகம் அஸ்த பூஷணம்'. அதாவது புத்தகம் கைக்கு அழகு. அடிக்கடி புத்தகத்தைப் படிப்பவனே அதனைக் கையில் வைத்துப் போற்றுவான்.

> 'புத்தகங் கைக்கொண்டு புலித்தோல் வீக்கிப்
> புறம்பய நம்மூரென்று போயினாரே'

புத்தகத்தில் பல பெரிய உண்மைகள் அடங்கியிருக்கும். அவ்வுண்மைகளை யறிதலால் இகபர சுகம் கிடைக்கும். உலகியல் நடாத்த முதியோர் அநுபவம் இன்றியமையாதது. அவ்வநுபவம் மேலோர் நூல்களிலேயே காணப்படும். இயற்கைப் பொருளால் வரும் கல்வியறிவொடு அநுபவ முதிர்ச்சியும் வேண்டற்பாலது.

ஒவ்வொரு ஊரிலும் புத்தகசாலை இருக்கவேண்டியது. சிறார்களுக்கும் பெரியாருக்கும் புத்தகசாலை அகத்தியம். விலைகுறைந்த புத்தகங்களை வாங்குதல் தனி மனிதர்களுக்கு இயலும். விலையுயர்ந்த பல துறையிலுள்ள புத்தகங்களைப் புத்தகசாலையிற் பார்க்கலாம். பலரும் அவற்றையெடுத்துப் படிக்கலாம். படிக்குமாசையில்லாதவரும் புத்தகசாலைக்குப் போகும் பழக்கத்தால் படிக்க விரும்புவர்.

அழகான அச்செழுத்தில் பதிப்பித்துப் பயிண்டு செய்யப் பட்ட நூல்களைப் பார்க்கும்பொழுது படிக்கும் ஆசையுண் டாகுமல்லவா?'

புத்தகசாலை ஏற்படுத்துதல் சர்க்காராலும் பல மனிதர் கள் அளிக்கும் சிறு பொருளுதவியாலும், தயாள சிந்தை யுள்ள ஒருவரிருவராலும் ஆகும். கல்வியறிவு வளர்ச்சிக் குப் புத்தகசாலை தேவை. 'கல்லார் மனதில் நில்லான் ஈசன்' என்பதனால் புத்தக சாலையால் ஈசனது அருளும் பெறலாகு மென்பது வெளிப்படை.

குறளாசிரியர் 'புத்தகப்பேயன்' என்று இகழ்ந்துரைக் கப்பட்டனரன்றோ?

"புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள்தெரியார்
உய்த்தக மெல்லாம் நிறைப்பினும்—மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே, பொருள் தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு".

என்பது நாலடி. நன்மாணுக்கர் போற்றுவர், நல்லாசிரியர் தேற்றுவர்.

## 33. மருத்துவச்சாலை.

தமிழ்நூல்களில் கூறப்படும் முப்பத்திரண்டு அறங்க ளில் மருத்துவச்சாலை ஏற்படுத்தி மருந்தளித்தலொன்றும். ஊர்தோறும் மருத்துவர்கள் இருந்து வருகின்றனர். ஔஷ தங்களை வேண்டியபொழுதே செய்து உதவுகின்றனர். மொத்தமாக மருந்தைச் செய்து வைத்துக் கொள்வதற்கு அவர்களிடம் பொருளில்லை. சத்திரமிட வேண்டிய கருவிக ளும் அவர்களிடம் கிடையா.

புத்தசமயம் பரவிய காலத்தில் மக்களுக்கும் மிருகங் களுக்கும் ஏற்படும் நோய்களைத் தீர்ப்பதற்குத் தனித்தனி

யாக மருத்துவச்சாலைகள் ஏற்பட்டன. ஆங்கில ஆட்சியி லும் அவை நடைபெறுகின்றன.

மருந்துகளுக்குச் செலவாகும் பணம் பெருந்தொகை யாம். மருத்துவக் கல்லூரிகளுக்கும் மருத்துவச் சாலைக ளுக்கும் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவாகின்றன. மேனாட்டு மருந்துகளும் முறைகளுமே சென்ற சில்லாண்டு வரை கையாடப்பட்டன. இந்தியர் செய்யும் மருந்துகளை ஆட்சியாளர் அலட்சியஞ் செய்து வந்தனர்.

இந்நாட்டின் வடபாகத்தில் ஆயுள் வைத்தியஞ் சிறப் புற்றுளது. தென்னாட்டில் சித்தவைத்தியம் வழங்கி வரு கின்றது. முகமதியர் காலத்தில் யூநானி வைத்தியம் பரவி யது. ஆங்கில அரசுமுறையில் 'அல்லோ பாதி' கையாளப் படுகின்றது. ஆயுள் வைத்தியத்தின் சிறப்பு தைலத்திலும் சித்த வைத்தியத்தின் சிறப்பு பொடி சிந்தூரங்களிலும், யூநானிவைத்தியத்தின் சிறப்பு பழவர்க்கஞ் சேர்ந்த இனிய இலேகியங்களிலும், ஆங்கில வைத்தியத்தின் பெருமை கூட்டுநீர் மருந்துகளிலும் காணப்படும். நாட்டு வைத்தியர் களுடைய மருந்துகளுக்குக் கடும்பத்தியம் ஏற்பட்டுளது. இரணவைத்தியஞ் செய்யாமல் உள் மருந்து கொடுத்தே புண், காயம், அழுகுநோய், ஆதியன குணப்படுத்தப்படு கின்றன. சித்தவைத்தியத்திற்கும் ஏனைய வைத்தியத்திற் கும் வேற்றுமை யாதெனின் சித்தர் மருந்துகள் பெரும்பா லுஞ் செலவு அதிகமில்லாமல் ஆக்கப்படுகின்றன. இந் நாட்டு வைத்தியர்களுக்கும் ஏனைய நாட்டு வைத்தியர்களுக் கும் வேற்றுமை யாதெனின் முன்னவர் பத்தியத்துடன் பொருட்செலவின்றிச் சத்திரமிடாமல் நோயைத் தீர்க்கின் றார்கள். பின்னவர்களோ கண்ணாற் பார்ப்பதற்கும் காதால் கேட்பதற்கும் நாக்கால் பேசுவதற்கும் கையாலெழுதுவ

தற்கும் காலால் நடப்பதற்கும் ஊர்தியில் வருவதற்கும் இமைப்பொழுதிற்கும் அணுக் கணக்கின்றி ரூபாய்களை பெற்று நோயாளிகளை வறியவர்களாகச் செய்கின்றனர். ஆங்கிலத்தில் 'பொன்னே சஞ்சீவி' 'கோல்டு இஸ் கார்டியல்' என்ற பழமொழியுளது.

கண் வைத்தியர், மூக்கு வைத்தியர், தொண்டை வைத்தியர், மண்டை வைத்தியர், காது வைத்தியர், நெஞ்சு வைத்தியர், ஈரல் வைத்தியர், வயிற்று வைத்தியர், எலும்பு வைத்தியர் என வைத்தியர்கள் மலிந்துளர். ஒவ்வொரு உறுப்பிற்கும் நேரிடும் நோயைத் தீர்க்க வெவ்வேறு வைத்தியர் ஏற்பட்டுளர். அவர்களுக்குக் கூலி நூற்றுக்கணக்கே.

சில்லாண்டுகளாக நாட்டு வைத்தியம் தலையெடுக்க ஆரம்பித்துளது. இந்நாட்டிற்கு எவ்வழியிலும் பொருத்தமானது அஃதேயாதலின் அது நல்லசிறக்குமாறு இறைவனருள்க. சர்க்கார் அதனை ஏற்றுக்கொள்ள இத்துணை காலம் கழிந்தது.

## 34. சிறைச்சாலை.

மநுபோன்ற நாட்டரசர்கள் காலத்தில் சிறைச்சாலை கிடையாது. குற்றம் பெரிதெனினும் சிறிதெனினும் கொடிய தண்டனை விதிக்கப்பட்டது. ஊசியை நகத்திலிறக்குதல், மார்பில் கல்லேற்றி வைத்தல், உறுப்புக்களைச் சேதித்தல் முதலான தண்டனைகளே நிகழ்ந்து வந்தன.

முகமதியர் காலத்தில் கொட்டடிகள் ஏற்பட்டன. நியாய விசாரணையின்றி கொத்துவாலுக்குச் சரியென்று தோன்றிய தண்டனை விதிக்கப் பெற்றுக் குற்றவாளிகள் புழுக்கள் நிறைந்த கொட்டடிகளில் அடைக்கப்பெற்று வந்தனர். அவ்வாறு அடைக்கப்பட்டிருந்த காலம் சிறு பொழுதேயாம். 'ஒருநா ளெழுநா ளாயிருந்தது.'

ஆங்கில ஆட்சியில் பல நியாய மன்றங்கள் ஏற்பட்டுள. குற்றஞ்செய்ததை நீதிபதி கண்கூடாகக் கண்டிருந்தாலும் காதாரக் கேட்டிருந்தாலும் போதாது. சாட்சிகள் சொல்லுவதை வைத்து உண்மை கண்டுபிடித்துத் தண்டனை விதித்தலே நீதிபதியின் கடமையாகும்.

அவ்வாறு தண்டிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடமே சிறைச்சாலையாகும். அதில் போதுமான காற்று உலாவவும், ஒளி பரவவும், போதுமான விடம் ஒவ்வொரு குற்றவாளிக்குங் கொடுக்கப்பட்டிருக்கிறது. பலத்தைத் தரத்தக்க உணவு குறிப்பிட்ட நேரத்தில் அளிக்கப்படுகின்றது. நோயாளிகளைப் பார்ப்பதற்கு வைத்தியப் போராசிரியர் நாள்தோறும் வருவார். அறைகள் குப்பை கூளமில்லாமல் சுத்தமாக வைக்கப் பெறுகின்றது. தரை காய்ந்து ஈரமின்றி யிருத்தலைப் பார்க்கவேண்டுவது அவர்கடமை. அணியக் கொடுக்கும் ஆடையில் அழுக்குப் படியாது சுத்தமாயிருக்கும் பொருட்டு அடிக்கடி வண்ணானுதவி கிடைக்கின்றது. உணவினும் உண்டதறலினிது ஆதலின் குறித்த நேரத்தில் வேலைகள் செய்யுமாறு கைதிகளுக்கு வேலைகள் ஏற்படுத்தப்பட்டுள. ஆதலால் அனேக ஏழைகள் சிறைச்சாலையிலேயே இருக்க விரும்புகின்றார்கள். விடுதலையடைந்த கைதிகளும் களவு சச்சரவு செய்து மறுபடியும் சிறைச்சாலை புகுதல் மானவீனம் என்ற எண்ணமே மறைந்து போயிற்றுப் போலும்.

கைதிகள் மனம்போன்றவாறு வெளிவர இடமில்லை, உற்றாருறவினருடன் வாழ இடமில்லை, பெண்டுபிள்ளைகளைக் காப்பாற்றத் தக்க முயற்சிகளைச் செய்வதற்கு இடமில்லை. இவை தவிர வேறு எவ்வாற்றானும் சிறைச்சாலை வாசம் தேகவாரோக்கியத்திற்கு அனுகூலமா யிருக்கின்றது.

மானத்தைக் கவனிக்கும் மேலோர்கட்கே சிறைச்சாலை நரகசாலையாகத் தோன்றுகின்றது. மானிகளுக்குச் சிறைச்சாலை புகுதலினும் உயிரைத் துறத்தல் எளிதாயிருக்கின்றது.

பெரும் பணஞ் செலவுசெய்து கட்டப்பட்ட மாளிகைகள் போன்ற சிறைச்சாலைகளும், அவற்றைச்சுற்றி உயர்ந்த சுவருள்ள தோட்டங்களும், அவற்றைக்காக்க வார்டர்களும் மேல்பார்க்கும் உத்தியோகஸ்தர்களும் தோட்டங்களில் பல பயிர்களாக்கலும் ஆலை முதலான கருவிகளும் அமைக்கப்பட்டுள.

பள்ளிக்கூடத்தைத் திறக்கிறவன் சிறைச் சாலையை மூடுகின்றான் என்ற உண்மை பரவினால் நாட்டிற்கு நன்மையுண்டாகும்.

## 35. வாசகசாலை.

வாசகசாலையில் புத்தகங்களும் நாள், வாரம், மாதத்தாள்களும் சஞ்சிகைகளும் வரவழைத்து வைத்துளிப்பதால் படிக்கப் பிரியமுள்ளவர்கள் அவண் சென்று படித்து அறிவைப் பெருக்கலாம்.

சர்க்காரும், சர்க்கார் உதவிபெற்றுச் சபையோரும், உதவியின்றி கைப்பொருள்கொண்டு செலவுசெய்யும் பெரியோரும் வாசக சாலைகள் ஏற்படுத்தி யுள்ளார்கள்.

சில வாசகசாலைகளில் மாதக்கட்டணம் செலுத்திப் படிக்கவேண்டும். தயாளச் சிந்தையர் ஏற்படுத்திய சிலவற்றில் இலவசமாகப் படிக்கலாம்.

வாசகசாலையின் பயன் என்னை? சிறுவர்கள் கற்பதற்குப் பள்ளிக்கூடங்கள் அவசியமாயிருப்பதுபோன்று பல தொழில்களைச்செய்யும் ஆடவர்களுக்கு வாசகசாலையே கல்விச்சாலையாகின்றது. பல நாட்டு நிகழ்ச்சிகளை நாள்தோ

றும் வரும் தாள்களில் படிக்கலாம். அதனுல் ஆட்சிமுறை, வாணிகமுறை இவற்றை நன்கறிந்து சீர்பெறலாம். திங்கள் சஞ்சிகைகளில் அறிவு, ஞானத்தைப் புகட்டுங் கட்டுரைகளை வாசித்துப் பயன் பெறலாம். அவகாசம் கிடைக்கும்பொழு தெல்லாம் வீண் பேச்சு, புறங்கூறல், குட்டிக் கலகமூட்டல் முதலான தீயவழிகளில் காலத்தைப் போக்காமல் புத்தகங் களையும் சஞ்சிகைகளையும் படித்து அறிவும் ஞானமும் பெறலாம்.

நாகரிகத்திற்கடுத்த புதியனவற்றைக் கைக்கொள்வதற் கும் பழையனவற்றைக் கைவிடுவதற்கும் வாசகசாலை இன்றி யமையாதது.

ஒவ்வொரு ஊரிலும் வாசகசாலையை ஏற்படுத்துவது நலம். ஓய்ந்த நேரங்களில் தொழில் மக்கள் தாள்களைப் படித்து தொழில் விருத்திசெய்வதற்கு இடமுண்டாகும். பல புத்தகங்களிலுள்ள உண்மைப் பொருள்களைச் சிறிது நேரத்தில் ஒரு தாளை மட்டும் படித்து அறியலாம்.

வாசகசாலைகளில் தாள்களும், புத்தகங்களும் ஒழுங் காக வைக்கப்படும். கேட்டவுடன் தாமிதமின்றி எடுத்துக் கொடுக்கப்படும். பலதுளி பெருவெள்ளமென்றாற் போல இதில் சிறிது, அதில் சிறிது படிக்கப்படின் அறிவு வெள்ள மெனப் பெருகுமன்றோ?

## 36. கிளப்: இளைப்பாறுஞ் சங்கம்.

ஒரு நோக்கத்துடன் பலர் கூடும் கூட்டம் சங்கமெனப் படும். பலர் கூடுமிடத்திற்கு கிளப் என்ற பெயர் வழங்கு கின்றது. தொழில், கல்விப்பயிற்சி, வாணிக விருத்தி முத லானவை கருதிக் கிளப்புகள் பல ஏற்பட்டுள. பல தொழில் களில் அமர்ந்துள்ளவர்கள் பகற்பொழுதில் வாழ்விற்கு ஏற் பட்டதொழில்களைச் செய்து களைத்துப்போய் மாலையில்

பலதுறைபோய நண்பர்களைச்சந்தித்து அளவளாவி, மைதானப் பந்து, மேசைப் பந்து விளையாடியும், சீட்டு, சொக்கட்டான் விளையாடியும், இடையிடையே புதினத் தாள்களைப் படித்தும், அவரவர் இயற்கைககுஞ் சுவைக்கு மேற்றவாறு பொழுது போக்கி இளைப்பாறுகின்றனர்.

பலரைக் காணும்போதும், பலரிடம் பேசும்பொழுதும், பலருடன் விளையாடும்போதும் தொழிற் கவனமும் கவலையும் நீங்கி மனம் மகிழ்ச்சி யடைகின்றது. மனமகிழ்ச்சி பெறுவதால் உடல் நலம் பெறுகின்றது.

பல துறைகளில் முயற்சிக்கின்ற பலருடன் அளவளாவுதலால் பலதுறை அறிவு வளர்கின்றது. அவ்வாறு வளரும் அறிவால் வாழ்க்கை நலமுறுகின்றது.

மனிதன் தனிமையை விரும்பாதவன். தனிமையை விரும்பும் மனிதன் ஒன்று விலங்காயிருத்தல் வேண்டும் அல்லது தெய்வமாயிருத்தல் வேண்டுமென்று பெரியார் ஒருவர் கூறியுளர். இருவர் மூவருடன் இணங்கி வாழவறியாதவன் அடிமை என்று மேற்றிசைப்புலவர் வரைந்துளர். பழங்கதை யொன்றுண்டு. ஓர் அரசனிடம் ஒருவன் பல தாஞ்சென்று தனக்கு ஏதேனும் உத்தியோகந் தரவேண்டுமென்று வணங்கிக் கேட்டனன். கேட்டவன் முழு மூடனென்று அறிந்த அரசன் அவன் வேண்டுகோளுக்கு இணங்கி தக்க சம்பளத்தில் ஒரு வேலையில் அமர்த்தினன். என்னையெனில் அவன் ஒரு அறையிலிருக்க வேண்டும், இருப்பு வசதி, உணவு வசதி அனைத்தும் அருளப்பெறும். மாதந்தொறும் ஏற்பட்ட சம்பளமும் கொடுக்கப்படும். அவன் வெளியே போகலாகாது, வேறு மக்களுடன் பேசலாகாது என்ற நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டன. இதுதானு பெரிதென்று மகிழ்ச்சியுடன் அவன் அந்த உத்தி

யோகத்தை ஏற்றுச் சில வாரங்களாகச் சந்தோஷமாகக் காலங்கழித்தனன். பின்னர் தனிமையாயிருத்தலும் பிறருடன் பேசாதிருத்தலும் கஷ்டமென்றுணர்ந்தான். உடனே அரசனிடஞ்சென்று தான் பார்த்துவரும் உத்தியோகத்தை எடுத்துவிட வேண்டுமென்று மன்றாடினான். அரசன் விடுதலை செய்தான். இதனால் எப்பொருள் கிடைப்பினும் மக்களுடன் கலவாதிருக்கும் உத்தியோகம் உத்தியோகமன்று, அது மனித இயற்கைக்கு ஒவ்வாததென்று அறிந்தான்.

இளைப்பாற விரும்பும் மக்கள் தம்போலியருடன் சொல்லாட விரும்புவர், விளையாட விழைவர். இளைப்பாறும் வழிகளில் துயிலுதலும் ஒன்றே. தூங்குவதற்கு முன் மனக் கவலைகளை யொழித்து அமைதிபெற்று உறங்கினால் தூக்கம் சுகமாயிருக்கும்.

இந்நாட்டில் ஆங்கிலமொழி பரவி வருகின்ற காலத்தில் பலர் கூடி கூலிகொடுத்து உணவுபெற்று உண்ணும் இடத்திற்கு 'கிளப்' என்ற பெயர் வழங்கி வருகின்றது. அது போசன விடுதி 'ஓட்டல்' என்றும் அழைக்கப் பெறுகின்றது. 'சைவாள் கிளப்', 'மிலிட்டேரி ஓட்டல்' என்றெழுதிய பலகைகள் பட்டணங்களில் பல தெருக்களில் பல வீடுகளில் தொங்குவதைக் காணலாம்.

## 37. ஒற்றுமைக்கும் நாணயச்சங்கம்.

சங்கம் கூட்டம்; நாணயம் பொருள், நம்பிக்கை; கூட்டத்தார் ஒவ்வொருவரும் தம் நலம் பிறர் நலம் கருதி உழைத்தல்.

இவ்விதக்கூட்டம் ஏற்பட்டு சில ஆண்டுகளே ஆயின. இக்கூட்டத்திற் சேர்ந்த ஒவ்வொருவரும் பங்கு ஒன்றுக்கு ரூ. பத்து வீதம் பத்துப்பங்குக்கு மேற்படாமல் எடுக்க

லாம். பங்குத்தொகையை மொத்தமாய்க் கட்டலாம். அல்லது ஆறு திங்கள் கொண்ட பகுதி ஐந்தில் பங்குக்கு ரூ. இரண்டு வீதமும் செலுத்தலாம்.

கூட்டத்தார் ஒன்று சேர்ந்து பஞ்சாயத்தார் ஐவரைத் தெரிந்தெடுக்க வேண்டும். அவர்களில் ஒருவர் தலைவராகவும் ஒருவர் அமைச்சராகவும் மற்றுள்ள மூவரும் உறுப்பினராகவும் தீர்மானிக்கப்படும். சங்கத்தின் தலைவர் சங்க விருத்திக்கும் சங்க ரிக்கார்டுகளுக்கும் பொறுப்பாவர். சங்கத்தைச்சார்ந்த கணக்குகளைச் செவ்வனே வைத்துக் கொள்வதும், சங்கங் கூட்டிவைப்பதும், சங்கத்துக்குரிய பகுதி, கடன், வட்டிமுதலான தொகைகளைப்பெற்று யூனியன் பாங்கிக்கு அனுப்புவதும் அமைச்சர் வேலையாகும்.

ஏழை எளியவர்கள் சௌக்கார்களிடம் சிறு தொகைகளை அதிகமான வட்டிக்கு வாங்கி உள்ள சொத்துக்களை இழந்து போகின்றனர். இந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் சொத்தின் அடமானத்தின்பேரிலும் மற்றொரு உறுப்பினர் ஜாமீன்பேரிலும் பங்கொன்றுக்கு ரூ. ஐம்பது வீதம் கடன் கொள்ளலாம். அடமான சொத்து கொள்ளப்படும் கடன் தொகைக்கு மூன்று பங்கு விலை பெறக் கூடியதாயிருக்க வேண்டும். ஜாமீன்தாரும் அதிகமான பங்குகள் எடுத்தவராயும் அல்லது தக்கசொத்துக்களுள்ளவராயும், அல்லது நாணயஸ்தராயும் இருத்தல்வேண்டும். கடன்கொள்பவரும் அத்தகையராயிருத்தல் நலம். தவணை தவறாமல் குறிப்பிட்ட தவணைத்தொகையை வட்டியுடன் செலுத்தத் தக்கவராயிருத்தல் வேண்டும். ரூ. நூற்றுக்கு வட்டி பதினொரு அணா பைசு நாலாகும். ஒரு வட்டி, ஒன்றரை இரண்டு வட்டிக்குக் கடன் வாங்கிக் குடிகள் கெட்டுப்போவதைத் தடுப்பதற்கே இவ்வகைச் சங்கங்கள் ஏற்

படுத்தப்பட்டுள. செலுத்தப்படும் தவணைத் தொகைக்குப் பின்வட்டி கழிக்கப்படும். கையில் கிடைக்கும் பொருளைக் கடன் வகைக்காக வாயிதாவிற்கு முந்தியுஞ் செலுத்தலாம்.

கடன் ஒரு வருஷத்திற்குட்பட்ட கடனென்றும், நீண்டகாலக் கடனென்றும இருவகைப்படும். புதிதாக ஏற்படுத்தப்படும் சங்கங்கள் ஓராண்டுக்குட்பட்ட கடன் கொடுக்கலாம். வாயிதாவில் கடன் பகுதியும் வட்டியும் கொடுபட வேண்டும். தவறினுல் பீனல் (அதிக) வட்டி ஏற்படும். பல வாயிதாக்களும் தவறிப்போனுல் 'ஆர்பிட்ரேஷன்' கோர்ட்டாரால் தீர்மானிக்கப்படுந் தொகை சர்க்கார் கோர்ட்டு மூலமாக வசூலிக்கப்படும்.

சொத்துகளை அடமானஞ்செய்து கொடுக்கும் பத்திரத்திற்கு ரிஜிஸ்தர் (பதிவு) கூலியில்லை. முன் வில்லங்கம் பார்ப்பதற்கும் கூலியில்லை.

விவசாயம், தொழில், பழைய கடன், ஆடு மாடு வாங்குதல், கிணறு வெட்டுதல், கல்யாணம் செய்தல் இவற்றிற்குக் கடனளிக்கப்படும்.

பங்காளிகளுக்கு என்ன லாபம்? சங்கத்தார் நூறு ரூபாய்க்கு ஏழரை அணுவுக்குக் கடன் கொண்டு பதினென்றேகாலுக்குக் கொடுப்பதனுல் வரும் வட்டிலாபத்திலிருந்து ரிசெர்வ் பண்டு, தருமம், சங்கச் செலவு, இவற்றிற்கு ஏற்பட்ட வீதப்படி எடுத்தது போக மீதத்தைப் பங்கு வீதம் பங்காளிகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும். இதற்கு 'டிவிடெண்டு' என்ற பெயர். லேவாதேவி எத்துணை அதிகமாக நடக்கின்றதோ அத்துணை டிவிடெண்டும் அதிகப்படும்.

சங்க நலத்தை நாடுவது ஒவ்வொரு உறுப்பினருடைய கடமையாம்.

கடன் பட்டவர்கள் ஒழுங்காகப் பகுதிப்பணத்தையும் வட்டியுடன் தவணைத்தொகையையும் கொடுத்துவருவார்களானால் மாறி மாறி வேண்டியபோது கடன் பெறலாம்.

குடியானவர்கள் பூத் தோறும் கடனைச் செலுத்திவிடலாம். அவர்களுக்கு இச்சங்கங்களில் கடன் வாங்குவதே நன்மை. தொகையை வர வரச் செலுத்திவிடலாம். அதற்குத் தக்கவாறு வட்டி குறையும்.

தொழிலாளிகள், பள்ளர், பறையர், முதலானவர்களின் நலம் கருதியே இவ்வகையான சங்கங்களை அரசியலார் ஏற்படுத்தியுளர். இவை எங்கும் பரவுமாயின் சௌக்கார்கள் கொடுமை குறையும்.

இவ்வாறு பலவகையான நலங்களைக் கருதி விவரமறிந்து சௌக்கார்கள் வலையிற்பட்டு குடிகள் கெட்டுப்போகாத வண்ணம் இறைவன் அருள்க.

## 38. நாட்டு நூல் துணி.

ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஒவ்வொரு ஊரிலும் ஏழை மக்கள் பஞ்சு வாங்கி அதை வெட்டித்திருத்திக் கொட்டையாக்கி இராட்டில் கதிர்களைப்பூட்டி அதனை யோட்டி கொட்டையிலிருந்து நூலிழைத்து வந்தனர். விதவைகள் இவ்விதமாகப் பாடுபட்டுச் சிறிது சிறிதாகப் பணஞ் சேர்த்துக் கைவசம் வைத்து வந்தனர். இரவிலும், பகலிலும், வைகறையிலும் இராட்டொலி எங்கும் கேட்டது.

இவ்வாறு நூற்கப்பட்ட கண்டுகளைக் காருகர் வீடு வீடாகச் சென்று விலைக்கு வாங்கிக்கொண்டு போய் காடுமூரடுகளைத்திருத்திப் பாவாக்கிப் பாவாற்றித் தறிகளிலேற்றித் துணி நெய்தார்கள்.

முன் காலத்தில் மஸ்லின், மயிர்ப்போர்வை, முதலான துணிகளும் கம்பளங்களும் இந்நாட்டில் நெய்யப்பெற்று வெளி நாட்டுக்குப்போய் பெரும் இலாபம் பெற்று வந்தன. அயல் நாட்டுப்பணங்கள் இந்நாட்டிற் குவிந்தன.

தற்காலத்தில் குறிப்பிட்ட நம்பர் நூலினும் மிருது வான நூல் இந்நாட்டில் நூற்றல் சட்டவிரோதமாகின்றது.

கையால் தறிகளிற்செய்யப்படும் துணிகள் இயந்திரத் தால் நெய்யப்படும் துணிகளுக்கு இணையாகா. ஒரு மணி நேரத்தில் இயந்திரத்தா லாக்கப் பெறுந் துணிகளுக்குக் கணக்கில. இரண்டிற்கும் போட்டிக்கிடமில்லை. கை நெசவுத் துணிகளுக்கு விலை அதிகமாகத்தா னிருக்கும். இயந்திரங்கள் வந்த பின்னரே இராட்டுகள் இருந்தவிடந் தெரியாமற் போயின. இயந்திர நூலிழைகள் குறைந்தவிலைக்கு அகப்படுகின்றன. ஏழைகள் பிழைப்புக்கெட்டது. ஏழைகள் கூலியாட்க ளாயினர்.

அன்னிய நாட்டுத்துணிகள் இவண் செலவாகாதிருக்க வேண்டுமானல் இயந்திரங்கள் தேவை, பல மெதுவான நூலிழைகள் இவண் செய்தற்குத் தடை கூடாது, இந்நாட்டில் விளையும் பருத்தி வெளித்தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யலாகாது. இத்தகைய வழிகளில் சமுதாய வொற்றுமை வரவேண்டும். பல விதமான தட்டுத்தடைகள் ஏற்பட்டபோதிலும் கொள்ளேகால் பட்டும், குறநாட்டுச்சேலையும், ஆறணி அங்க வஸ்திரங்களும், நாகர்கோயில் நேரியல்களும் சிறந்து விளங்குகின்றன.

நாட்டிற்செய்யப் பெறுந் துணிகள் துவைத்துக் கட்டுவதற்கே தகுதியானவை. அவற்றை வெளுப்பதும் கடினம். விரைவில் அத்துணிகள் கிழிந்து போகின்றன.

இயந்திரத்துணிகளுடன் போட்டி போடுதல் இயலாததனால் தேசாபிமானங்கொண்டே அவற்றை வாங்கி யணிதல் நலமென்று தேசவிருத்தி நாடுபவர்கள் கதறுகின்றனர்.

கதர்க்கடைகள் பெருகிவருகின்றன. அவற்றில் இயந்திரத்துணிகளைக் கதரென்று கூறி ஏமாற்றி இலாபஞ் சம்பாதிக்கும் துரோகிகளும் ஏற்பட்டுளர்.

கதர்த்துணிகள் அதிகரித்தவுடன் சீமையில் நெசவுத் தொழில் குறைவு பட்டுளதென்றும், நெசவு மில்கள் முன் போன்று ஓடவில்லை யென்றும், இந்நாட்டாரனைவரும் கதர் அணிவாராயின் சீமைத்துணிகள் இவண் வாராதென்றும், வாணிப விருத்தியால் வளம் பெருக்கி வரும் ஆங்கிலேயர் இந்நாட்டைக் கைவிடுவரென்றும் அப்பொழுது சுய ஆட்சி கை கூடுமென்றும் காந்தி போன்ற சுயவாட்சிக்கு உழைப்பவர்கள் கூறுகின்றனர்.

## 39. சமர்த்து.

சமர்த்து, சமத்து, சாமர்த்தியம் இம் மூன்றும் ஒரு சொல்லின் விகற்பமேயாம். திறமை, திராணி, வீரம் என்பன அதன் பொருள்.

சமர்த்து இயற்கை யமைப்பாம். திறமை செயற்கையாலெய்தும். நூல் பலகற்றுத் தேரினும் சமர்த்து இன்றி யமையாதது. உலக வாழ்விற்கு அது பெருந்துணையாம்.

இன்புற்று வாழ நினைப்பவர் இன்பமளிக்கும் தருணத்தைக் கைவிடலாகாது. மரியாதையான சொல்லுஞ் செயலும் அருமைப் படுத்தும். மரியாதையான ஒழுக்கத்தைக் கடைபிடித்தற்குச் செலவில்லை. பணத்திற்கு அகப்படாத அனைத்தும் மரியாதைக் கமையும். 'நெஞ்சத்தைக் கவர்ந்தால் பணப்பைகளும் பின்வரு'மென்றனர் மந்திரியாரொருவர்.

பலவந்தத்தாற் கிடைக்கப் பெருதது சமர்த்தால் கை கூடும். காற்றுக்கும் சூரியனுக்கும் நிகழ்ந்த போட்டி இதனை விளக்கும். இருவரில் யார் பெரியர் என்பதுதான் வாதம். புயல்காற்று அடித்தபொழுது பிரயாணி மேற்போர்வையை இறுகப் போர்த்திக் கொண்டனன். வெயில் காரமாய் அடித்ததும் அவன் ஆடைகளைக் களைந்தெறிந்தனன். இது ஒரு கட்டுக்கதையாயினும் பெரிய வுண்மையைக் கற்பிக் கின்றது.

மனிதர்கள் இன்சொற்கு இணங்குவரன்றிக் கட்டா யஞ் செய்தால் இணங்க மாட்டார். வாளால் வெட்ட முடி யாதது முகமலர்ச்சிக்குப் பக்குவிடும். 'இன்சொலாலன்றி இருநீர் வியனுலகம் வன்சொலாலென்று மாகாதே'.

நம்முடன் பழகும் மனிதர் நம்மை நம்புமாறு நடந்து கொள்ளுதல் சமர்த்தாகும். திறமை வெல்லாது, ஒழுக்கம் வெல்லும் பிறருக்குப் பிரீதியானவற்றை இயன்றவாறு செய்தலால் நம்பிக்கை யுண்டாகும். இல்லையென்று சொல்ல வேண்டும் அமயத்தில் மனவுறுதி வேண்டும். அவ்வுறுதி யில்லாமல் அவத்தைப் படுகின்றனர் அனேகர்.

எச்சரிப்பும் அமைதியும் முக்கியம். காரியங்கள் முடிப் பதற்கு இவை அவசியம். புத்தகங்களைப் படிப்பது இலகு, மனிதர்களின் தன்மையை யுணர்வது கடினம். கண்களுத வியின்றி குணகுணங்கள் அறியப்படா.

மக்கள் அறிவுடையராதலின் அறிவிற்கு ஏற்காததை ஒப்புக்கொள்கிலர். அறிவினும் உணர்ச்சி மிக வன்மையுள் ளது. சமயப்பற்றுடைய பெரும்பாலார் உணர்வின் வழி நடக்கின்றனர். விழுமியோரெனப்படும் பிறர் கூற்றை நம்புவதே மனித வியற்கை. ஏனெனில் ஒவ்வொருவர் குணத்தையும் ஆராய்தற்கு அவகாசமில்லை.

சமர்த்தனுக்குப் பகைஞரிலர். குளிர்ந்த சொல்கொடிய வெகுளியை வெல்லும். பிறரை நகைத்தால் அதனை அவர் மறவார். நம்மை ஏமாளியென்று பிறர் நினைத்தலால்தீதில்லை. நாம் ஏமாற்றலாகாது. நம்மைக்கண்டு நகைத்தால் நாம் அதைப்பாராதது போலிருத்தல் நலம். யாதுவரினும் சமர்த்தன் தன்னுடைய கொள்கைகளைக் கைவிடான்.

சமர்த்தன் வெளிப்படையாகப் பேசுவான். ஆயினும் அவன் மன அடக்கமுடையவனாயிருப்பான். தொகை மக்களின் குறைகளை யெடுத்துக்கூறான். பொறுமையும் விடா முயற்சியும் சமர்த்தனின் அணிகலன்களாம். சமர்த்தன் எத்தருணத்திலும் வெகுளான், விரும்பினாலன்றிப் பிறர் காரியத்தில் தலையிடான், நம்பி ஐயுறான், ஐயுறின் அணு கான். சமர்த்தன் எப்பொழுதும் கூரிய புத்தியுடையவனா யிருப்பான். சில சொல்லிப் பலமுடிப்பான், எதனையும் நினைத்தே பேசுவான், வெறும் வாயாடான். 'காப்பின் நா காப்பன்.' தன்னை வியவான். தன் கூற்றே சரி என்று சாதியான், ஏனெனில் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமலும் போகும் என்ற அநுபவ உண்மை அவனுக்குத் தெரியும். ஆகும் நாள் வரை சமர்த்தன் பொறுத்திருப்பான், எதன் கண்ணும் அவசரப்படமாட்டான். சனசமூகத்தில் சமர்த்தன் பிற மக்களின் நயமான வொழுக்கத்தையே நாடுவான். 'ஒழுக்கம் விழுப்பந்தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படு' மென்றார் செந்நாப்போதாரும். கண்ணுங்காது மெவர்க்கு முள. பகுத்தறிவு சிலருக்கே யுளது. பகுத்தறிவும், சமயத்துக்குத் தகுந்த வாறு நல்வழியில் ஒழுகுதலும் சமர்த்தனைப்பிரித்துக் காட்டுங்குணங்களாகும். மனித வாழ்க்கையில் நாக்கிழத்தி உதவுவதுபோல நன்னடைக் கிழத்தியும் உதவுவள். சமர்த்தனுக்கு இருவகைக் கிழத்தியரும் பணிவிடை செய்வர்.

## 40. பாக்கியம்.

பாக்கியம் பொருட்பாக்கியம், மனைவிப்பாக்கியம், பிள்ளைப்பாக்கியம், அதிகாரப்பாக்கியம், அருட்பாக்கியமென பல வகைப்படும். பொருள் மிகுதி பெற்றவர் கவலையுற்றுழிகின்றனர். நல்ல மனைக்கிழத்தி யுற்றவர் தம் குணக் கேட்டால் நைகின்றனர். பிள்ளைப்பாக்கியம் பெற்றவர் வறுமையில் வருந்துகின்றனர். அருட்பாக்கியம் பெற்றவர் பொருட்பாக்கிய மற்றவரா யிருக்கின்றனர். இவை யனைத்தும் உண்மையான பாக்கியத்தை யளிக்கத்தக்கவை யல்லவெனின் உண்மையான பாக்கியம் யாது? அது மனப் பாக்கியமேயாம். தன்னைப் பெரிதாக மதிப்பவன் பிறரைக் குறைவாக நினைப்பான். உலக வாழ்விற் கவலைகள் பலவுள. அவற்றால் வாதனைப்படாமல் சுகம் விழைபவருக்கு மன வெழுச்சி வேண்டும். மனவெழுச்சிக்கு மனச்சீர்மை தேவை. நளினம், நீக்குப்போக்கு இவற்றால் மன மலர்ச்சியுண்டாகும். நளினப்பேச்சால் நன்மை எய்தலாம். நீக்குப்போக்கு உளதாயின் உலகம் அடிமைப்படும்.

சிலர் சிறிய தொந்தரைகளையும் பெரிதாக மதித்துத் துன்புறுகின்றனர். துரும்பைத் தூணாக்குபவர் மனவமைதி பெறார். மனவமைதி பெறாதவர் மனப்பாக்கிய மெய்தார்.

உற்சாகமிழந்த ஒரு பெரிய அரசன் சோதிடரை வரவழைத்துப் பாக்கியவானாக இருப்பது எங்ஙனமென்று கேட்க, அவர்கள், அரசனை நோக்கி, பாக்கியவானுடைய ஆடையை அணிந்துகொள்ள வேண்டுமென்றனர். பாக்கியவானைக் கண்டு பிடிக்குமாறு பல வகுப்பினருடனும் அரசன் பழகினான். எவனும் பாக்கியவானென்று தோன்றவில்லை. வேலை செய்து களைத்துவந்த குடியானவனை அரசன் கண்ணுற்றான். அவன் கவலையில்லாதவனாக முகமலர்ச்

சியுடன் பெண்டு பிள்ளைகளுடன் உண்டு உறவாடினதைக் கண்டு இவனே பாக்கியவானென்று உணர்ந்தனன்.

உலகில் ஒன்றுடனொன்று சார்பில்லாத பொருளில்லை. சார்புணர்ந்து சார்புகெட வாழ்பவன் பாக்கியவான். ஆசையை அடக்குபவனே அமைதியுறுகின்றான். ஆசைகள் மூவகையின. இயற்கையாகவுள்ளதும் அவசியமானதும் ஒருவகை. இயற்கையாக வருவதானாலும் அவசியமில்லாதது மற்றொன்று. இயற்கையில் வராததும் வேண்டப்படாததுமான ஆசை பிறிதொன்றாகும். எவ்வகையாசையையும் ஒழித்தால் மனசஞ்சலம் வராது.

சிலருக்கு மனச்செல்வம், எதிர்காலத்தில் வரப்போவதிலிருப்பதாகத் தோன்றுகின்றது. வேறு சிலருக்கு விரும்பியது கைகூடுதலே மனச்செல்வமாகின்றது. நிகழ்ந்ததை நினைத்து ஞாபகப் படுத்தலில் மனச்சுகமடைபவர் சிலர்.

மனச்சுகம் பெறவேண்டின் பேராசையை யொழித்தல் வேண்டும். எத்துணை வெறுக்கையை வெறுக்கின்றனரோ அத்துணை மனவமைதி பெறுகின்றனர். பணப்பற்றை நீக்குபவரே பாக்கியவான்களாகின்றனர். மனப்பற்றை நீக்கினால் மனச்சாந்தம் வந்துறும். உண்மையில் பாக்கியவானெனப்படுகிறவன் பற்றொழித்துச் சாந்தமெய்தி நிறைகுணமெய்தியவனே. ஆன்மா அல்லது மன்னுயிரின் கட்டளையைப் பொருட்படுத்தி உடலினாட்சியைத் துறப்பவனே பாக்கியவான். மனத்திருப்தி யடைபவனே மனப்பாக்கியம் பெற்றவன். ஆதலால் பாக்கியமென்பது மனநிறைவே. எவ்வகை நிறைவு பெறினும் மனநிறைவு பெறாதவன் பாக்கியவானாகான்.

# 41. வீடு.

வீடு, இல்லம், என்பன குடியிருக்கும் இடத்தையே குறிக்கும். வீட்டின்பம் பெற முயற்சிப்பவர் அன்பு, ஒற்றுணர்வு, நம்பிக்கை யாதிய நற்குணங்களுடையவரா யிருத்தல் வேண்டும் அன்பகத்திலில்லாத வாழ்வு வாழ்வன்று. பிறருடைய துன்பத்தில் துன்புற்றும்,இன்பத்தில் இன்புற்றும் வாழும் வாழ்க்கை ஒற்றுணர்வாலாகும். ஒருவரை யொருவர் நம்பாமல் இல்லத்திலும் உலகிலும் வாழ்வது அரிது. மனைவீட்டுடன் ஒற்றுணர்வும் நம்பிக்கையுஞ் சேர்ந்தால் அது அகமாகும். மனைவீடு மட்டுமே அகமாகாது. மாடமாளிகை, கூடகோபுரம், பொற்களஞ்சியம், பல்வகைச் செழிப்பும் வீடாவதில்லை. ஆனால் ஒற்றுமை, மனஐக்கியம், சாந்தம் இவை சிறந்த இல்லமே அகமாகும்.

'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்றனர் சான்றோர். இதில் வீடு என்பது மோக்ஷம், முத்தியுலகத்தைக் குறிப்பதாகும். உலகப்பற்றை விடுதலே, துறத்தலே, பேரின்பத்தை யளிக்குமென்பர்.

இல்லறத்தைச் செம்மையாக நடாத்தி, இல்லற வாழ்விலே சிறிது சிறிதாக இல்லறப்பற்றை யொழித்து,மெய்ப்பொருளை ஆராய்ந்து, அதனை வழிபடுதலே வீட்டின்ப மெய்தும் வழியாகுமென்பர் மேலோர். புருஷார்த்தங்கள் நான்கில் வீடு நாலாவது பாதமாகும்.

'தந்தை, தாய், தமர், தாரம் சந்தையிற் கூட்டம்' என்றனர் தாயுமானர்.

> சுற்றமுந் துணையும் மனை வாழ்க்கையும்
> அற்றபோ தணையா ரவர்''

என்றனர் அப்பமூர்த்திகளும்.

'தூண்டிய சுடர்போ லெங்குஞ் சோதியான்
காண்டலு மெளியன் அடியார்கட்கு'

என்றதனால் இறைவனைப் போற்றி வீடடைதலே சிறந்த வொழுக்கமாகும்.

## 42. கோளி.

'பூவாதே காய்க்கு மரமுமுள'வென்றனர் புலவர் பெருமான். இதுகாறும் இவ்வடிக்கு உரை யெழுதியவர் அவ்வகை மரத்தின் பெயரைக் குறிப்பிடாமல் பதவுரையையே வரைந்துளர். மாணவர்களும் கிளிப்பிள்ளைகள் போன்று சொன்னதைச்சொல்லி வருகின்றனர். கூரிய புத்தியுடைய மாணவர் 'அது யாது' என்று பண்டிதர், ஆசிரியர்களை வினவின் அறியாமையிற் பிறக்குங் கோபமேலிட்டால் கடுஞ்சொற்கள் பகர்தலைக் கேட்க நேரிடுகின்றது.

கோளி என்பது பூவாது காய்க்கு மரமாம். அது யாது? அவை எவை? அத்தி, ஆல், பலா, அரசு இவை அவற்றிற் சிலவாம்.

அத்திக்காய்கள் மரத்தின் கிளைகளில் கொத்துக்கொத்தாக அப்பிக்கொண்டிருப்பதைக் காண்கின்றோம்; ஆலம் பழம் ஒரு மரத்தினின்று ஆயிரக்கணக்காகப் பழுத்துதிர்வதைப் பார்க்கின்றோம். பலாக்காய்கள் கொம்புகளிலும் அடி மூடுகளிலும் குண்டலங்கள் போன்று தொங்குவதைக் கண்ணுறுகின்றோம். அரசு போதி மரமெனப் படும். அதில் அக்கினி அதிகமென்பர். பழங்கள் பறவைகளுக்கு உதவும். கொழிஞ்சி ஒருவகை நாரத்தை,பூவாது காய்க்கும் மரமாம். அத்தி, பலா தரும் ஏராளமான காய்களை நானாவகைகளில் அநுபவிக்கும் நாம் இவற்றிற்குப் பூவுண்டோ வென்று கவனித்ததே யில்லை.

நால்வகைப் படையுடைய மன்னர்களுந் தங்கத்தக்க பரந்த நிழலைக் கொடுக்கும் ஆலமரத்தை நாம் எங்கணும் பார்க்கிறோம். அதில் வெண்மையான முகை போன்ற வொன்றுஉண்டாகிப் பிளந்து போகின்றது. அதுபோன்றே அரச மரத்திலும் காணப்படுகின்றது. ஆனால் பலாவிலும் அத்தியிலும் அதுவுங் காணப்படுவதில்லை. இது வியப்பே. இயற்கையின் அற்புதமே.

பறவைகளுக்குப் போதிய வுணவை யளிப்பது ஆலு மரசுமாம். 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' ஆலம் விழுது பற்பொடி செய்ய உதவும். அத்திக்காய் மனிதருக்கு உண வுப்பொருளாம். அது சுவையிலதெனினும் அதன் குணங் கருதி துவரத்திற்கு உபயோகப் படுத்தப்படுகின்றது. பலாப்பழத்திற்கு ஈப்பிடித்து விடுவரோ? என்ற முது மொழி அதன் இனிய சுவை வாசனையைப் பற்றியே.

மேற்கூறிய மரங்கள் மலைசார்ந்த விடங்களிலும் மருத நிலத்திலும் தாமே தோன்றி வளர்ந்து பயன்களை அளிக் கின்றன. அவற்றை வைத்து நீரிட்டு வளர்ப்பவர் சிலரே யாவர்.

## 43. களரி.

நாவின் தொழில் பேசுதல். தனியாயிருக்கும்பொழுது சிலர் நன்றாகப்பேசுவார்கள். நாலுபேர் முன்னிலையிற் பேசு வதென்றால் பெரும்பாலார் கை நடுங்குகின்றனர். நாக்கு அசைவற்றுப் போகின்றது. அல்லது தாறுமாறாக உளறு கின்றது. இதற்குக் காரணமென்னை? பழக்கமின்மையே. 'செந்தமிழும் நாப்பழக்கம்' என்பர் பெரியோர். களரி, கழ கம், அல்லது சபையில் பேசுகின்ற பழக்கம் இளமையிலே ஏற்படவேண்டும். இலதெனில் வயது முதிர்ந்த பொழுது தவறி விடுவோமென்ற பயம் ஒரு பக்கம், பேசுவது அவை

யாருக்குப் பொருந்துமோ வென்ற பயம் மற்றொரு பக்கம், இவ்வாறு இருவகை யச்சத்தாலும் பேசக்கூசுவர்; கல்வி போன்ற அடைமொழி பெறுவிடில் களரி, கழகம், சூதாடு மிடத்தைக் குறிக்கும்.

ஒரு அவையிற் பேசப்புகுவோர் நன்றாக நூல்களைப் படித்து ஆராய்ந்திருக்க வேண்டும்; பிறமக்களுடன் கலந்து கருத்துகளைக் கவர்ந்திருக்க வேண்டும்; மக்கள் இயல்பினை யுற்றுநோக்கிக் கவனித்திருக்க வேண்டும்; இயற்கை வனப்பை உள்ளபடி பார்த்து அறிந்திருக்க வேண்டும்; இனிய சொற்களும் கனிந்த கவியடிகளும் பழக்கத்தினால் நினைத்தபொழுது மனத்தில் தோன்றவேண்டும்.

சபை பலதரப்படும். நல்லோர்கள் கூட்டம் நல்லவை; நுட்பமான அறிவுடையோர் கூட்டம் நுண்ணவை; புல்லறிவாளர் கூட்டம் புல்லவை; தீயகுணமுஞ் செய்கையுமுடையோர் கூட்டம் தீயவை. எவ்வகையான அவை என்பதை முதலில் தெரிந்து கொள்ளுதல் சொற்பொழிவாளருடைய முதற் கடமையாம். அதற்குத் தக்கபடி பேசுதல் அறிஞர் செயலாம். மூடர்கள் கூடியவிடத்திற்கு அறிஞர்கள் போகலாகாது, போகநேரிட்டால் வாய்திறவாதிருத்தல் நலம். பலவகையாருங் கூடும் பெருங்கூட்டத்தில் எவரும் கேட்டு இன்புறத்தக்க காரியங்களை எளிய சொற்களாற் கூறுவது முறையாகும். கடினமானசொற்களை வழங்கினால் அதற்குக் காதுகொடார், அயலிலுள்ளாருடன் பேசப்புகுவர், இரைச்சலும் கூச்சலும் உண்டாகும். முதியோர் சபையில் மேலானபொருளைப் பற்றிப் பேசுவதே சிறப்பாகும்.

எச்சபையினும் பேசப்புகு முன்னர் பேசப்புகும் பொருளை நன்குஆராய்ந்து கருத்துகளை ஒழுங்குப்படுத்திக் கொள்ளவேண்டும். தோன்றும் எண்ணங்கள் பலவற்றிற்

சிலவற்றையே தேர்ந்தெடுத்து அவற்றை மேற்கோள்களுடனும், விளக்கத்தக்கவாறு பேச்சைச் சுருக்கவும், நீட்டவும் வேண்டும். சிலர் இந்தக் கால அளவை மனத்திற்கொள்ளாமல் பேசத்தொடங்கி அரைகுறையாகப் பேச்சை முடிக்கின்றனர்.

முதலில் சபையின் தன்மையும் நோக்கமும் தெரிதல் வேண்டும். இரண்டாவது பேசும் பொருளை நன்கு சிந்தித்துப் பேசல்வேண்டும். மூன்றாவது கால அளவை நினைத்து அதற்குள் பேசத்தக்கதைப் பேசவேண்டும். நான்காவது விரிக்காமல் சுருக்கமாகச் சொல்வன்மை தெரிந்து இனிய சொல்லாற் பேசுதலுடன் நீடித்துப்பேசவில்லையே யென்று அவையார் உணருமாறு பேசுதல் சிறப்பு. ஐந்தாவது பாட்டுகளைப் பாடியும் அவற்றிற்குப் பல உரைகள் கூறியும் பல பழங்கதைகளை யெடுத்துரைத்தும் நேரத்தைப் போக்குதல் காலத்தினருமை தெரியாத குற்றமாகும். ஆறாவது சபையிலுள்ள எவரையுங் குறை கூறாமல் எடுத்த பொருளையே விளக்கவேண்டும். ஏழாவது அவையடக்கமென்றெடுத்து அதனையே சொற்பெருக்காக நிகழ்த்தக்கூடாது.

காலத்தின் அருமை யறியாத பாமரர்களே மூன்று மணி, நாலுமணிநேரம் பேசும் பேச்சாளர்களை நன்குமதிப்பார்கள். பொருட்செறிவிற் கண்ணுங் கருத்துமாயிருப்பவர்கள் சுருங்கக்கூறி விளங்க வைத்தலையே கவனிப்பார்கள். பொதுவாக எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அதன் மெய்ப்பொருளையும், எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அதன் மெய்ப்பொருளையும் அவாவும் அறிஞர்கள் சில சொல்லக் கேட்கப்பிரியப்படுவரேயன்றி பலசொல்லிக் காலப் போக்குச் செய்வாரை விரும்பார். 'கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழிவதாம் சொல்'.

பல்லவை கற்றுத் தேர்ந்தும் பல்லவையிற் பேச நாணு வார் ஒளிவுடைய வாளைக் கையிலேந்தும் வீரமில்லாத பேடிகளை யொப்பர். பூங்கொத்து மலர்ந்தும் மணம் வீசாத பூவினை நிகர்ப்பர் என்றும் புலவர்கள் உவமை கூறுவர்.

ஒவ்வொரு சபைக்கும் தலைவர், அமைச்சர் கட்டாயமாயிருப்பர். தலைவர் முன்னுரை கூறுவதும் சுருக்கமாயிருக்கவேண்டும். தலைவர் கட்டளைப்படி சொற்பெருக்காளரும் நடத்தல் தகுதி. ஏனெனில் நிகழ்ச்சிக்குறிப்பில் பல சொற்பொழிவாளர் காணப்படின் காலத்தைப் பிரித்து சபையை ஒழுங்குபெற நடத்துவது தலைவர் கடமை. சிலர் தலைவர் கட்டளையை மீறி வந்திருக்கும் அவையாருடைய பிரீதியைக் கவர்ந்து பேச்சைப்பெருக்குதல் முறைதவறுகும். சபையார் கேட்டு இன்புறலாமே யன்றி பேச்சாளரைப் பேசச்சொல்லும் அதிகாரம் அவர்களுக்குக் கிடையாது. ஒருவர் பேசுகின்றது அருமையாகயிருப்பின் அதை முற்றிலும் கேட்க விரும்புவோர்கள் தலைவர் அனுமதி பெற்று அவர் மூலமாகப் பேச்சாளரைப் பேசும்படி செய்யவேண்டும். குறிப்பிட்ட பேச்சாளர் வாராதபோதும், பலரும் வந்திருந்தாலும் நேரமிருக்குமாயின் வேறு எவராயினும் பேச விரும்பினால் தலைவர் உத்திரவுபெற்றே பேசல் முறை. தலைவர் முடிவுரை முன்னுரையினும் நீடித்ததாகவே யிருக்கும். ஏனெனின் ஒவ்வொரு சொற்பொழிவையும்பற்றி சிறிது பேசுதல் கடமை. ஆயினும் காலத்திற்கேற்றபடி தம்முடைய உரையை மட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். விரித்துக்கூறப் புகுவரெனில் அவையார் எழுந்து போய் விடுவர். அந்தக்குறிப்பறிந்து உரையைக் கையாளவேண்டும். கூடிய சபையில் பெரியார் எவரேனும் வந்திருந்து உண்மைகளை விளக்கத்தக்கவரென்ற எண்ணம் தலைவர் மன

த்தில் உதித்தால் கால நிபந்தனையைக் கவனித்து அவரைப் பேசுமாறு வேண்டலாம்.

தலைவர் பின்னுரையின் பின் வந்தனோபசாரம், நன்றி பாராட்டுதலாகிய பேச்சுகள் நிகழலாமே யொழிய வேறு பேச்சு நிகழ்ச்சிகள் கூடா. இதனை யறியாமல் தலைவர் உரையை மறுத்துப் பேசப்புகுதல் அவையொழுக்க மறியாமையேயாம். மறுக்க நினைப்பவர் வேறு தருணம் பார்த்துப் பேசுவதே முறை. அல்லது புதினத்தாள்களில் எழுதலாம்.

சபையாரும் ஒழுங்காக நடக்கவேண்டும். பேச்சு நிகழும்பொழுது அமைதியாயிருக்கவேண்டும். பேசுவது பிடியாதிருப்பின் வெளியே போய்விடலாம். அரங்கினுள்ளிருந்துகொண்டு வாயலம்பலாகாது. அனுவசியமாகக் கையைக்கொட்டுதல், காலைத்தட்டுதல், சிரித்தல், நகையாடல், கல்லெடுத்தெறிதல் இவையனைத்தும் ஒழுங்கினமே. ஒருவர் பேசும்பொழுது சபையினர் எவரேனும் குறுக்கிட்டுக் கேள்விகள் கேட்கலாகாது. கேட்க விரும்பினால் கேட்க விரும்புவதைச் சீட்டிலெழுதி அதனைத் தலைவரிடம் அனுப்ப வேண்டும். அவருக்குச் சம்மதமிருந்தால் சொற்பொழிவாளரிடம் அச்சீட்டைக் காட்டுவர். சம்மதமில்லையெனில் தம் கையில் வைத்துக்கொள்வர். சொற்பொழிவாளர் பதில் சொல்லப் பிரியமிருந்தால் பதிலளிப்பர். இல்லையெனில் அதை விட்டுவிடுவர். அவர் பதிலளிக்கத்தான் வேண்டுமென்று வற்புறுத்த எவருக்கும் அதிகாரமில்லை.

## 44. ஊழ்.

வறுமையும் துன்பமும் எய்தும் மக்கள் கடவுளைநொந்து கொள்வர், தம்மை நொந்து கொள்ளார். 'முயற்சி திருவினை யாக்கும்' என்பதை மறக்கின்றனர். தம் முயற்றின்மையை

நோவதில்லை. எல்லாம் ஊழ்வினைப் பயன் என்றும் பழ வினைப் பயனென்றும் அனைத்தும் கடவுள் அமைப்பென்றும் கூறி மனத்தைத் தேற்றுகின்றனர். எவ்வகை முயற்சி செய்யினும் வாராது வாரா, வருவது வந்தே தீரும் என்பதை மறுத்து நாயனார் "ஊழையும் உப்பக்கங்காணும்" முயற்சி என்றனர்.

ஊழ் என்பது யாது? அது பால் என்றும், வகுத்தான் வகுத்த வகை என்றும், பொறி, விதி, தலையெழுத்து என்றும், இயற்கை அறிவு என்றும், திருவென்றும், உறுவதென்றும், கூறப்படும். விதியும் மதியும் இருவேறு வட்டங்களென்றும் இவ்விரு வட்டங்களும் தனி வட்டங்களல்லவென்றும், ஒன்றை யொன்று சில பாகத்தில் கவர்கின்றதென்றும் சொல்லுவர். இருவட்டங்களும் விதியென்ற ஒன்றினுள் மதியென்ற ஒன்று அடங்கியிருப்பின் விதி பெரிதெனலாம். இருவட்டங்களும் நக்கிவருமாயின் விதி மதியையும் வெல்லும், மதி விதியையும் வெல்லுந் தருணங்களுள என்று ஏற்படும். 'முயற்சிப்பது மதி, முடிவது விதி' என்பர் ஆன்றோர்.

ஊழ்வகை யாது? ஆகூழ், போகூழ் (இழவூழ்) என இரு வகைப்படும். ஆகுங் காலத்தில் முயற்சி உண்டாகும், அறிவு அகலும். போகுங்காலத்தில் சோம்பலும் அறியாமை (பேதைமை)யும் தோன்றும். ஆகுங்காலத்தில் தீயவை நல்லதாகும், போகுங் காலத்தில் நல்லவை தீயவையாகும். நமக்கு ஏற்பட்டதை வாரிக்கொட்டினும் அது நம்மைவிட்டு விலகாது, வருந்திக்காப்பினும் அது நமக்கு உதவாது. கோடியளவு தேடி வைத்த பொருளும் ஊழின்றித் துய்த்தலரிதாகும். அப்பொழுதே துறவும் பொருந்தும். எவ்வழி ஆயினும் ஊழ் வழியைக்கடக்க இயலாதாம். நன்மை வரும் பொழுது மகிழ்பவர், தீமை வரும்பொது அழுவதாற் பய

னென்ன? பலகலைப் பயிற்சியும் ஊழின் வலிமையை வெல்ல மாட்டாதாம். மதி விதியை வெல்லும் என்பதற்கு மார்க்கண்டன் சரிதமே போதும். விண்ணுலுவார்க்கில்லை விதி என்பதனால் பத்தியால் வெல்லலாமென்பர். இந்நாட்டில் இவ்விதமான கொள்கை பரவியதால் முன்னேற்றமடையாமல் நாம் பின்னிடுகின்றோம். உலகை இயற்றியவர் அன்பு கூர்ந்த தந்தையாவர். பிள்ளைகளைப் பெற்றோர் சிலர் வாழவும், சிலர் தாழவும் விரும்புவரோ? அங்ஙனமிருப்ப சிலர் செழிப்புற்றும், சிலர் வறுமையுற்றும் உலகில் காணப்படுவதென்னை? நம்மையாக்கிய கடவுள் பல பொருள்களை நமக்கு அளித்திருப்பதுமன்றி தடையில்லா மனப்போக்கையும் அளித்துளர். மனப்போக்கின்படி நாம் நடக்கின்றோம். நன்மையும் விளைகின்றது, தீமையும் விளைகின்றது. நல்லது செய்தால் நலம் விளையும். தீமை செய்தால் தீமை விளையும். இதனை இவ்வுலக வாழ்விற் காண்கின்றோம். வினைப் பயனுளது என்பதிற் தடையில்லை. நாயனார் தாளாண்மையால் ஊழையும் முப்பக்கங் காணலாமென்பர். பழவினை, முன்வினை, அதாவது முற்பிறப்பிற் செய்த வினை என்று கொள்ளும்பொழுது பிறப்புகள் பலவுள வென்ற கொள்கை ஏற்படுகின்றது. சிலர் பிறப்பில் அறிவுள்ளவர்களாகவும் சிலர் பேதைகளாகவும், சிலர் செல்வர்களாகவும், சிலர் வறிஞர்களாகவும் காணப்படுதல் எங்ஙனமென்று வினவுகின்றனர். அது பெற்றோர் அறிவு, ஞானம், உடல்நலம், பருவநிலை யாதியனவற்றைப் பொறுத்துள தென்பதை நினைக்கின்றிலர். விரிக்கிற் பெருகும். அறிஞர் பலரும் ஆய்தற் பாலது.

## 45. தொடர்பு.

நட்பு, தொடர்பு, கேண்மை, ஒரு பொருள் குறிக்கும் பல சொற்களாம். தொடர்பு பலவகைப்படும். பயன்கருதி

வரும் தொடர்பு, பயன் கருதாமல் வரும் தொடர்பு இவை யிரண்டும் கவனிக்கற்பாலன. தீ நட்பு, கூடா நட்பு ஒதுக் கற்பாலன. பயன்கருதி வருந்தொடர்பு நிலைக்காது. ஏனெனில் நினைத்த பயன் கைகூடினால் தொடர்பு நின்றுவிடும். பயன்கருதாமல் ஒற்றுணர்வால் வருந் தொடர்பு நிலைக்கும். பனை, தெங்கு, கமுகு, கோட்டுப்பூ, கயப்பூ இவை தொடர்பை விளக்கவரும் உவமைப்பொருளாகும். பனை பிறர் உதவியைநாடாத நட்பை விளக்கும். தெங்கு அடிக்கடி நீர்வார்ப்பதற்குத் தக்க பயனைக் கொடுக்கும். அடிக்கடி உபகாரம் பெறும் நண்பர்கள் தெங்கினை யொப்பர். கமுகோ நாடோறும் நீரை விரும்பும். நாடோறும் தம் நலமே விழையும் நண்பர் கள்வர், விலைமாதருக்கொப்பாகிய கடையாயரெனப் படுவர். கோட்டுப்பூ முன்மலர்ந்து பிற்கூம்பாது. உண்மையான நண்பர் அத்தகையரே. கயப் பூ முன்மலர்ந்து பிற் கூம்பும். அதுபோல சிலநண்பர் முகத்தைக் கண்டால் கனிமொழி பகர்வர்; புறம்போனால் வன்மொழி கூறுவர். சான்றோருடன் ஒரு நாட் பழகினும் நட்பு உறுதியாயிருக்கும், கயவருடன் பலநாட் பழகினும் நட்பு நீரிற் பாசிபோன்று வேர்க்கொள்ளாது. 'கெட்டார்க்கு நட்டாரில்' என்பது முழுவுண்மையன்று. உண்மையான நண்பர் பிறர் வேண்டுதலின்றி வறுமையிலுதவுவர். 'உடுக்கை யிழந்தவன் கை போல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு'. கொட்டியும் ஆம்பலும் போல் அற்றபோதும் கைவிடார். பெரியவர் நட்பு நாடோறும் நலம் பெறும். கரும்பின் நுனிதொட்டு அதனை அடிவரை தின்பாரது சுவை பெருகும். சிறியவருடைய தொடர்பு அடியினின்று கரும்பை நுனிவரை தின்பாரது போக்குப்போலும். நட்பு நாட்படப்பெருகும் அல்லது குறையும். நிறைமதியும் குறைமதியும் நட்பினை விளக்கும் உவமைப் பொருளாகும்.

எவற்றைக்கூறினும் உற்றுணர்வின்றி ஆம், ஓம் என்று பக்கப் பாட்டுப்பாடும் நண்பர் நண்பரல்லர். நாம் பிசகினால் நம் பிழையை எடுத்துக்காட்டிப் பலதரம் இடித்துத் தவறை நீக்க முயல்பவரே உண்மை நண்பராவர்.

நட்பு அகத்திலுறையும்; அழிவுநீக்கி ஆறு உய்க்கும்; அல்லலுறின் அல்லலுறும்; பழமை பாராட்டும்; பழகப் பழக நயந்தரும்; ஒத்த உணர்வுற்றாழிப் பழகுதலும் வேண்டாது.

நட்பின் குறிகள் யாவை? குணம், குடிமை, இனம், பழிநாணுதல், வழக்கறிவு, ஒப்புமை, கிழமை, கெழுதகைமை, அன்பு, மறைகாத்தல், சொற்காத்தல், பழியாமை, எள்ளாமை, நல்லமனம், இவையே நண்பரைப் பிரித்துக் காட்டும் குணகுணங்களாம்.

இக்குண குணங்களைப் பன்முறை ஆய்ந்து பார்த்து நட்புக்கொளல் வேண்டும். நட்புக்கொண்டபின் ஐயுறல் பல கேடுகளை விளைக்கும். ஆதலால் ஐயுறநேரில் அந்த நட்பை யுடனே களைதல் நலம். இலையெனில் அது "தான் சாந் துயரந்தரும்."

சிலர் சொல் வணக்கமுடையராகத் தோன்றின் வளையும் வில் தைக்குமாதலின் அவரிடம் எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும். மற்றொருவகையாருடனும் எச்சரிப்பாயிருத்தல் நலம். சிலர் கை கூப்பித்தொழுவார் போன்று நடித்துக் கூப்பிய கையகத்துக் கொல்படையை மறைத்து வைப்பர். பகைவருடைய கண்ணீரும் அத்தகைமையதே. பகைவரிடம் பகைமை காட்டுதலால் அப்பகைமை வெல்ல முடியாது. ஆதலால் அன்னாரிடம் முகநட்பின்றி அகநட்புக் கூடாது.

பேதைகளாகிய அறிவிலிகளுடன் நட்புக்கொள்ளுதல் தீமையை விளைவிக்கும். அதனை யாது கொடுத்தும் நீக்கல் வேண்டும். அவ்வாறு நீக்குதலே ஊதியமாகும்.

நட்பிற்குச் சோதனை யாதெனின் உற்றுழி உதவலாம். உற்றுழிக் கைவிடுவார் நண்பரல்லர். பின்னவர், 'கல்லாமா' அறிவில்லாத குதிரை போன்று களத்தில் கைவிடுவராத லின் அவருடன கேண்மை கொள்ளலாகாது.

அழிவான காரியத்தை நண்பர் செயின் அவர் அன்பு குறையாது. கேளாமல் ஒன்றை உரிமை பற்றி நண்பர் செயின் அது விரும்பப்படும். நட்பு அதற்கு உடம்படும். கண்ணைக் குத்திற்றென்று எவரேனுந் தம் கையைக் களை வரோ? ஆதலால் நட்பிற் பொறை, பொறுமை, அகத்தி யம். "ஒருவர் பொறை இருவர் நட்பு" என்றார் முனிவரும். "நெல்லுக்கு உமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு, புல் இதழ் பூவிற்கு முண்டு" என்பது நினைக்கற்பாலது.

உற்றார் தொடர்பு இத்தன்மைத்தெனின் உறவினர், கிளைஞருள்ளும் மெய்ம்மையும், பொய்ம்மையும் உளவே. மெய்ம்மைக்கிளைஞர் எவர்? 'கேட்டினுமுண்டு ஓருறுதி, கிளை ஞரை நீட்டி அளப்பதோர் கோல்', 'உற்றுழி நண்பன் உண் மை நண்பனே' என்ற ஆங்கிலப்பழமொழியு முளது.

குற்றமற்ற பண்புடையாளர் தொடர்பு என்றும் இன் பம் தரும். அது வேறுபாடில்லாமல் தளராமல் தாங்கி நிற்கும். உருவிற் பெரிய யானை பழகிய பாகனையே கொல் லும். வாலைக் குழைக்கின்ற நாயோ பழகினவரைக் காக் கும். அது போன்றே பண்புடையாளரும் பழகிய கேண் மையைக் கைவிடார்.

## 46. எல்லாம் நன்மைக்கே.

சில மனிதர் எல்லாம் நன்மைக்கே யென்றும், பலர் எல்லாம் தீமைக்கே யென்றும் நினைக்கின்றனர். புண்ணியம் சிறிதென்றும், பாவம் மிகுதியென்றும் உலகம் எண்ணுகின்றது. இவ்விரு கொள்கைகளும் ஆராயத்தக்கன. உலக வமைப்பின் துவக்கத்தில் புண்ணிய. பாவமென்ற பாகுபாடுகளிருக்கக் காரணமில்லை. பாவம் மிகுதியென்றால் கடவுட்டன்மைக்குப் பின்னம் ஏற்படுகின்றது. ஆரம்பத்தில் பாவத்தை மிகுதியாகப் படைத்தல் யாது காரணம்பற்றி? ஏன் நன்மை மிகுதியாக இருந்திருக்கக்கூடாது? மிகுதியில்லெனினும் சமமாகவேனும் முற்றிலும் நன்மையாகவேனும் ஏன் உலகம் அமைக்கப்பட்டிருக்கக் கூடாது?

பாவம், துன்பம், துயரம், வருத்தம் மிகுதியென்ற கொள்கையைக் கொள்வதால் வாழ்வு துன்பமடைகின்றது. இன்பமே இல்லை யென்பதால் விரைவில் மாண்டு போதலே நலமெனக் கருதப்படுகின்றது, மனிதப்பிறப்பால் பயனில்லை யென்றும் ஏற்படும். பயனற்ற பிறப்பை அது இயற்றும் பெரும்பொருள் மடியுடைப் பொருளாயிருத்தல் வேண்டும். அது எல்லாம் வல்ல இறைவன்பெருமைக்கு இழுக்கன்றோ?

புண்ணியம், நற்செயல், மிகுதியென்ற கொள்கையுடையாருக்குத் துன்பமே யில்லை, மனம் எப்பொழுதும் மலர்ந்து ஊக்கமுற்றிருக்கும். அது முயற்சி செய்வோருக்குத் தூண்டுகோலாயும் விளங்கும், முயற்சி திருவினையை ஆக்கும். அதனால் வாழ்வும் நலமுறும்.

உலக வமைப்பு அனைத்தும் நன்மைக்கே யென்று கொளின் தொழிலை ஊக்கத்துடன் செய்ய ஏது உண்டு. எம்முயற்சியும் நன்மையே விளைவிக்கும். அமைப்பின் தன்மையை அறியமாட்டாத மக்கட்பிறவிக்கு அக்கொள்கையால்

நலமே யுண்டாகும். நிறை வெய்துமாறு முயற்சி நிகழக் கூடும்; மனத்துயரமே கிடையாது; வாழ்நாள் முழுவதும் இன்பமே பெருகும்.

எல்லாம் நன்மைக்கே யென்று கொண்டால் கேடு போன்று தோற்றும் செயலும் நன்மையே தருமென்ற வுணர்ச்சியினால் மனவமைதி யுண்டாகும், மனச்சலனமாயினும் சஞ்சலமாயினும் உறாது. கடவுளிடம் அன்புபெருகும். கடவுள் வழிபாடும் மிகும்.

எல்லாம் நன்மைக்கே யென்று சொல்லுவாருள் சிலர் இவ்வுலகமே பயிற்சிக்கூடமென்றும், உலகவாழ்வில் ஒவ்வொருநாளும் போர் நிகழ்கின்றதென்றும், நிகழும்போரால் திறமையுண்டாகின்றதென்றும், திறமை முதிர்ச்சியால் ஒழுக்கஞ் சிறக்குமென்றும், ஒழுக்கச்சிறப்பால் நற்பதவி எய்தலாகுமென்றும் கூறுவர். அன்றியும் மக்கட்கு வரும் இடுக்கண்ணும் இடரும் இடுக்கண்ணுமிடருமல்ல, அறவழிக்குத் திருப்பும் கருவிகளே யென்பர்.

மன்னுயிர் பல பிறவி யெடுக்கு மென்பவர் மனிதன் ஒவ்வொரு பிறப்பிலும் நன்மையே செய்து வருவானாயின் அச்செயலால் அவனுடைய ஆன்மா உறுதியெய்தி மேலான நிலைமையைப் பெற்று இறைவனடி யுறுமென்பது திண்ணமென்று கூறுவர். மனிதப் பிறவியால் நன்மையே கிடையாதென்பவர் பிறவி தோறும் துன்புற்று மனஞ்சோர்ந்து நைந்திறுவர், கடவுளை வெறுப்பர். கடவுள் வழிபாடுசெய்யார், நன்றி யுணர்ச்சி பெறார், சமூக வாழ்வை விரும்பார், இளைத்த நாளிருந்து தொலைக்க வேண்டுமென்பர்.

தமிழகத்தில் மாசற்ற மன்னனொருவனுக்கு மதிநுட்பமுடைய மந்திரி யிருந்தான். வில் விளையாட்டில் மன்னன் விரலொன்று இற்று விழுந்தது. அதனை நினைத்து வருத்த

முற்றான். அவ்வமயம் மந்திரி வந்துற்றான். மன்னனுக்குற்ற வருத்தம் மந்திரியின் மனத்தை வருத்தியதெனினும் அவன் எல்லாம் நன்மைக்கே என்றனன். கொற்றவனுக்குக் கோபம் பெருகி, பிறருக்குத் தத்துவம் பேசமலெளிது. தலைவலியும் பல்வலியுந் தனக்குத்தனக்கு வந்தால் தெரியும் என்றுணர்ந்து அமைச்சனைச் சிறைப்படுத்தினான். சில காலங் கழிந்தது. ஒரு நாள் அரசன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்ற பொழுது வேட்டையாடிக் களைத்துப் போய் மர நிழலில் படுத்தனன். ஞாயிறு பட்டது, திங்கள் தோன்றவில்லை. எங்கும் இருண்டது. நேரம் போயிற்று. ஆறலைக்குங் கள்வர் காட்டில் தோன்றினர். காளிக்கு நரபலியிடுமாறு தக்க நரனைத் தேடித் திரிந்தனர். அயர்ந்து துயின்ற அரசனைக் காலெதிரிற் கிடக்கக் கண்டனர். உடனே நரன் அகப்பட்டானென்று களி கூர்ந்தனர். காளிக்குப் பலியிடப்படும் நரனுக்கு உறுப்புக் குறைகூடாது என்பது கள்வர்கொள்கை. கள்ளரிலொருவன் மன்னனின் விரற் குறையை எடுத்துக் காட்டினன். உடனே உயிர் தப்பினேனென்று வேந்தன் மகிழ்ந்து, மந்திரியின் சொல்லை நினைத்து அதனுண்மையை உணர்ந்தனன். அரண்மனை வந்தடைந்ததும் மந்திரியை அழைத்து வரும்படி ஏவினன். "நீர் சொற்றது எனக்குப் பலித்தது. விரலிற்று வீழ்ந்தமையால் யானுய்ந்தேன்" என்று காட்டு நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுமாறு உரைத்தனன். அதன் பின் "நீர் சொற்றது உமக்குப் பலிக்கவில்லை"யே என்றனன். நுண்ணறிவுடைய மந்திரி எனக்கும் அது பலிதமாயிற்று. ஊன்றிப்பாரும்" என்றனன். அது அரசனுக்குப் புலப்படவில்லை. மந்திரி அதனைப் பின் வருமாறு விளக்கிக்காட்டினர். "யான் சிறைப்படுத்தப் படாவிடில் உம்மைவிட்டுப் பிரியாமல் உம்முடன் வந்திருப்பேன். உம்மை உறுப்புக் குறைவு காரணமாக விடுத்த

கள்வர் என்னைப்பிடித்துக் காளிக்குப் பலிகொடுப்பர். நீர் என்னைச் சிறையில் வைத்ததனால் நான் உம்முடன் வரவில்லை. கள்வர் கையிலகப்பட நேர்ந்திலது. உயிருடன் உம்மை எதிர்கொண்டேன் என்று விரித்துக் கூற, வேந்தன் "உண்மை தான்" என்று சொல்லி மனம் உவந்து மந்திரியின் மதித்திறனை வியந்தனன். எல்லாம் ஈசன் செயல், ஈசன் அமைப்பு அனைத்தும் நன்மையின் பொருட்டே, கேடுபோல் வருவதும் ஆக்கத்தையே தருவதாகும், என்று உணர்ந்து "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற கொள்கையை முன்னினும் அதிகமாக நம்பினன்.

## 47. சகுனம்.

சகுனம், குறி, நிமித்தம் ஒரு பொருட் கிளவிகளாம். சகுனம் நற்சகுனம் அல்லது விருச்சி என்றும், கெட்டசகுனம், துர் நிமித்தம், கெடுகுறி என்றும் வழங்கிவருகின்றது. குறி என்பது முன் அடையாளம்; வரப்போவதைக் காட்டும் முன்னடையாளம். அறிஞர் பலர் தத்தம் அநுபவத்தில் நன்மை தீமை காட்டும் அறிகுறிகளாக உணர்ந்தனவற்றை உரைத்தனர். அதனைப் பின் வருவோரும் கடைப்பிடித்து ஒழுகி வருகின்றனர். குறிகள் தவறுதலுமுண்டு. தவறுவன வற்றைக் கணக்கிடுவதில்லை யுலகம். பெரியோர்சொல்லைப் பொன்போற் போற்றுந் தமிழ்மக்கள் பொருந்துவனவற்றையே எடுத்துரைப்பர்.

ஒருவர் வீடு விட்டுப் புறப்படும்பொழுது நிறைகுடம் எதிர் வரலாம். அது நீர்க்குடமாயினும், தயிர்க்குடமாயினும் சரி. வண்ணான் வரலாம். எண்ணெய் வாணியனாயினும் நாவிதனாயினும் விதவையாயினும் ஒற்றைப் பார்ப்பானாயினும் மண்வெட்டி கோடாரிக்காரனாயினும் வரலாகாது. வந்தால் சற்றிருந்து போவது நன்மை என்பர்.

காக்கை இடம் பாயலாகாது· பூனை குறுக்கிடலாகாது. கழுதை கனைத்தால் நல்ல சகுனம். நாய் ஊளையிடலாகாது. பொன் கழுகு காணுதல் நற்குறி, அது வட்டமிடின் நற் செய்தி கிடைக்கும். இரவில் வீட்டின் பக்கலில் ஆந்தை கூச்சலிடலாகாது. சாகுருவி கூப்பிடலாகாது. இவற் றின் போக்கும் ஒலியும் தீக்குறிகளாம்.

பல்லியின் ஒலி பலவித சம்பவத்தைக் காட்டுமென்பர். பெரும்பாலும் அது எத்திசையிருந்து கூப்பிடுகின்றதோ அதனையொட்டியே நன்மை தீமை குறிப்பிடப்படும். பல்லி சாஸ்திரமென்ற நூலொன்றுண்டு. அதன் கண் அதனை விரிவாய்க் காணலாம்.

ஞாயிறு எழும்பொழுதும் உச்சி வேளையும் நற்செய்கைக் குத் தக்க காலமாம். இராகு வேளை கெடுதலைக்காட்டும். இராகு வென்றால் பாம்பு. சந்திரனை மறைக்கும் பாம்பு. ஞாயிறு எழுந்தது முதல் மூன்றே முக்கால் நாழிகை எந் நாளிலும் நல்ல காலமாகும். 'தி ச வெ பு வி செ நா' இதை ஞாபகம் வைப்பின் வாரத்திலுள்ள ஒவ்வொரு நாளிலும் இன்ன வேளை இராகு காலமென்பதைக் காணலாம். தி-திங்கள், ச—சனி, வெ—வெள்ளி, பு—புதன், வி-வியாழன், செ—செவ்வாய், நா—நாயிறு. இந்த வொழுங்கில் எந்த நாள் எத்தனுவது எழுத்தால் குறிக்கப்படுகின்றது, அந்த எண்ணை மூன்றே முக்காலுடன் பெருக்கி வரும் தொகை அன்று இராகு காலம் ஆரம்பிக்கும் வேளையைக் காட்டும்.

விவாகமாகாத பெண்கள் சோர்வடைந்தால் சோர்வை நீக்கவும் முகூர்த்தம் நடக்கும் காலத்தை அறியவும் குறத்தி களிடம் பெற்றோர் குறிகேட்கும் வழக்கமுண்டு. குறத்தி கள் முகக்குறி சொற்குறி கொண்டே பதிலளிப்பர்.

நிறைநாழி நெல்லில் கரியும் மஞ்சளும் வைத்து தலைப் பேனை விட்டு அது மஞ்சளில் ஏறினால் நற்குறி யென்பர். அலதெனில் தீக்குறியாம். அது போன்றே கோயில்களில் பூக் கட்டிவைத்துத் தெய்வ சம்மதம் பார்ப்பது முண்டு. காளிகோயிலில் செவத்தைப் பூ கொடுத்தால் நலம். சிவன் கோயிலில் வெள்ளைப்பூக் கண்டால் நலம் என்பர்.

இவையனைத்தும் மனத்தைத் தேற்றும் வழிகளாம். ஒன்றைப்பற்றிப் பேசும்பொழுது கோயில் மணியடித்தல் நல்ல சகுனமெனக் கருதப்படுகின்றது.

இவற்றைப் பின்பற்றி ஒழுகுதல் முறை யென்று வற்புறுத்தவில்லை. இவற்றைக் கடிவதால் தீமை வருமென்றும் கூறவில்லை.

சூலமென்ற கொள்கையும் தமிழர்களிடங் காணலாம். செவ்வாயும் புதனும் வடக்கே சூலமென்பர். அது போன்றே நாள்தொறும் சூலத்தின் திசை வேறுபடும்.

அறிஞர்கள் இவற்றைக் கவனிக்கமாட்டார்கள். விதிக்கு விலக்கு எப்பொழுது முண்டு.

## 48. இன்னிசை.

இசைக்கு இசையாத வுயிரில்லை எனலாம். பாம்பு குழலோசை கேட்டவுடன் அதன் இருப்பிடத்தை யொழித்துக் குழலோன் பக்கம் வந்தடைகின்றது. அதுவுமன்றி குழலோசைப்படி ஆடுகின்றது.

ஆர்பியஸ் என்ற கிரேக்க நாட்டுக் குழலோன் குழலை யூதினால் விலங்குகளும் வசப்படுமாம். மரங்களும் கூத்தாடுமென்பர்.

இன்னிசைக்குக் காதிணங்காதவன் கபடன், கொள்ளைக்காரன். அவனை நம்பலாகாது என்றனர் சகப்பிரியர் என்ற ஆங்கில நாடகப் பேராசிரியர்.

தமிழகத்தில் இன்னிசை வாயினாலும், குழல் யாழினாலும் பரவி வந்தது.

யாழ் பேரியாழ், சகோடயாழ், மகர யாழ், செங்கோட்டி யாழ் என்று நான்கு வகைப்பட்டது. வீணை களாவதி, மகதி, பிருகதி, கச்சளா என்ற நானுவகையது.

இவற்றின் இசை ஏழ்வகை நரம்பிசையாகும். வீணையை சப்ததாளம், நவதாளம், தசதாளப் பிரமாணங்களுடனும் சுரங்களுடனும் வாசிப்பதே சிறப்பாம். குழல்களில் நாகசுரம் போன்ற தொளைக்கருவிகள் பல. துவாரங்களை விரல்களால் அடைத்தும் திறந்தும் லயை முதலான்வை பிறழாமலும் மாத்திரை பிசகாமலும் வாசித்தல் இன்பந் தரும். யாழிசையும் குரலிசையும் ஒன்றுபட்டு நடக்குமாயின் பேரின்பம் விளைவிக்கும்.

தற்காலத்தில் பிட்டில், தம்பூர், மிருதங்கம், ஆர்மோனியம், கிராமபோன்முதலான கருவிகளால் காதுக்கினிமை கிடைக்கின்றது. தமிழ்ப்பண்களின் அருமை வியக்கத்தக்கதேயாம்.

பண்ணும் ஐந்திணைக்குரிய ஐவகைப் பண்களில், பகற்பண் 9, இராப்பண் 9, பொதுப்பண் 2. ஆக 21 பண்களுள. இராக்காலத்திற்கு பயிரவி முதலிய 32 ராகங்களுள. தமிழில் இசை நூல்கள் பலவுள. தாளசமுத்திரம் என்ற நூல் சமீப காலத்தில் அச்சிடப்பட்டுளது. அதன்கண் தாள வகைகளை நன்கு அறியலாம்.

சாகித்தியம் என்பது பாட்டு. பதம், சிந்து, வண்ணம், கீர்த்தனை இசைப் பாட்டாகும்.

இன்னிசை மனதை இணக்கும், அன்பைப்பெருக்கும். இன்னிசை துயருற்ற மனத்தினின்று துயரை அகற்றி சாந்தப்படுத்தும். கல் மனத்தையும் கனியச்செய்யும். சித-

றுண்ட மனத்தையும் செம்மைப்படுத்தும். பித்தமேலீட்டாலும் கவலை முதிர்ச்சியாலும் விளையும் பைத்தியத்தையும் இன்னிசை போக்கடிக்கு மென்பர். சால் என்ற அரசனுக்குப் பைத்தியம்பிடித்த காலத்தில் டேவிட் என்பவன் இன்னிசையால் நோயைக் குணப்படுத்தின னென்பதை பைபிலில் பார்க்கிறோம். தமிழ் வீரனாகிய இராவணனை அகத்தியர் கந்தருவத்தாலே வென்றனர் என்ப பழைய நூல்கள்.

இன்னிசை மனத்தைக் கவர்வதால் அன்பைப்பெருக்குகின்றது. உருக்கமாகப் பாடும்பொழுது இணக்கமுடைய பெண்களின் மனம் இளகிப் பாடுகிறவன் வசப்படுகின்றது. இன்னிய மியக்கும் பெண்கள் ஆடவர்களை வசப்படுத்துகின்றனர். ஆதலால் இல்லறத்தில் வாழும் பெண்கள் கணவர்களின் அன்பை இன்னிசையாலும் பெருக்கக் கூடும்.

இன்னிசையால் மனங் கனிவதுமன்றி மகிழ்ச்சியும் அடைகின்றது. அகமகிழ்ச்சியின்றி எவ்வேலையும் சரிவாச் செய்யொணாது. மனமகிழ்ச்சி யுண்டேல் முகமு மலரும். முகமலர்ச்சியைக் கண்டு மனமும் படியும்.

மனம் கனிவதும், மகிழ்ச்சியடைவதுமன்றி வேலை செய்து களைப்படையும் உடலும் உயிரும் இன்னிசையால் களைப்புத் தீர்ந்து சுகம் பெறும்.

இன்னிசைப்பழக்கம் ஆடவருக்கும் பெண்டிருக்கும் இன்றியமையாதவற்றி லொன்றாகும்.

காளைகளுக்குப் பரத்தையர்மீது நேசமுண்டாவதற்கு முக்கிய காரணம் அவர்களின் இன்னிசைப்பழக்கமே. அவ்வின்னிசைப் பழக்கம் இல்லறக்கிழவிகளிடமும் அமையுமெனின் வேசியர் நட்பு ஒழியும்; ஆடவரும் நல்வழிப்படுவர். இல்வாழ்வும் இன்பமாகும்.

# 49. நன்றி மறவேல்.

நன்றி என்பது நன்மை. அதனைச்செய்தவர் மீது அதனை ஏற்றவர் நல்லுணர்ச்சியோடு மறவாதிருத்தல் நலம். "நன்றி மறப்பது நன்றன்று" என்றார் திருவள்ளுவரும்.

நமக்கு நன்றி செய்பவர் யாவர்? அவர் தாய், தந்தை, குரு, அரசன், பெரியோர், தெய்வம் என்பவராவர்.

தாய் தான் ஈன்ற பிள்ளைக்குப் பாலூட்டி மையிட்டு உச்சி மோந்து, கொஞ்சி, முத்தி, தொட்டிலிட்டு, அருமருந்தே, மரகதமே, கண்வளராய் என்று தாலாட்டிச் சீராட்டி ஈ, எறும்பு மொய்க்காமலும், கடிக்காமலும், வெயில் படாமலும், காற்று அடிக்காமலும், மார்பிலும், மடியிலும், தோளிலும் அணைத்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துக் குற்றஞ்செய்யினும் அதனை நினையாமல் கடியாமல் அன்பு பெருகிப் பாலிப்பாள். பிள்ளை சான்றோனென உலகம் உரைப்பதைக் கேட்கவே என்றும் விரும்புவாள். நோய் நொடி உற்றுழி இரவும் பகலும் கண்விழித்து நோய்தீர்க்குஞ் சாதனங்களை நாடுவாள். தாய்க்குப் பிள்ளை செய்யும் நன்றி யாதெனில் தாய் தளர்ந்த காலத்தில் அவளை அன்புடன் பேணலும் போற்றலும் மகிழ்வித்தலுமே யாம்.

தந்தை தான் உழைத்துப் பிள்ளைக்கு உணவும் ஆடையும் கல்வியும் அளிப்பன். அன்றியும் பிள்ளை நல்லொழுக்கமுறப் பார்ப்பன். "துள்ளித் திரிகின்ற காலத்திலேயென் துடுக்கடக்கிப் பள்ளிக்கு வைத்தவனே தந்தையாகிய புண்ணியனே." தந்தை தன் பிள்ளையை அவையில் முன்னிருக்கச் செய்தலே பெருமை யென்றெண்ணுவன். ஆதலால் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", "தந்தை தாய் பேண்" என்ற வசனங்கள் ஏற்பட்டன. "தாய் சொ

விற் சிறந்த வாசகமில்லை'', "தந்தை சொல் மிக்க மந்திர மில்லை''. இருவரையும் பொறுமையுடன் பாது காத்தல் பிள்ளையின் கடமையாகும். அன்னார் மடியுங் கால் அவர்களுக்கு அந்தியக்கிரியைகள் செய்தல் நன்றி மறவாமை யாகும்.

குரு மாணவன் மீது அருள் நோக்கம் வைத்து அவனுக்குப் பரிபாகமுண்டாக வேண்டுமென்று முப்பொருளுண்மையை விளக்கிக் காட்டி மும்மலமும் நீங்கச் செய்வர். "குருவில்லாத வித்தையில்லை'' என்பது பொதுவசனம். ஆதலால் மாணவன் குருவினிடம் பத்தி செலுத்தவேண்டும். குருவைக்காணும் போதெல்லாம் வணங்கி உபசரிக்க வேண்டும். உற்றுழி உதவ வேண்டும். இவையே மாணவன் குருவிற்குச் செய்யும் நன்றியாகும்.

அரசன் "மாநிலங்காவல னென்பான் மன்னுயிர் காக்குங்காலை
தான தனுக்கிடையூறு தன்னாற் றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந் தீர்த் தறங்காப்பா னல்லனோ.''

அன்றியும், உயிர்க்குறுதி அரசன்செங்கோலே எனபர். ஆதலால் அரசனுடைய ஆணைக்குட்பட்டு "சக்கர நெறிநில்'' என்ற கட்டளையைக் கைக்கொண்டு நடத்தல் குடிகளினது கடமையாகும். அரசனுக்கு இடுக்கணுற்றுழி உதவுதலும் ஈடு படுதலும் குடிகள் செய் நன்றியாகும்.

பெரியோர் கல்வி யறிவு ஒழுக்கங்களிலும், பொருளிலும், உயர் பதவியிலும் சிறந்தவராவர். ஒழுக்கத்தால் சிறந்தவர் நல்லொழுக்கத்தைப் புகட்டுவர். கல்வியறிவாற் சிறந்தவர் நன்னெறி காட்டுவர். பொருளிற் சிறந்தவர் தக்குழி ஈவர். உயர்பதவியி லிருப்பவர் தக்க பதவியளிப்பர். மெய்யறிவு நிறைந்த துறவிகள் உலகப்பற்றை விடும் பருவத்தில் செந்நெறி யுணர்த்துவர். ஆதலால் பெரியாரைத் துணைக்கொள்ளல் வேண்டும். "பெரியவரை யடைந்தொழுகப்

பெறிற் றுறக்கம் புகலரிதோ'' என்றனர் புலவர். "ஒருநன்றி செய்தாரை யுள்ளத்தே வைத்துப் பிழை நூறும் சான்றோர் பொறுப்பர்'' என்றதனால், பெரியோரைப்பேணுதலும் அன்னாரைக் கண்டு பணிதலும் நன்றி யறிவுடைய மக்கள் கடமையே. "தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன்றெரிவார்.''

தெய்வம் படைத்துக் காத்து அளித்து அழித்து அருளுமாதலின் தெய்வ பத்தி வேண்டும், தெய்வ வணக்கம் வேண்டும், தெய்வத்தியானம் வேண்டும், தெய்வத்தைவாயாரப் புகழவேண்டும். "தலையே நீ வணங்காய்'' என்ற பதிகத்தைப் பன்முறை படித்து ஒவ்வொரு உறுப்பும் செய்வன செய்யுமாறு பழகவேண்டும், அங்ஙனம் செயின் வீடுறும் என்பதில் ஐயமில்லை என்பர் விழுமியோர். தெய்வத்தை வணங்காத கை உலக்கை யென்றும், பணியாத முடி நாற்று முடியென்றும், பாராதகண் நுங்குக் கண்ணென்றும், வாழ்த்தாத வாய் காளவாயென்றும், தலங்கட்குச் செல்லாதகால் பந்தற்காலென்றும், திருப்புகழைக் கேளாத செவித் துளை பருத்த நுகத்துளை யென்றும் கூறுவர். "தெய்வம் ஒருவனே யென்று முணர வல்லீரேல் அருவினைகளைந்துமறும்,'' "ஒன்றென்றிரு, தெய்வமுண்டென்றிரு'' "ஐயறிவறிந்தவை யடங்கினவரேனும் மெய்யறி விலாதவர்கள் வீடது பெறாரே'' என்றனர் புரவலர் போற்றும் பாவலரும்.

கைம்மாறு கருதிச்செய்யாத கடமைகளனைத்தும் கைம்மாறு எதிர்பார்ப்பனவாகா. ஆயினும் நல்லுணர்ச்சி யுடையார் செய்ந்நன்றி மறவார். "உப்பிட்டவரை உள்ளளவும் நினை'' என்பது ஆன்றோர் வாக்கு. "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம். உய்வில்லை செய்ந் நன்றிகொன்ற மகற்கு'' என்பதனால் நன்றி மறந்தவருக்கு உய்தியில்லை யென்பது திண்ணம்.

## 50. உயர்ந்த பதவி.

உயர்ந்த பதவி உழைப்பின் ஊதியமே யாகும். பதவி உயர உயர பணிவும் அதிகரிக்க வேண்டும். உயர்ந்த பதவியிலுள்ளார் மூவகை ஊழியரெனப்படுவர். முதலில் அரசருக்கு ஊழியர், இரண்டாவது புகழுக் கூழியர், மூன்றாவது தொழிலுக்கு ஊழியர். இம்மூவகை அடிமைக்குச் சுயாதீனம் கிடையாது. இஷ்டம்போல் அவர்கள் திரியவியலாது, இஷ்டம்போல் எதையும் செய்யலாகாது, இஷ்டம்போல் காலமுங் கழிக்க முடியாது. படிப்படியாக மேலேற வேண்டுகிறவர்கள் உழைத்தே யாகவேண்டும். உழைப்பின் பயனாகிய பதவியும் கைநழுவினாலும் நழுவலாம். உறுதி யில்லை. ஈனமான செயல்களால் உயர் பதவி பெறுவாருமுளர். பதவியினின்று நழுவுகின்றவர் கடையராகின்றனர். 'தலையினிழிந்த மயிரனையர்' பதவியுற்றார் பொது மக்களின் நன்மதிப்பிலே வாழ்பவராவர். தம் குற்றங்களைத் தாமே காணாதவர் தம் துயரங்களைத் தாமே காணுவர். உயர் பதவியினர் தம் தொழிலை முழுதுஞ்செய்ய நேரமின்றித் தயங்குகின்றவர் தம்முடல் மன சுகத்தைக் கவனியாதவராவர்.

உயர்ந்த பதவியிலுள்ளவர் நன்மையுந் தீமையுஞ்செய்ய வல்லுநராவர். நல்லெண்ணமும் நற்செய்கையுமே பதவிக்குப் பொருத்த முடையனவாகும். மாசற்ற மனதுடன் மாசற்ற நலமிழைத்தலே மனவமைதியைத் தரும்.

கடமை செய்து முடிப்பதில் பெரியோர்கள் நடையைப் பின்பற்றவேண்டும். பெரியோர் கைக்கொண்டனவற்றைக் கையாள வேண்டும்; விலக்கியனவற்றை விலக்கல் வேண்டும்; பிழைத்ததை ஒதுக்கவேண்டும். முன்னோர்களை வழிபடுவதுபோல் பின்னோர் தம்மையும் வழிபடுமாறு நடந்து

கொள்ளுதல் தகுதி. முன்னோர் குணாதிசயங்களில் எவை சிறந்தன, பின்னோர் செயல்களில் எவை தகுந்தன வென்பதை ஆராய வேண்டும்.

உயர் பதவியினர் நிகழ்ச்சிக் குறிப்பினை வரைந்து அதன்படி ஒழுகல் வேண்டும். குறிப்புளதேல் மக்களும் குறிப்பிற் கண்டபடி நிகழ்ச்சியை எதிர் பார்ப்பர். விதித்தன வற்றிற்கு விலக்கில்லை என்பது கடுமையாகும். விதித்ததினின்று விலக நேரிடின் அதன் காரணத்தை எடுத்து மொழிதல் நலம்.

உயர் பதவியிலுள்ளார் தங்கள் உரிமையைப் பிதற்றாமல் உரிமையை உறுதியாக நாட்டல் வேண்டும். தம்முரிமையை நாட்ட விரும்புகின்றவர் தாழ்ந்தவர் உரிமையையும் போற்றவேண்டும். தாழ்ந்த பதவியிலுள்ளவர் செய்ய வேண்டியனவற்றைத் தாமே தம் தலையிற் போட்டுக்கொள்ளாமல் அவற்றைச்செய்து முடிக்கும் முறைமையைக்காட்ட வேண்டும். உயர் பதவியினர் ஏனையர் துணையை உசாவ வேண்டும். சிறியவர்களிடமும் சில செய்திகளை யறியலாம். "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்றார் பொய்யில் புலவரும்.

உயர் பதவியினர் குறைகள் நால் வகைப்பட்டன. அவை காலந் தாழ்த்தல், கைக்கூலி வாங்குதல், கடிந்து மொழிதல், கசிந்து ஒழுகுதல் என்பனவாம். காலந்தாழ்த்தல் விலக்க விரும்புவோர் மாற்றமுரைப்போருக்குச் செவி சாய்த்தல் வேண்டும், செய்து முடிக்குங் காலத்தைக்குறிப்பிடவேண்டும். குறித்த வேளையில் கையிலுள்ள வேலையை முடிக்கவேண்டும். அவசியம் ஏற்படின் அதனுடன் வேறு வேலையையும் மேற்கொள்ளலாம்.

கைக்கூலி வாங்குதலைத் தடுக்க விரும்பின் தாமும் தம் வேலைக்காரர்களும் அதனை ஒழிப்பதுடன் கொடுப்பவர்கள் கொடுக்கலாகாதென்றும் தெரிவிக்கவேண்டும். உண்மையில் யோக்கியர்கள் முன்னுரைப்படி நடப்பார்கள். வெளிப்படையாக யோக்கியதையைப் பேசுகிறவர்கள் பின் கூறிய முறையை கைக்கொள்வார்கள். கைக்கூலி வாங்கும் குற்றத்தைக் கடிவதுமன்றி அதைப்பற்றி ஐயமும் நிகழவொட்டலாகாது. ஒருவழி கூறி மறுவழி நடப்பவர் மீது ஐயம் நிகழலாம். ஆனால் வழி மாற்றத்தின் காரணத்தைத் தெளிவாக விளக்க வேண்டும். பட்லர் டபேதார் முதலான ஊழியக்காரர் வழியாக கைக்கூலி கொடுத்தல் வழக்கம். அவ்வழக்கம் தம்மிடமிலதென்று மக்கள் உணரும்படி நடந்து கொள்ளல் தகுதி.

கடுமொழி கூறல் குற்றங்கண்ட வழி குற்றமாகாது. கண்டிப்பினால் அச்சமுண்டாகும். கடுமொழியால் வெறுப்புண்டாகும். உயர் பதவியினர் கண்டிக்கும்பொழுது சாதுவாகவும் பதமையாகவும் சரசம் பண்ணுமலும் ஒறுத்தல் வேண்டும்.

கசிந்தொழுகுதல் கைக்கூலி வாங்குதலினும் கேவலமானது. வேளா வேளைகளில் லஞ்சக்கம் (பரிதானம்) கிடைக்கும். பிறர் சிபார்சுகளுக்கும் கெஞ்சுதலுக்கும் மனங்கசிந்து இணங்கினால் கைக்கூலிகளும் வேண்டுகோள்களும் ஓயாமல் வந்துகொண்டேயிருக்கும்.

ஒருவனுடைய மனப்பாங்கை அறிய விரும்பினால் அவனுக்கு உயர்ந்த பதவியை அளிக்கவேண்டும். அப்பொழுது அவனுடைய பெருமையும் சிறுமையும் வெளிப்படும். கணிசம் நன்னடையின் பயனாகும். முன்னேற்ற விருப்பத்தினர் நடை தடபுடலாயிருக்கும். உயர் பதவியின் நடை தீர்ந்த அமைதியுள்ளதாயிருக்கும்.

உயர் பதவியினர் முன்னோரைப் பழித்தலாகாது. பழிப்பின் தம் நடையும் பின்னோரால் பழிக்கப்படுமென்பது திண்ணம். சகாக்களிருப்பின் அன்னாரை மரியாதை செய்தல் தகுதி. உயர் பதவியைப் பாராட்டல் இழுக்காகும். சாதாரண சம்பாஷணையில் ஒருவர் தம் உயர் பதவியை நினைத்துப் பேசலாகாது. பலருடனும் அளவளாவி யிருத்தல் நலம். உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கும்பொழுது தாம் வேறொருவர் என்று மக்கள் கூறுமாறு நடந்துகொள்ளுதலே பெருந்தகைமையாம்.

## 51. சுற்றுப் பிரயாணம்.

பிரயாணம் யாத்திரை ஒரு பொருட் கிளவிகளாம். சமயப் பற்றுடையார் தல யாத்திரை செய்வர். வேறுமுயற்சியுடையார் கப்பல் யாத்திரை போவர். காலிற்போவது பிரயாணம். கப்பலிற்போவது யாத்திரை. பிரயாணம் பலவிடங்களுக்குச் சென்று பார்க்கும் ஆசை பெரும்பாலாருக்குக் கிடையாது. ஆசையிருப்பினும் அதனை நிறைவேற்றப் பொருளிலரா யிருக்கின்றனர். முன் காலத்தில் பலவூர்களுக்குச் செல்லுதல் கஷ்டமாயிருந்தது. நல்ல நடைபாதை கிடையாது, வாகனம் கிடையாது, கள்ளர் பயமிகுதி. ஆதலால் காசியாத்திரை போனவர்கள் தாய் தந்தையர்களுக்கு உத்தரகிரியைச் செய்தே போனார்கள். திரும்பி வருவோமென்ற தீர்மானம் அவர்களுக்குக் கிடையாது. நடந்துபோனவர்களுக்கு யாத்திரை முடிவு பெறப் பல மாதங்கள் சென்றன. இப்பொழுதோ காசிக்கு இரு வாரத்தில் புகை வண்டி மார்க்கமாகப் போய் வரலாம்.

முன் காலத்து யாத்திரைக்கும் தற்கால யாத்திரைக்கும் வேறுபாடென்னை? பழங்கால யாத்திரிகர்கள் நடந்து போவதால் பல ஊரதிசயங்களையும் பலவகை மக்களை

யும் காண்பதன்றி பலவகை உணவுகளை உண்டு, பலவகை நீர்களைப்பருகித் திடமான உடலுடன் வந்தனர். தற்கால யாத்திரிகர்கள் சரக்கு மூட்டைகள் போன்று ஏறினவிட மிருந்து இறங்குமிடம்வரை ரெயிலில் தங்கி அன்னிய நாடு நகரம் பாராமலும் அன்னியமொழிகளை அறியாமலும் அன்னியர் நாகரிக ஒழுக்க வழக்கங்களைத் தெரியாமலும் வந்து சேருகின்றனர்.

வாலிபர்களின் பிரயாணம் அன்னருக்கு ஒருவகைக் கல்வியேயாம். முதியோர் பிரயாணத்தால் அநுபவவிருத்தியாகும். பல நாடுகளுக்குப் போகின்றவர்கள் அந்நாட்டு மொழிகளைச் சிறிதாயினும் கற்றே போகவேண்டும். வாலிபர்கள் வழிகாட்டிகளுடன் போகுதல் நலம். ஏனெனில் வழிகாட்டிக்கு நாட்டுமொழி தெரியும், முன் பழக்கமு முண்டு. அப்பழக்கத்தால் பார்க்கத்தக்க காட்சிகளிவை, பழகத்தக்கார் இவர், நாட்டு அப்பியாசங்கள் இவை என்று இயம்புவர். அதனல் வரும் ஊதியம் பல. பிரயாணிகள் பிரயாணத்தில் காண்பன, கேட்பன, அறிவனவற்றைக் குறிப்பேட்டி லெழுதவேண்டும். செல்லும் நாடுகளின் வரலாறுகளை விளக்கும் புத்தகங்களைக் கைவசம் கொண்டுபோதல் நலம். புத்தகங்களி லுள்ளனவற்றை ஆராயநேரிடும். ஒரு ஊரிலாவது நகரத்திலாவது அதிகநாள் தங்கலாகாது. ஓரூரில் தங்கும்பொழுது தங்குமிடத்தை அடிக்கடி மாற்ற வேண்டும். அங்ஙனமாற்றுவதால் அநேகர் பழக்கமுண்டாகும். பிரயாணியின் ஊராருள்ள இடங்களில் தாமதிக்கக் கூடாது. ஓரூரை விட்டகலும்போது அடுத்துத் தங்க விரும்பு மிடத்தி லுள்ளாருக்கு அறிமுகப்படுத்தும்படி கடிதங்கள் பெற்றுப் போதல் அநுகூலம். அறிமுகப்பத்திரத்தால் வசதிகள் ஏற்படும், கால சேமிதமு மாகும்.

பார்க்கப்போகும் ஊர்களிலுள்ள பெரியார்களைத் தெரிசிக்கவேண்டும். அப்பொழுது உண்மைக்கும் புகழுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமை வெளிப்படும். எங்கும் சண்டையிடலாகாது. மண், பெண், பொன் இவை பற்றியே கலகம் நிகழும். பிரயாணம் யாத்திரை முடிந்து ஊருக்கு வந்த பின் பல வூர்களில் பழகியவர்களுடன் எழுத்துப் போக்கு வைத்துக்கொள்வதால் பெரும்பய னுண்டு.

பல தேயம் பார்த்து வருபவர்கள் கவனிக்கத்தக்க தொன்றுளது. பல தேயத்தார் ஆடையையும் நடையையும் பாவிக்காமல் பேச்சின் சாதுரியத்தையும் மாதுரியத்தையும் பின் பற்றலாம். அவற்றைபபற்றித தாமே முன வந்து பேசிக் கதைகளைச் செப்புவதிலும் கேட்பனவற்றிற்கு நிதானமாக விடையளித்தலே நன்று, ஏனெனில் பிரயாணிகள் தம் ஊர் வழக்கங்களைப் பழித்து அன்னியர் நடைகளைப் பெருமையாகப்பேசி அவற்றைப் புகுக்க முயலுவர். அது மதியன்று. அன்னிய விடங்களில் தாம் கண்ட நல்லொழுக்கங்களை நம் நாட்டு ஒழுக்கங்களுடன் இணைத்துப் பரவச்செய்வதால் நன்மையே விளையும்.

அந்நியநாடுகளுக்குப் போவதால் பல நன்மைகளுள. ‘கிணற்றுத்தவளைக்கு நாட்டுவளப்பமேன்?’ அறியாமையால் தம்மைச் சிறப்பாக மதித்தலும் அன்னியரைப்பற்றி இழிவுரையாடலும், தப்பான எண்ணங்கொள்ளலும் மக்களின் இயற்கை. தற்சிறப்பும், பிறரிழிவும், தப்பெண்ணமும் பல தேசத்தாருடன் பழகுவதால் நீங்கும். உண்மையான நாகரிகமும், மதிப்பும், எண்ணமும் ஏற்படும். இவ்வாறு ஏற்படுவதால் போர்கள் விளையா. சமாதானமும் அமைதியும் நாட்டில் பொருந்தும்.

பிரயாணஞ் செய்வதால் கூவற்றேரைகன் உலகவாசிகளாகி வருவாய் விருத்தி, தன்னம்பிக்கை, விரிந்த ஒற்றுணர்ச்சி, பல இன்சுவைகள், எண்ணங்கள் பெருகி மதச் சேட்டைகள் குறுகி பாலினின்று நீரைப்பிரித்துப் பாலையே பருகும் அன்ன மொப்ப நல்லவைகளைப் பொறுக்கித் தம்மவையாகக் கொள்ளும் மனப்பாங்கு சிறப்புப் பெறும்.

## 52. செலவு.

பொருளீட்டலுந் றுன்பம், காத்தலுந் துன்பம், அழித்தலுந் துன்பம் என்பர் புலவர். "இன்னல் தரும் பொருளை யீட்டுதலும் துன்பமே, பின்னதனைப் பேணுதலுந் துன்பமே, அன்னது அழித்தலுந் துன்பமே, அந்தோ, பிறர்பால் இழத்தலும் துன்பமே யாம்." 'பொருடனைப் போற்றி வாழ்', சிக்கனத்தேடு', 'செட்டாக வாழ்', ஆகாறு அளவிட்டிதாயினும் போகாறு அகலாக்கடை, நன்றென்பர். வருவாயுட் கால் வழங்கு என்றனர் ஆன்றோர். பாதியை வழங்கு என்றனர் வேறொருவர். செல்வவானாக விரும்புகிறவன் மூன்றிலொரு பங்கை வழங்கி மீந்ததைச் சேமித்து வைத்தல் நலமென்றார் மற்றொருவர். கடனாளியாகுதல் எவ்வாற்றாலும் இழிவே. "கடன் கொண்டான் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்" "வளவனாயினும் அளவறிந் தழி (ளி) த்துண்.'

கணிசம் பற்றியும் அறவழியிலும் பொருள் செலவாகின்றது. சம்பாத்தியத்திற்கு ஏற்றவாறு பொருட்செலவை மட்டுப் படுத்துதல் கடமை. வளத்திற்குத் தக்கவாறு செலவு செய்தல் நலம்.

வேலைக்காரர்களின் ஏமாற்றத்திற்கும் வீண் செலவிற்கும் உட்படாமலும் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். தத்தம் நிலைமையை உற்றுப்பார்த்து அளித்தலும் அழித்த

னும் நலம். செலவாளிகளிற் சிலர் தங்களுடைய செலவுக் கணக்குகளைப் பார்ப்பதில்லை. அங்ஙனம் பாராதிருப்பது சோம்பலால் மட்டுமன்று. அதனைப் பார்ப்பதால் தங்கள் நிலைமை வெளிப்படும். அப்பொழுது தங்களுக்கு மன வருத்த முண்டாகு மென்கின்றனர். வரவிற்கு மிஞ்சின செலவு இருக்குமாயின் விரைவில் எளியவனாதல் திண்ணம். சத்திரமிட்டே புண்ணியாற்றுதல் நலமன்றோ.

தன் வரவுசெலவைப் பார்க்க அவகாசமுந் திராணியு மற்றவன் தக்க ஆளையாவது நியமித்துப் பார்க்கவேண்டும். கணக்குப் பார்ப்பவனை அடிக்கடி மாற்றினால் அவனுடைய அச்சமும் கள்ளமும் வெளிப்படும். செலவு ஒருவழியில் மிகுந்தால் ஒரு வழியில் குறுகவேண்டும். களியாட்டில் மிதமற்றால் துணிமணியிற் குறைவுபடவேண்டும். விருந்தில் செலவு பெருகினால் ஊர்திகளின் செலவு மிதமாகவேண்டும். எவ்வழியிலும் மிகுந்த செலவு செய்பவன் கெடுவது உறுதி. ஈல்குரவு வந்தெய்தும். கடனுக்காகச் சொத்தை விற்பவன் படபடவென்று விற்கலாகாது. ஆற அமர்ந்திருந்தே விற்க வேண்டும். அங்ஙனம் விற்பதனால் வரும் மீதம் கஷ்டம் நீங்கின பின் பழைய வழிகளிலே செலவாகுமாயின் வேறு வினை வேண்டாம். சிறிது சிறிதாக விற்பவனுக்குச் செட்டுத்தன முண்டாகும். அது செலவில் மட்டுமன்று, மனப் பாங்கிலும் உளதாகும்.

செலவு செய்யும்பொழுது இது சிறு செலவுதானே யென்று நினைக்கக்கூடாது; ஏனெனில் "பல துளி பெரு வெள்ளம்." செலவு இன்றியமையாததா என்று பன்முறை எண்ணவேண்டும். வீணான சிறு செலவுகளை நிறுத்தாமல் சிறுவருவாயைப் பெருக்க நினைத்தல் புல்லறிவாண்மையே யாம்.

ஒரு வழியில் முதன் முதலில் செலவு செய்ய நேரிடும் பொழுது எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும். ஏனெனில் அச்செலவு ஆண்டு தோறும் அடிக்கடி ஏற்படலாம்.

செலவாளி தன் சீரையுங் கெடுக்கிறான், தன்னைச்சேர்ந்த சனசமூகத்தையும் பாழ்படுத்துகிறான். ஆனால் உலோபியாயிருத்தல் தகாது. பாளையப்பட்டுகள் கடனாளிகளாகும் பொழுது சர்க்கார் அவற்றை நோக்கப் பார்வையிட்டு செலவைமட்டுப்படுத்தி சிலவாண்டுகளில் கடனைக் கொடுத்து மீதத்தை ஒப்பிக்கின்றார்கள். "பணம் பெருத்தால் ஒழுக்கத்திற் கிழுக்கு" என்பது மக்கள் வசனம்.

ஆராதூரி, அழிம்பு செய்கிறவன் நடுவு நிலைமையையும் காரணத்தையும் கவனிப்பதில்லை.

செலவு என்பது வருவாயைப் பொருத்துளது. செல்வவானுக்குச் சிறு செலவு, எளியவனுக்குப் பெருஞ்செலவாக இருக்கலாம்.

செலவு செய்ய நேரிடின் பணப்பையைத் தன் கையில் வைத்துக்கொள்ள வேண்டுமே யன்றி பிறர் வசம் ஒப்புவிக்கலாகாது.

தப்பான செட்டும் கூடாது. வேலைக்குத் தகுந்த கூலி யென்பதை உணர்ந்து தொழிலாளர்களுக்குக் கூலியைச் சுருக்காமல் காலா காலத்தில் கொடுக்கவேண்டும்.

அழிம்பு செய்பவன் எவராலும் மதிக்கப்பெறான். பணம் பிடுங்கித் தின்னும் மனிதக்கழுகுகளும் தம்முன்னே வீண் செலவைக் கண்டு நகைக்கும் 'கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும் உலகு' என்பதனால் வீண் செய்து கெட்டுப் போகாமல் செட்டாகச் செலவு செய்து பொருளுடைத்தாதல் சிறப்பாம்.

பாடுபட்டுத்தேடி வைத்த முன்னோர் சொத்தைப் பின் வரும் சந்ததியார் இரண்டுதலை முறைகளில் பாகஞ்செய்து கொள்ளும்போது குடும்பம் ஏழையாய்ப் போகின்றது. பாகம் பிரித்தலையொழித்து வருவாயைப்பங்கிட்டுக்கொண்டு தனித்தனியே மனைவிமக்களுடன் வாழ்வார்களானால் பூர்வ சொத்தும் உலகமதிப்புங் குறையாது. ஒவ்வொருவரும் தத்தம் மேற்செலவிற்காயினும் உழைக்க மனம்வரும். 'இலையெனின் ஊரடியான் புழுத்துச் செத்தான் என்றபடி ஒருவரும் உழைக்கமாட்டார்கள். பொதுக்காரியம் சீர்பெற நடவாது. ஆதலால் சொத்தைப் பிரித்தலே கூடாது. இதுபற்றியே முன்னோரிற் சிலர் சொத்தைத் தருமத்திற்கு எழுதிவைத்து தருமத்திற்கு வரும்படியி லொரு பாகத்தை விட்டு விட்டு அக்தார் பாத்தியதையைப் புதல்வர்களுக்குக் கொடுத்து மீதத்தைப் பிரித்துக்கொள்ள நிபந்தனை செய்து என்றுஞ் சொத்தழியாமல் பாது காத்துள்ளார்.

மற்றொன்று. மணவகையிலும் திதிமதியிலும் நகை நட்டுகளிலும் பணத்தை அமிதமாகச் செலவு செய்து குடும்பத்தைப் பஞ்சிகளாக்குகின்றனர். செட்டாகவும் மட்டாகவுஞ் செலவிட்டுத் தம் பின்னோர் நன்றாக வாழும்படி செய்தல் தமிழ் மக்களின் கடமையாகும்.

'செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது வயிற்றுக்கு ஈயப்படும்,' என்பதால் பசிப்பணி தீர்த்தல் முதலறமாயினும் கல்வியபிவிர்த்திக்காகத் தத்தம் வருமானத்தில் ஒரு பகுதியைக் கொடுத்தல் பேரறமாவதுமன்றி அழியாப் புகழாக்கும். இவ்வழியிற் செலவிடுதல் கைம்மாறு கருதாக் கடப்பாடாகும்.

"ஆன முதலி லதிகஞ் செலவானால்
மான மிழந்து மதிகெட்டுப் போனதிசை
எல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு."

## 53. குடியேற்றம்.

இந்தியாவில் முதன் முதலில் குடியேறினவர்கள் ஆரியர். அதன் பின்னர் முகமதியர்கள். இங்கிலாந்து தீவி லிருந்து வட அமெரிக்காவிலும், ஆஸ்ட்ரேலியாவிலும், ஆபிரிக்காவிலும் ஆங்கிலேயர் குடியேறினார்கள். ஐரோப்பா கண்டத்திலுள்ள பிரஞ்சுக்காரர், ஜெர்மானியர், டச்சுக் காரர் முதலானவர்கள் ஆபிரிக்காவில் பல பாகங்களில் வதிந்து வருகின்றனர். இந்தியாவிலிருந்து தற்காலத்தில் மடகாஸ்கர், தென் ஆபிரிக்கா, இலங்கை, பினங்கு, சிங்கப் பூர், மலேயா முதலான விடங்களுக்கு இந்தியர்கள் போய்ப் பணஞ்சம்பாதித்து மீளுகின்றனர்.

ஒரு நாட்டை விட்டு மற்றொரு நாட்டிற்குக் குடிகள் போவதற்குக் காரணம் என்னை? சனப்பெருக்கால் இருக்க இடமில்லாமலும், அருந்தப் போதுமான உணவில்லாம லும், மத சம்பந்தமான உபத்திரவத்தாலும், கைதிகளை வைப்பதற் கிடமில்லாமலும், வெற்றிச் செருக்கால் நாடுகள் பிடிக்கப் படுவதனாலும், வியாபார விருத்திக்காகவும், புதிய நாடுகளில் குடியேறுகின்றனர், குடியேற்றவும் படுகின் றனர்.

குடியில்லாத நாட்டில் குடியேறச் செய்தல் புண்ணிய மாம். இல்லையெனில் ஊரிலுள்ளவர்களை வெளியேற்ற நேரிடும். அது கொடிய பாவமாகும்.

புதிதாகக் குடியேறிய நாட்டில் முதலாண்டுகளில் இலாபம் எதிர்பார்க்கலாகாது. குடியேறுகின்றவர்கள் தம் நாட்டிலுள்ள கழிவு கட்டைகளாகவாவது தண்டனைவிதிக் கப்பெற்றவர்களாகவாவது இருக்கக்கூடாது. புதிய நாட் டில் சோம்பேறிகள் வேலை செய்யார்கள். கைதிகள் கொடுக் கும் உணவையுண்டு அயோக்கியர்களாகவும் துன்மார்க்கர்

களாகவும் துலங்குவார்கள். இருவகையாரும் சுயநாட்டின் பெருமையைத் தொலைப்பார்கள். ஆதலால் குடியேறுகின்றவர்கள் உழவர்கள், வேலையாட்கள், தொழிலாளிகள், செம்படவர்கள், தோட்டம் பயிரிடுகிறவர்கள், வேடர்கள், மருத்துவர்கள், சமையற்காரர்கள், இரண வைத்தியர்கள், உரொட்டி செய்பவர்கள் ஆகியவர்களாயிருத்தல் வேண்டும். அங்ஙனமாயின் பல தொழிலும் விருத்தியாகும். பல பொருள்களும் விளையும். சுகம் வளரும். நோய் சிகிச்சை பெறும்.

ஓரிடத்தில் குடியேறுகின்றவர்கள் அந்த இடத்தில் தாமாக விளைவன எவை யென்பதை ஆராயவேண்டும். அவற்றையே அருந்தவேண்டும். ஓராண்டில் விளையக்கூடிய உணவுப்பொருள்களை விளைவிக்கவேண்டும். அதிக உழைப்பில்லாமல் விளைவிக்கக் கூடியனவற்றையும் உண்டாக்க வேண்டும்.

முதன் முதலில் குடியேறுகிறவர்கள் கொண்டுபோகும் பண்டங்களைச் செட்டாகச் செலவு செய்யவேண்டும். ஏனெனில் அவை சமீப விடங்களிலகப்படா. தாம் செய்யும் பயிர் பச்சை பலன் தர நாட்செல்லும்.

மரமடர்ந்த காடுகளில் வீடு கட்டுவதற்கான மரக்கட்டைகளைப் போதுமானபடி தயாரிக்கலாம். ஆறுகள் ஓடும் பக்கங்களில் இயந்தரங்களை ஏற்படுத்தலாம். கடற்கரைகளில் உப்பு விளைவிக்கலாம். காடுகளில் கரி கிடைக்கும். கரிகளிலிருந்து கிலெண்ணெய் கிடைக்கும். சுரங்கங்கள் காணப்படுமாயின் பலவகை உலோகங்களை வெட்டி யெடுக்கலாம். இவை பொருள்தரக் கூடியன.

குடியேறிய நாடுகளில் சிலவாண்டுகள் வரை வரி, சுங்கம் ஏற்படுத்தல் கூடாது. சுங்கம் பல முயற்சிக்குரிய ஊக்

கத்தைக் கெடுக்கும். அதிகமாக ஆட்களைக் கொண்டுவந்து விட்டால் வறுமை யுண்டாகும். குடிசைகளைச் சதுப்பு நிலங்களிலும் ஆற்றோரங்களிலும் கட்டலாகாது. முதலில் சாமான்கள் போக்குவரத்திற்காக அவற்றை அவண் கட்டினாலும் பின்னர் அவற்றிற்குத் தூரமான இடங்களில் இருப்பிடங்களை அமைக்கவேண்டும். குடிகள் நோயுறாத படி உணவும் உப்பும் கைவசமிருக்க வேண்டும்.

நாகரிகமற்ற காடவர்கள் காணப்படின் அவர்கள் பிரியப்படக்கூடிய அற்ப விலையுள்ள பளபளப்பான கிணீர் கிணீரென்றொலிக்கும் சாமான்களைக் கொடுத்து அவர்களுடைய நட்பைப் பெறவேண்டும். அவர்களை நியாயமாகவும் மரியாதையாகவும் தண்ணளியுடனும் நடத்தவேண்டும். அங்ஙனஞ் செய்யும் பொழுதும் எச்சரிக்கையாக இருத்தல் நலம். ஏனெனில் அவர்கள் தம் ஊர்ப்பற்றினால் அன்னியரை விரோதிகளாக வெறுத்தல் கூடும். காடவர்கள் மீது அவர்களுடைய பகைவர்கள் படையெடுக்கும்பொழுது குடியேறியவர்கள் அவர்களுக்குத் துணையா யிருத்தலாகாது. அவர்க்கு இடுக்கண் விளைக்க வருபவரைத் தடுக்க உதவி செய்தல் முறைமையே. குடியேறினவர்கள் தாங்கள் தொழில் செய்யுமிடங்கட்கு அவர்களை அழைத்துச் சென்று தாமும் அவ்வாறே உழைக்குமாறு தூண்டுதல் செய்யலாம்.

குடியேற்ற நாடு செழிக்குங் காலத்தில் பெண்மக்களைத் தருவிக்கலாம். அவர்களைத் தருவிப்பதால் மக்கட்டொகை பெருகும். குடியேறிச்செழித்த நாட்டை எக்காரணம் பற்றியும் திடீரென்று கைசோரவிடலாகாது. ஏனெனில் அது தாய் நாட்டின் புகழுக்கு இழுக்காவதுமன்றி அனேகர் பலவித நிர்ப்பந்தங்கட் குள்ளாகி உயிரிழக்க நேரிடும்.

குடியேற்ற நாட்டை ஆட்சி செய்ய ஓரரசனும் சில மந்திரிகளுமே போதும். அடங்காதவர்களை அடக்குவதற்கு இராணுவச் சட்டங்களும் தேவை. அவர்கள் இஷ்டம்போல தொழுவதற்கு இடங்கொடுக்கவேண்டும். மந்திரிகள் பலர் கூடாது. சிலரிருத்தல் நலம். அச்சிலரும் மேன்மக்கள் குலமக்களா யிருக்கவேண்டுமே யன்றி வாணிபஞ் செய்பவர்களா யிருத்தல்கூடாது. ஏனெனில் பின்னவர்கள் தம் மூதியத்திலே கண்ணுங் கருத்துமா யிருப்பார்கள், நாட்டின் நன்மையைக் கவனிக்க மாட்டார்கள்.

குடியேறிச் செழித்துவரு மக்களை ஊக்கிப்பது ஆட்சியாளரின் கடமை. அவர்களை அந்நாட்டை விட்டு ஓட்டுவது அநியாயம். பிழைக்கப்போன விடத்திலும் பீடையா என்று அவர் துயருறுவர். அவர்கள் பட்ட பாடும் பாழ்படும்.

## 54. வர்த்தகம்.

உள்நாட்டில் விளைபொருள்களைப் பெற்று விற்று ஆதியம் பெறுந் தொழில் வாணிப மென்றும், தூரமான அயல் நாடுகளில் கப்பல் மார்க்கமாகச் சென்று வாணிபஞ்செய்தல் வர்த்தகமென்றும் வேறுபடுத்திக் கூறுதல் வழக்கம். வியாபாரம் பொதுச் சொல்லாகும். வர்த்தகத்திற்கு வேண்டுவன கப்பல்கள், விளைபொருள்கள், சரக்குகள், பாங்கிகள், துறைமுகங்கள், மண்டிகள், கிடங்குகள் ஆதியன.

முன்னாளில் உரோம் நகரத்திற்கு இந்நாட்டிலிருந்து முத்துகளும் வாசனைத் திரவியங்களும் ஓடங்களிற்கொண்டு போய் விற்கப்பட்டன வென்றும், மயிற்றோகை, வாலில்லாக் குரங்குகள், யானைத் தந்தங்கள், தேக்குமாக் கட்டைகள், மஸ்லின் போன்ற மெல்லிய துணிகள், மயிர்ப் போர்வைகள், ஈஜிப்த், பாபிலோனியா முதலான விடங்களுக்கு அனுப்பப்பட்டு விற்கப்பட்டன வென்றும் அவ்

விற்பனைகளால் இந்நாடு செழித்திருந்த தென்றும் அயல் நாடு வரலாறுகளும் இந்நாடு இதிகாசங்களும் முளங்கு கின்றன. 'கலஞ்சுரக்கும் நிதியம்'

முசிறி, உவரி, கொற்கை, காயல்பட்டினம், தொண்டி, காவிரிப்பூம்பட்டினம் போன்ற துறை முகங்கள் பல விருந் தனவென்று அறிகிறோம். அவற்றில் பல பொருள்கள் இறக்குமதி ஏற்றுமதி யாயின வென்பதும் வெளிப்படை. 'கப்பல் வந்தது மலர்ந்தது தொப்பை' என்ற பழமொழி வர்த்தகச் செழிப்பை விளக்கும். புகாரென்ற காவிரிப்பூம் பட்டினத்தைச் சிறப்பித்துக்கூறும் சிலப்பதிகாரத்தைப் படித்துப் பார்த்தால் சோழநாட்டின் வர்த்தக வளத்தை நன்கறியலாம்.

வர்த்தகத்திற்கு முக்கியமானது பணம். பணம் ஓரி டத்தில் தங்காது பலகை கடந்து உருண்டுகொண்டே போ கும். பணம் வட்டிக்குக் கிடைக்குமிடம் உண்டியற் கடை களே. பாங்கிகளும் பணவுதவி செய்கின்றன. பாடு படா மல் வட்டிப்பெருக்கால் பணக்கார ரானவர் தனவைசியரும் யூதர்களுமே. முன்காலத்தில் தூரதேசங்களுக்குப் பண மனுப்புவது கப்பல் மூலமாகத்தான். புயல்காற்று ஒரு பக் கம், கப்பற் கொள்ளைக் காரர்கள் ஒரு பக்கம், கப்பலை யுடைத்துப் பணத்தைப் பறிப்பதுண்டு இப்பொழுது அவ் விதமான தொல்லை யில்லை. அங்கங்கே யுள்ள பாங்கிகளில் 'பில்'படி பணத்தைச்செலுத்தலாம், வரவேண்டிய தொகை யைப் பெறலாம்.

கப்பல்கள் முற்காலத்தில் மரத்தினலாக்கப் பெற்ற மையால் மரக்கலங்களெனப் பட்டன. காற்றின் வேகத் தால் பாய் கட்டிய மரக்கலங்கள் கடல்மீது பறந்தன. காற் றிற்குப் பதிலாக நீராவி வழங்கப்பட்டது. மரக்கலங்கள்

நீராவிக் கப்பல்களாயின. நீராவிக் கப்பல்கள் இரும்புப் பட்டை தகடுகளால் ஆக்கப்பெற்றன. ஆவிக்குப்பின் மின் சாரம் உபயோகிக்கப்பட்டது. இப்பொழுது காற்றுதவி யின்றி விரைவில் கப்பல்கள் வந்து சேருகின்றன. ஒரு கப் பலில் வரும் சரக்குகள் எண்ணிறந்தன.

கிடங்குகளில் வந்த சரக்குகளும் அனுப்பவிருக்கும் சரக்குகளும் வைக்கப்பட்டிருக்கும். மண்டிகளில் தானிய வகைகள் வைக்கப்பெறும்.

துறைமுகங்களில் கப்பல்கள் வந்து தங்குவதற்கு வச திகளுள. சரக்கு வந்து இறங்குவதற்கு வாராவதிகள் அமைக்கப்பட்டுள. அம்மரப் பாலங்களின் மேல் தண்டு வாளங்கள் போடப்பட்டுள. அவை வழியாகப் புகைவண்டி கள் சரக்குக் கொண்டுபோய் துறைமுகங்களிலுள்ள தோ ணிகளில் கொக்குகள்போன்று நீண்டுயர்ந்து பாரஞ்சாம் பும் யந்திரங்கள் பலவற்றால் இறக்கும். கப்பல்களில் வந்த ச்ரக்குகளை அவற்றால் ரெயில் வண்டிகளில் ஏற்றப்படும். ஒவ்வொரு துறைமுகத்திலும் ஆயம் (சுங்கம்) வாங்கும் சாலையுளது. ஆயத்தால் வருமானம் மிகுதி.

வர்த்தகம் பரவுவதற்குத் தபாலும் தந்தியும் முக்கிய மாம். தபால்கள் மூலமாக சரக்குப் பட்டியல்களும் 'பில்' களும் வருகின்றன, போகின்றன. சரக்குகளின் விலை மாறுதல்களை அன்றன்றைக்கு அறியப்படுத்துவது தந்தி யே யாகும். கம்பியில்லாத் தந்தியும் வழக்கிலுளது.

வர்த்தகம் வளரவளர நடுவர்கள் (புரோக்கர்கள்) ஏற் பட்டுளர். மூலதனமில்லாமல் பணக்குவியல்கள் பெறுபவர் அவர்களே.

தற்காலத்தில் பருத்தி சீமைக்கு மிகுதியாக ஏற்றுமதி யாகின்றது. பலதரமான துணிகள் நூலாலைகளில் செய்யப்

பெற்று இந்நாட்டில் வந்து இறங்குகின்றன. எளியவிலைக்கு அகப்படும் சீமைத்துணியை ஓட்டிவிடுமாறு சுதேசிக் கதர் துணிகள் நெய்யப்பட்டு வருகின்றன. யந்திரத்திற்கு முன்னன்றோ இந்நாட்டுக் கைத்தொழில் பறந்தது!

உரோம் நகரினின்று பெரும் பணம் இந்தியாவிற்கு வந்ததைத் தடுப்பதற்காக அன்னவஸ்திராதிப் பிரமாணங்கள் ஏற்படுத்தப்பட்டனபோல, இந்நாட்டிலும் எவ்வுயர்ந்த நம்பர் நூல்களும் நூற்கலாம் என்றும் புறநாட்டுத்துணி வர்த்தகத்திற்குத் தண்டவரி ஏற்படவேண்டு மென்றும் விதிகள் இயற்றப்படாவிடின் இந்நாட்டுக் கைத்தொழில்கள் சிறவா. அதுவரை இந்தியா தேசம் பரதேசத்துணி முதலானவற்றிற்குச் சந்தையாகத்தா னிருக்கும்.

இரும்பும் நிலக்கரியும் மண் எண்ணெயும் பெருவாரி வர்த்தகமா யிருக்கின்றன. இவற்றால் ஏற்பட்ட பிரபுக்கள் பலருளர்.

வர்த்தகத்தால் வாழ்ந்தார் பலரெனின் தாழ்ந்தாரும் பலரே யாவர். சமய ஒற்றுமை வேற்றுமைகளால் ஓங்கலும் முறிவும் ஏற்படுகின்றன. 'வெனிஸ் வர்த்தகன்' என்ற நாடகத்தில் வர்த்தகக் கப்பல்கள் காலந்தாழ்த்து வந்ததனிமித்தம் அன்றோனியோ என்ற வர்த்தகன் சைலாக் என்ற யூதனிடம் பசானியோ என்னும் நண்பனுடைய நன்மணத்திற்காகக் கடன்பட்டு அரசமன்றத்தில் அவனால் வழக்குத் தொடரப்பட்டு கடனாளி அடைந்த வருத்தத்திற்கு அளவில்லை யன்றோ?

வர்த்தகஞ்செய்வார் முன்னறிவுளரா யிருத்தல் வேண்டும். அவர்கள் கண்ணுங் காதும் ஓயாமல் பார்த்தும் கேட்டும் வரவேண்டும். விலைகள் நாளுக்கு நாள் கூடுதலும் குறைதலு முளதாதலின் அரசனுக்குக்கண் செவியென்றாற் போல வர்த்தகனுக்கும் அஃதேயாம். இறக்குமதி அதி

கரித்தால் சொற்ப லாபம் போதுமென்று சரக்குகளை விற்க வேண்டும். இறக்குமதி குறைபடின் விலை உயருமென்பது வெளிப்படையே.

## 55. தமிழ்த் தொண்டர்.

தமிழுக்குத் தொண்டுசெய்த பல மக்களில் சயினரும் ஒரு வகையாரே. சயினர் இந்தியர்களே, இந்துக்களே. அவர்கள் பௌத்தர், சாக்கியர் என்பாருக்கு முந்தியவரெனக் கருதப்படுகின்றனர். சயினர் சாக்கியரென்ற வேறுபாடின்றி அன்னிய மதத்தினரனைவரும் சமணர் என்றே அழைக்கப்பட்டு வந்தனர். புறமதத்தினரை நாகரிகங் குறைந்தவ ரென்றே தமிழர் நினைத்தனர்.

இந்து சமயம் தற்காலத்தில் சைவம், வைணவம் இரண்டையும் குறிக்கும். இந்த இரண்டும் வேதத்தைப் பெருமைப்படுத்துகின்றன. வேள்விகளைப் புகழ்கின்றன.

பொதுப் பெயரால் வழங்கிவரும் இந்து சமயம் வேத வேள்விச் சடங்குகளைப் பாராட்டுவதால் அதனைக் கண்டித்து உண்மைச் சமயத்தை விளக்க வந்தது சமணசமயம்.

வேதம் பல கட்டுக் கதைகள் பொருந்திய சாதாரண நூலேயன்றி அதிகமாகப் பாராட்டத்தக்க நூலன்று என்பதே சமணர் கொள்கை. யாகமாகிய உயிர்வதை செய்யும் சடங்கையும் புலாலுண்பதையும் அது போற்றுகின்றபடியால் அது அத்துணை சிறந்த நூலன்று என்றனர் சமணர். வேதவேள்வியை நிராகரித்தமையால் வேதவேள்வியைப் போற்றுகின்றவர் சமணருக்குச் சத்துருக்களாயினர். உண்மைச் சைவத்தையும் வைணவத்தையும் மறந்த தமிழ் மக்கள் வேதவேள்வியர்களுடன் சேர்ந்தனர். இருவர் சனத்தொகையும் ஏராளமா யிருந்ததனால் சமணர் பலவிடங்களிலும் துன்புறுத்தப் பெற்றனர்.

கொல்லாமை, புலாலுண்ணாமை யாதிய விரதங்களைக் கைக்கொண்ட சமணர் தெய்வ வாதத்திலிடர்ப் படுதல் பய

னற்றது; மக்களுக்கும் மாக்களுக்கும் இயன்றவாறு உதவி செய்தலே பேரறமென்று போதித்தனர். குளம், கூவல், சோலை, சாலை, சத்திரம் இவற்றை ஏற்படுத்தி மாந்தரின் துன்பத்தை யகற்றுதலே தலையான கடமை யென்கின்ற பல அறநூல்களைத் தமிழில் இயற்றினர். மக்களும் அரசர்களும் அக்கொள்கைகளைக் கைக்கொண்டனர். இந்துமதச் சடங்குகளில் சிலவற்றைப் பௌத்தமும் சமணமும்நாளடைவில் ஏற்கத் தொடங்கின நிமித்தத்தால் இருசமயமும் உன்னத நிலையினின்று வழுவ ஆரம்பித்தன. அரசர்களும் ஏனையர்களும் அவற்றைப் பாராட்டுதலைக் கைவிட்டனர். கைவிடப்பட்ட நிலைமையில் இந்து அரசர்களுக்கு அமைச்சராயும், புரோகிதராயும், ஏவலாளராயும் இருந்து தொண்டூழியஞ் செய்த வேதவேள்வியர் சமணரையும் சமண சமயத்தையும் இகழ்ந்து பேசத்தொடங்கினர். பெருந்தொகை மக்களாகிய வைதிக சைவர் பலவிடங்களிலும் அவர்களை எதிர்த்து வாதஞ்செய்து வென்றனர்.

பதினெண் கீழ்க்கணக்கில் அடங்கிய பல நூல்கள் சமணரார்க்கிய நூல்களே. நாலடி நானூறு, பழமொழி நானூறு, ஏலாதி போன்ற சமண நூல்கள் ஒழுக்கத்தைச் சிறப்பிக்கின்றன. அவர்கள் மணிமேகலை யாதிய ஐம்பெருங் காப்பியங்களையும், நீலகேசி, சூளாமணி, சோதர காவியம் ஆதிய சிறுகாப்பியங்களையும், வீரசோழியம், நன்னூல் ஆதிய இலக்கண நூல்களையும், திவாகரம், பிங்கலந்தை ஆதிய நிகண்டுகளையும் தமிழுக்கு உதவியவர் சமணப் பெரியாரெனின் அவர் தொண்டின் சிறப்பை வியத்தல் மிகையாமோ? அன்னார் உண்மையான தமிழ் மக்களால் போற்றப் பாலரென்பது வெள்ளிடைமலை போலாம். உண்மை வரலாறு அறியாத அறிவிலிகளே அவரை இகழ்வர். என்ன பரிதாபம்!

---

மீரானியா பிரஸ், திருநெல்வேலி. 2—30.